LC
N.20
148429

கடவுள் துணை.

# Guru Remedies.



7 JUN 1920

# குரு மருந்துகள்.

அனுபவத்தில் சிறந்த பக்குவங்கள்.

இவை
கவர்ன்மெண்டு வைத்திய டிப்ளோமா பெற்று
லண்டன் கெமிக்கல் சொஸைட்டி மெம்பராக இருக்கும்

## டாக்டர் ஏ. மதுரம்.

என்பவரால் செய்யப்படுகிறது.

இம்மருந்துகள் ஐரோப்பா, அமெரிக்கா வைத்தியமுறைகளில் சொற்ப திட்டமானதும் ஆயுள்வேத சாஸ்திரத்தில் கிடைத்த நுட்பமான முறைகளும் அமைந்தது. இது சகல தேகக் கூறுகளும் பொருந்தக்கூடியதாய், பத்தியமில்லாமல் ராஜமுறை வைத்தியமாய் வியாதிகளைத் திட்டமாய் சவுக்கியம் பண்ணக்கூடிய ஸ்ரீதெய்வானுக்கிரகத்தால் அமைந்திருப்பதனால் எல்லோராலும் அருமையும் பெருமையுமாய் நன்குமதிக்கப்பட்டு வருகிறது.

கொடிய வியாதியாய் வருந்தும் மானிடர்களுக்கு சுலபத்தில் தெய்வ [illegible] கிடைப்பதுபற்றி எல்லோரும் ஆனந்திக்கின்றனர்.

Doctor A. MATHURAM,
**Govt. Medical Diploma-Holder,**
**(M. Ch. I. London.)**

Registered. (விலை அணா 1.)

...EDL. HALL PRESS, TRICHY.

LC
N20.
448429

## கவனிப்பு.

1. இந்த குருமருந்துசாலையிலுள்ள மருந்துகளைக் காண் சகல வியாதியையும் வைத்தியரில்லாமலே சுகம் பண்ணலாம். இ மருந்துகளை லண்டன், அமெரிக்கா, கெமிகல் சொஸைட்டிய இது குணமுள்ள மருந்தென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

2. இம்மருந்துகளால் ஏழை ஜனங்களுக்கும், சரியான வைத்தியரில்லாதவிடங்களில் துன்பப்படும் மானிடர்களுக்கும் ஆதாரமாயிருந்து எல்லோரும் மெச்சும்படி நன்மை செய்யலாம்.

3. மிகவும் அருமையும் பெருமையுமான வைத்திய செய்து பிரதிப் பிரயோஜனம் அடைய விரும்புகிறவர்களுக்கும் பெரும் கியாதியுடன் பதின்மடங்கு பிரயோஜனத்தையும் கொடு கத்தக்கது.

4. இம்மருந்துகளை உபயோகித்து ஆனந்திப்பவர் ஏராளம் ஏராளம்!!

5. வியாதியைப்பற்றி தெரிவிக்கும்போது வயது, திரேக ஸ்திதி, வியாதியின் ஆரம்பம் எப்படி, நடப்பு குணங்கள் என்ன இம்சையான குணங்கள் என்ன, இத்துடன் ஸ்திரீகள் ருதுக விஷ யமான குற்றங்கள் யாவையும் தெரிவிக்கவும். துர்நடக்கையால் என்னென்ன வியாதிகள் வந்தது என்றும், மலம் நீர் இவைகளின் நிறம், அளவு மற்ற குற்றங்களையும் தெரிவிக்கவும்.

வியாதியைப்பற்றி தெரிவிக்கும் விஷயம் கடைசி 71-ம் பக்கங்களில் பார்க்கவும். அதன்படி விபரம் தெரிவிக்கவும்.

6. குருமருந்துசாலை மருந்துதானென்று கவனித்து வாங் கவேணும்.

☞ டாக்டர் எ. மதுரம்,

குருமருந்துசாலை, திருச்சினப்பள்ளி.



கடவுள் துணை.

# குருமருந்துகள்.

## குருமாத்திரை.

புட்டி அணா 8. (30 மாத்திரைகள்).



இதை யாவரும் உபயோகம் பண்ணி நல்ல சுகம் பெறலாம்; சந்தேகமில்லை. மிகவும் அரு மையான மருந்து.

### 1. டோஸ் அல்லது அளவு விபரம்.

| | | | |
|---|---|---|---|
| பெரியவருக்கு | ... | ... | 2–3 மாத்திரை. |
| வயது 5–12 | ... | ... | 1–2 மாத்திரை. |
| பேருக்கு | ... | ... | $\frac{1}{4}$–$\frac{1}{2}$ மாத்திரை |

2. பத்தியம்:—அன்னப்பால்—ரவை—ஜவ்வரிசி—கார்ண்பிளவர் ரொட்டி வு கஞ்சி அல்லது ரசமும் அன்னமுமாய் சாப்பிடவேணும். லேசாய் ஜீரணம் ஆகக்கூடியதை உபயோகம் செய்யவேண்டியது. இதை உபயோகித்திருக்கும் சமயத்தில் குளிர்ந்தவாடைக் காற்றுக்கு எதிர்படா மலிருப்பது நல்லது.

### I. பெரியவர்களுக்கு.

***For Adults.***

அடியில் சொல்லப்போகிற நோய்களுக்கு ரொம்பவும் சிரேஷ்டமான மருந்து. இந்த வியாதிகளுக்கு குருமாத்திரையே சிரேஷ்டமான மருந்து என்று எல்லோரும் பரீக்ஷித்திருக்கின்றனர்.

குருமருந்துசாலை, திருச்சினப்பள்ளி.

11ஙல:24
சென்னை-600 008.

3. மலபந்தம்—சுகபேதிக்கு—பித்த சேஷ்டைகள்—அன்னதுவேஷ சகல காய்ச்சல்—தலைவலி—சகல ஜன்னி—சகல வாதம்—வாய்வு வெட்டு பிடிப்பு இவைகளுக்கு குரு மாத்திரையை அளவுப்படி எடுத்து உடைத்து அனுப்பானம் கிடையாவிட்டால் சிறு துண்டு வாழைப்பழத்தில் பொதிந்து விழுங்கிவிட்டால் சகலமும் சடுதியில் குணமாகும்.

## கவனிப்பு.

4. சகலவியாதிக்கும் வியாதிகண்டவுடனே இந்த குருமாத்திரை உபயோகம் பண்ணிவிட்டால் எவ்வித கடும் வியாதியும் பலம் செய்யாது. இதை அறிந்துகொள்ளுங்கள்.

5. **மலபந்தத்திற்கு**:—இது சிறந்தது. வேறே எந்த பேதி மருந்துகளிலும் மலம் கழியாதவர்களுக்கும் வெகு லேசாயும், சுகமாயும் கழிக்கின்றது. முரட்டு மருந்தல்ல. முழு டோஸ் சாப்பிட்டால் 7 தடவைக்குமேல் போகாது என்பது நிச்சயம். இது அருமையான மருந்தாக பாவிக்கப்பட்டு வருகிறது. கல்குடலையும் இளக்கி மலத்தைக்கழிக்கும். பேதியை நிறுத்தவேணும்போது புளித்த மோர் அல்லது எலுமிச்சம்பழச்சார் சாப்பிடவும். அல்லது டைகர் மாத்திரை 1 அல்லது 2 சாப்பிடவும்.

## II. சுகபேதிக்கு.

6. 2 அல்லது 3 மாத்திரைகளை ஒன்று இரண்டாக உடைத்து சிறு துண்டு வாழைப்பழத்தில் பொதிந்து அப்படியே வாயில் போட்டு விழுங்கிவிடவேண்டியது அல்லது நசுக்கி வெல்லத்தில் பொதிந்து வயவத்திருந்தும் சாப்பிடலாம்.—நன்றாய்ப்பேதியாகும்: நிறுத்தவேணும்போது புனர்பாக கஞ்சி நன்றாய் உப்பிட்டு சாப்பிடலாம்: மோரில் சாதத்தைக் கரைத்து குடிக்க நிற்கும்: எலுமிச்சம்பழச்சார் சாப்பிட்டாலும் நிற்கும். ஆயிரத்தில் ஒருவருக்கு பேதியாகாமலும் போகும். அதனால் யாதொரு கெடுதல் கிடையாது. மறுதடவை கூட்டி சாப்பிடலாம் அல்லது குறைத்து சாப்பிட்டால் நன்றாய் பேதியாகி சுகம் தரும்.

பத்திய விபரம்:—மேற்சொல்லப்பட்டபடியே.

7. **இரா மாத்திரை**:— குருமாத்திரையை இராமாத்திரையாகவும் உபயோகிக்கலாம். படுக்கப்போகும்போது அல்லது இலேசான இரவு சாப்பாட்டுக்கு முன் அரை மாத்திரை அல்லது ஓர் சிறு மாத்திரையை வாழைப்பழத்தில் பொதிந்து சாப்பிடலாம். விடியற்காலம் 1 அல்லது தடவை மலசுத்தியாகும். வேலைக்குப்போக யாதொரு தடையிராது.





8. உஷ்ணதேகிகள்:— சுகபேதிக்கு சாப்பிட்டால் அன்று சாயந்திரம் எலுமிச்சம்பழச்சாற்றில் சீனி சேர்த்து சாப்பிட உஷ்ணம் கொள்ளாது அல்லது நீராகாரமும் கொஞ்சம் மோரும் கலந்து சாப்பிடலாம்.

## III. ஜுரங்களுக்கு.

9. **சகல ஜுரங்களுக்கும் பொதுப்பிரயோகம்**:—முத்தக்காசு—பற்பாடகம்-சிறுகாஞ்சொரி சமூலமும்—சுக்கு-கோஷ்டம்-சீந்திற்கொடி—ஆடாதோடை இலை—கோரைக்கிழங்கு எல்லாம் சம இடையாய் (ஒரு ரூபா இடையாய்) எடுத்து கஷாயம் பண்ணி மூன்றில் ஒரு பங்கு கஷாயத்துடன் 1 அல்லது 2 குரு மாத்திரையும் சேர்த்துக்கொடுக்கவும்—மீதி இரு பங்கு கஷாயத்தை மதியம் சாயந்திரமாக 2 அல்லது 3 கஸ்தூரி மாத்திரையுடன் கொடுக்கவும் பின்பு அனுப்பானமட்டும் கொடுத்துவர 3 அல்லது 4 தினங்களுக்குள் அநேகமான காய்ச்சல்கள் எல்லாம் சுகம் ஆகும்-அவசியமானால் மூன்றாம் அல்லது நாலாம் நாள் திரும்பவும் குருமாத்திரை சேர்த்துக்கொள்ளவும், (மலசுத்தி அவசியமானால் மட்டும்).

10. **வாத ஜுரத்துக்கு**:— சுகபேதிக்கு கொடுக்கும் முறைப்படி கொடுத்தால் போதுமானது.

11. **பித்த ஜுரத்துக்கு**:—மேற்சொல்லிய பொது சரக்குகள் அரை பாகத்துடன் திராட்சைப்பழம்—கீழ்காய்நெல்லி—கறிப்பான் இலை இவைகள் ஒரு ரூபாய் இடையாகச் சேர்த்துக் கஷாயம் செய்து மேற்சொல்லிய படிக்கே மாத்திரையுடன் கொடுக்கவும்.

12. **சிலேஷ்ம ஜுரத்துக்கு**:—3 ரூபாய் இடை தூதுவளை-வெற்றிலை 2-(சுக்கு—திப்பிலி—மிளகு) திரிகடுகு மூன்றும் சேர்த்து 1 ரூபா இடை ஏலக்காய்-வெடியுப்பு இவைகள் ஒவ்வொன்றும் ரூபா இடையாக எடுத்து மேற்சொல்லிய பொது கஷாய சரக்குகளுடன் சேர்த்து கால் படி தண்ணீரில் அவித்து அரைக்கால் படியாக வற்றவைத்து இருத்து வைத்துக்கொண்டு அதில் 2 சங்களவாக எடுத்து அரை அல்லது 1 மாத்திரையும் சமயோஜிதமாய்ச் சேர்த்து முதல்வேளை காலையில் சாப்பிடவும். பின்பு கஷாயத்தைமட்டும் 2 சங்களவாக மதியம் மாலை சாப்பிடவும். பின்பு அனுப்பானத்தை மட்டும் 3 நாளைக்கு—2 கஸ்தூரி கார மாத்திரையுடன் காலை-மதியம்-மாலை சாப்பிடவும்.

**வேறொரு முறை**:— புளியங்கொட்டைப் பிரமாணம் சித்தரத்தை-2 மிளகு பிரமாணம் சூடகம்—அவ்வளவு சாம்பிராணி சேர்த்தரைத்து 6 சல்லி இடை தேன் விட்டு குளப்பி குரு மாத்திரையும் ஒன்று சேர்த்து 2 வேளையாக சாப்பிடவும். மறுநாள் இந்த அனுப்பானத்துடன் 2 அல்லது 3 கஸ்தூரி காரமாத்திரை சேர்த்துக் காலை—மாலை கொடுக்கவும். 4 அல்லது 5 தினம் வரை கொடுக்கலாம்.

**13. தாதுக்கள் மூன்றும் தொந்தித்த ஜுரத்துக்கு:**—பஞ்சலோகத்தையும் (பொன்-வெள்ளி-இரும்பு-செம்பு-ஈயம்) தேன் விட்டு உரசி அதில் மிளகு பிரமாணம் சுக்கு-திப்பிலி-மிளகு இவைகளையும் உரசி ஒரு சங்கு பிள்ளைப்பாலும் சேர்த்து இப்படி 2 அல்லது 3 வேளையாக 3 நாள் கொடுக்கவும். ஒவ்வொரு தடவை மருந்துடன் சுயம் கஸ்தூரி 2 நெல் பிரமாணம் சேர்க்கவும். **ஆகாரம் :** பிள்ளைப்பால்-அரிசி புனர்பாகம்-நிலப்பூச்சி சேர்த்து வேகவைத்த புனர்பாகம் கொஞ்சம் கொஞ்சமாய் அடிக்கடி கொடுக்கவேணும். மேற்சொல்லிய நிலப்பூச்சி கஷாயம் அடிக்கடி கொடுக்கவேணும். கோழிக்குஞ்சு சூப்பு செய்து 4 கரண்டியாக மணிக்கொருதரம் கொடுத்துக்கொண்டேயிருக்கவும்.

**14. இந்த மூவகை ஜுரங்களிலும்:**— வலி--குற்றல்--அடைப்பு தொண்டைக்கட்டு-கை கால் குளிர்ச்சி முதலானவை இருக்குமானால் குரு தைலத்தைத் தேய்த்து ஒத்தணமிடவேண்டியது. நிலப்பூச்சி கஷாயத்துடன் அல்லது 2 சங்கு பிள்ளைப்பாலுடன் 30 சொட்டு பட்டைச்சாருயம் அல்லது பிரூந்தி சேர்த்து மணிக்கொருதரம் கொடுக்கவும்.

**15. பொதுவான பத்தியம்:**—புனர்பாகம்–வென்னீர் சாதம்--ரவை ஜவ்வரிசி கஞ்சி ஆர்லிக்ஸ் மால்டெட் மில்க்கு-மெஸ்சில்ஸ் பூட்-ரொட்டியும் லேசான டீயும்-பாலும் பார்லி வாட்டரும்-[தனிப்பால் வேண்டாம்] பாலில் 1 அல்லது 2 கரண்டி மெஸ்சில்ஸ் பூட் சேர்த்துக்கொள்ளலாம். சிலருக்கு ரசமும் சாதமுமே அல்லது புனர்பாகம் குணத்துக்கு ஏதுவாயிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு பொருந்திய ஆகாரத்தையே கொடுக்கவேணும்.

**16. பழய ஜுரங்களுக்கு:**—சுக்கு--திப்பிலி-மிளகு ஏலக்காய் இவைகள் ஒரு பங்கு-கோஷ்டம்-கறையான்-நிலப்பூச்சி 2 பங்கு-அமுக்களா கிழங்கு 4 பங்கு சேர்த்து இடித்து சூரணித்து வைத்துக்கொண்டு சமன் நெய்யும் தேனும் சேர்த்து குளப்பி ஒரு கொட்டைப்பாக்கு பிரமாணம் எடுத்து அதற்குள் 3 கஸ்தூரி கார மாத்திரை வைத்து காலை-மாலை சாப்பிட்டு வரவேண்டியது. மலக்கட்டும் சம்மந்தப்பட்டிருக்குமானால் அந்த சமயங்களில் 1 அல்லது ½ குரு மாத்திரை சேர்த்துக்கொள்ளவேணும்.

**17. பழய ஜுரங்களுக்கு:**—குரு லேகியம் சாப்பிடலாம் (ஐடிடோ) என்ற ராயல் குடும்ப மருந்தை உபயோகிக்கலாம். (இது குருமருந்து சாலையில் கிடைக்கும்). வியாதியிருக்கும் குணங்களை தெளிவாய் எழுதினால் மருந்துகள் செய்து அனுப்பலாம்.

**18. முறைக்காய்ச்சலுக்கு:**—மலே ஜுரத்துக்கு:—முன் சொல்லிய பொது கஷாயமும்--ஒரு புளியங்கொட்டைப் பிரமாணம் வெடியுப்பும்--2 புளியங்கொட்டைப் பிரமாணம் இந்துப்பும்-ஒரு குரு மாத்திரையும் சேர்த்து காலையில் சாப்பிட்டு மாலையில் அனுப்பான மட்டும் சாப்பிட்டு வர 2 தினத்தில் சுகம் வரும்.





**வேறு முறை:**—காச்சல் இருக்கும்போது மேற்சொல்லிய பொது கஷாயத்தையும்-காச்சல் விட்டிருக்கும் சமயம் காச்சல் மாத்திரையையும் சாப்பிட குணமுண்டாகும். **குருமருந்துசாலை காச்சல் திராவகம் எல்லாவற்றிலும் அருமையானது.**

**வேறுமுறை:**--கோஷ்டம்-மிளகு-நிலவேம்பு-கறிப்பான்தழை இவைகளை ஒரு ரூபாய் இடையை நசுக்கி கஷாயமாக்கி அதில் குரு மாத்திரை 2 சேர்த்து கொடுக்கவும். பின்பு 2 தினம் காலை-மாலை அனுப்பானம் மட்டும் கொடுக்கவும். அல்லது காச்கல் திராவகம் ரொம்ப மேலானது.

**வேறுமுறை:**— குரு மாத்திரை 1 அல்லது 2ம் எருக்கலம் இலை கால் அணு அல்லது அரை அணு அகலம் இலையும் நசுக்கி சிறு துண்டு வாழைப்பழத்தில் பொதிந்து சாப்பிடவும். சாயந்திரம் மேற்சொல்லிய அளவு எருக்கலம் இலையும் 20 மிளகும்-கொட்டைப்பாக்களவு வேப்பம் இலையையும் சேர்த்து அறைத்து விழுங்கிவிடவும். பின்பு அனுப்பானம் மட்டும் காலை-மாலை ஜுரம் இல்லாத சமயத்தில் சாப்பிட 2 தினத்தில் குணமுண்டாகும். அவசியமானால் குரு மாத்திரையை 2 அல்லது 3 நாள் வரை காலை வேளை மருந்துடன் சேர்த்துக்கொள்ளலாம்.

## மேற்பக்குவம்.

வயற்றின் விலாப்பக்கங்களில் 2 சல்லி மிளகும்-2 கை கடுகும்-2 புளியங்கொட்டையளவு குரு தைலம் சேர்த்து அரைத்து கனதியாய் ஒரு சாண் சவுக்க துணியில் தடவி பற்று போடவும் இந்த மேற்பக்குவம் சகல ஜுரங்களுக்கும் குணமுள்ள முறை என்று அறியவும். பிடிவாதமான ஜுரத்துக்கு ரொம்ப குணமானது.

**முறைக்காய்ச்சல்-மலே ஜுரங்களுக்கு :**— மேற்சொல்லிய ஏதாவது ஒரு முறை அல்லது எல்லா முறைகளையும் மாற்றி மாற்றி செய்யலாம்.

## IV. பித்தசம்பந்த ரோகங்களுக்கு.

**19. மலக்கட்டுடன் பித்தரோகம் இருக்குமானால்:**—குரு மாத்திரையை வாரம் ஒருமுறை சுகபேதிக்கு சாப்பிட்டு கழிக்கவேணும். அதிக மலப்போக்கு அவசியமில்லையானால் பைல் பில்ஸ் (பித்த மாத்திரை) அல்லது அரை குருமாத்திரை அல்லது கோரோஜனை சேர்ந்த ஹெல்த் பில்லை இரவில் இரா மாத்திரையாக உபயோகிக்க குணமுண்டாகும். பித்தத்தை கழிக்க இதற்குமேல் மாத்திரைகள் கிடையாது என்பது திண்ணம். ஐரோப்பியதேச அரண்மனை மருந்துகளில் ஐடிடோ-லாக்சோலின் உபயோகிக்கலாம். மற்ற நாட்களில் அடியிற்சொல்லிய **பித்த துவையல்** செய்து சாப்பிடவும்.

13. **தாதுக்கள் மூன்றும் தொந்தித்த ஜுரத்துக்கு:**—பஞ்சலோகத்தையும் (பொன்-வெள்ளி-இரும்பு-செம்பு-ஈயம்) தேன் விட்டு உரசி அதில் மிளகு பிரமாணம் சுக்கு-திப்பிலி-மிளகு இவைகளையும் உரசி ஒரு சங்கு பிள்ளைப்பாலும் சேர்த்து இப்படி 2 அல்லது 3 வேளையாக 3 நாள் கொடுக்கவும். ஒவ்வொரு தடவை மருந்துடன் சுயம் கஸ்தூரி 2 நெல் பிரமாணம் சேர்க்கவும். **ஆகாரம்:** பிள்ளைப்பால்-அரிசி புனர்பாகம்-நிலப்பூச்சி சேர்த்து வேகவைத்த புனர்பாகம் கொஞ்சம் கொஞ்சமாய் அடிக்கடி கொடுக்கவேணும். மேற்சொல்லிய நிலப்பூச்சி க்ஷாயம் அடிக்கடி கொடுக்கவேணும். கோழிக்குஞ்சு சூப்பு செய்து 4 கரண்டியாக மணிக்கொருதரம் கொடுத்துக்கொண்டேயிருக்கவும்.

14. **இந்த மூவகை ஜுரங்களிலும்:**— வலி--குற்றல்--அடைப்பு தொண்டைக்கட்டு-கை கால் குளிர்ச்சி முதலானவை இருக்குமானால் குரு தைலத்தைத் தேய்த்து ஒத்தணமிடவேண்டியது. நிலப்பூச்சி கஷாயத்துடன் அல்லது 2 சங்கு பிள்ளைப்பாலுடன் 30 சொட்டு பட்டைச்சாராயம் அல்லது பிராந்தி சேர்த்து மணிக்கொருதரம் கொடுக்கவும்.

15. **பொதுவான பத்தியம்:**—புனர்பாகம்-வென்னீர் சாதம்--ரவை ஜவ்வரிசி கஞ்சி ஆர்லிக்ஸ் மால்டெட் மில்க்கு-மெஸ்லில்ஸ் பூட்-ரொட்டியும் லேசான டீயும்-பாலும் பார்லி வாட்டரும்-[தனிப்பால் வேண்டாம்] பாலில் 1 அல்லது 2 கரண்டி நெஸ்லில்ஸ் பூட் சேர்த்துக்கொள்ளலாம். சிலருக்கு ரசமும் சாதமுமே அல்லது புனர்பாகம் குணத்துக்கு ஏதுவாயிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு பொருந்திய ஆகாரத்தையே கொடுக்கவேணும்.

16. **பழைய ஜுரங்களுக்கு:**—சுக்கு--திப்பிலி-மிளகு ஏலக்காய் இவைகள் ஒரு பங்கு-கோஷ்டம்-கறையான்-நிலப்பூச்சி 2 பங்கு-அமுக்களா கிழங்கு 4 பங்கு சேர்த்து இடித்து சூரணித்து வைத்துக்கொண்டு சமன் நெய்யும் தேனும் சேர்த்து குளப்பி ஒரு கொட்டைப்பாக்கு பிரமாணம் எடுத்து அதற்குள் 3 கஸ்தூரி கார மாத்திரை வைத்து காலை-மாலை சாப்பிட்டு வரவேண்டியது. மலக்கட்டும் சம்மந்தப்பட்டிருக்குமானால் அந்த சமயங்களில் 1 அல்லது ½ குரு மாத்திரை சேர்த்துக்கொள்ளவேணும்.

17. **பழைய ஜுரங்களுக்கு:**—குரு லேகியம் சரப்பிடலாம் (ஐடிடோ) என்ற ராயல் குடும்ப மருந்தை உபயோகிக்கலாம். (இது குருமருந்துசாலையில் கிடைக்கும்). வியாதியிருக்கும் குணங்களை தெளிவாய் எழுதினால் மருந்துகள் செய்து அனுப்பலாம்.

18. **முறைக்காய்ச்சலுக்கு:**—**மலை ஜுரத்துக்கு:**—முன் சொல்லிய பொது கஷாயமும்--ஒரு புளியங்கொட்டைப் பிரமாணம் வெடியுப்பும்--2 புளியங்கொட்டைப் பிரமாணம் இந்துப்பும்-ஒரு குரு மாத்திரையும் சேர்த்து காலையில் சாப்பிட்டு மாலையில் அனுப்பான மட்டும் சாப்பிட்டு வர 2 தினத்தில் சுகம் வரும்.





20. **பித்த துவையல்:**— இஞ்சி-ஜீரகம்-சதகுப்பை-அதிமதுரம்-கீழ்காய்நெல்லி இவைகள் தனித்தனி பலம் ½-கொத்தமல்லி பலம் 1-கஸ்தூரி காரமாத்திரை 10-இவைகளை இவைகளுக்கு சரிபங்கான திராக்ஷைப்பழம் சேர்த்து 5 எலுமிச்சம்பழச்சார் விட்டு அரைக்கவும், அத்துடன் 2 பலம் தேனும் சேர்த்துக்கொள்ளவும், இதுவே துவையல் இந்த துவையலை தினம் 2 அல்லது 3 வேளை சாப்பாட்டுக்குப்பின் 1 அல்லது 2 சுண்டக்காய்ப் பிரமாணம் சாப்பிட்டுவரவும். இந்த துவையலை செய்ய சிரமம் எடுக்க பிரியப்படாதவர் குருமருந்துசாலை லீவர் டிராப்ஸ் என்ற மருந்தைச் சாப்பிட்டு வந்தால் நல்ல சுகம் காணலாம்.

21. **பித்த மயக்கம்--நெஞ்சு துடிப்பு:**— வாய் கசப்பு--வாய் நீர் ஊரல்-இவைகளுக்கு மேற்சொல்லிய மாத்திரைகளும் துவையலுமே தகுந்த குணமுண்டாக்கும். குரு ஸ்நான தைலத்தையும் உபயோகம் செய்துவரவும்.

22. **பித்த தலை வலி உமட்டல்--பித்தம் கக்கல்:**— இவைகளுக்கு மேற்சொல்லிய ஏதாவது ஒரு முறையைச் செய்தால் குணம் தரும். குரு தைலத்தை தலைவலிக்கு உபயோகிக்கவும். பித்த சம்பந்தமில்லாத குணங்களாயிருந்தால் குணந்தராது. அப்போது திரேகத்துக்குச்செய்யும் சகல குணத்தையும் புஸ்தகத்தில் சொல்லிய கேள்விகளுக்கு விபரமாய் எழுதவும்.

## V. பைத்தியத்திற்கு.

23. **பைத்தியத்திற்கு:**—தினம் காலைதோறும் இரண்டு மாத்திரையை வாழைப்பழத்தில் பொதிந்து விழுங்கச் செய்யவேண்டியது. பைத்தியங்கள் ஆச்சரியமான விதமாய்க்குணமாகும். ஒருவாரம் 10 நாள் பிரயோகிக்கவும்.

வியாதி கோஷ்டமாயிருந்து விழுங்கச்செய்வது கஷ்டமாயிருந்தால், இரண்டு மாத்திரையை ஒரு அவுன்ஸ் கொமட்டிக்காய் சாற்றில் கலக்கி ஆசனத்தின் வழியாய் செலுத்தவேண்டியது. சிலருக்கு ஒரே தடவை பிரயோகத்தினாலும் சிலருக்கு இரண்டு முறை பிரயோகத்தினாலும் ஆச்சரியமான விதமாய் குணமாகின்றது.

சுகமான பின்னும் பித்த துவையலையும் எங்கள் குருமருந்துசாலை முறைப்படி பித்தரோகங்களுக்கு சொல்லிய மாத்திரைகளையும் அடிக்கடி உபயோகம் செய்வது மிக்க நல்லது. வியாதி திரும்ப உண்டாகமாட்டாது.

24. **சித்தபிரமை-அமைதல் பைத்தியத்துக்கு:**— மேற்சொல்லிய மாத்திரைகளையும்—துவையல்—லீவர் டிராப்ஸ் இவைகளை உபயோகம் செய்துவந்தால் குணப்படும் இனிப்பும் புளிப்பும் சேர்ந்த பழவர்க்கங்களை மிகுதியாய் உபயோகம் செய்யவும். மூளைக்கு பெலமுண்டாக்கும் மருந்துகள் சாப்பிடவேணும். எழுதினால் அனுப்பலாம்.

**வேறு முறை:**—காச்சல் இருக்கும்போது மேற்சொல்லிய பொது கஷாயத்தையும்-காச்சல் விட்டிருக்கும் சமயம் காச்சல் மாத்திரையையும் சாப்பிட குணமுண்டாகும். **குருமருந்துசாலை காச்சல் திராவகம் எல்லாவற்றிலும் அருமையானது.**

**வேறுமுறை:**—கோஷ்டம்-மிளகு-நிலவேம்பு-கறிப்பான்தழை இவைகளை ஒரு ரூபாய் இடையை நசுக்கி கஷாயமாக்கி அதில் குரு மாத்திரை 2 சேர்த்து கொடுக்கவும். பின்பு 2 தினம் காலை-மாலை அனுப்பானம் மட்டும் கொடுக்கவும். அல்லது காச்சல் திராவகம் ரொம்ப மேலானது.

**வேறுமுறை:**— குரு மாத்திரை 1 அல்லது 2ம் எருக்கலம் இலை கால் அணு அல்லது அரை அணு அகலம் இதையும் நசுக்கி சிறு துண்டு வாழைப்பழத்தில் பொதிந்து சாப்பிடவும். சாயந்திரம் மேற்சொல்லிய அளவு எருக்கலம் இலையும் 20 மிளகும்-கொட்டைப்பாக்களவு வேப்பம் இலையையும் சேர்த்து அறைத்து விழுங்கிவிடவும். பின்பு அனுப்பானம் மட்டும் காலை-மாலை ஜுரம் இல்லாத சமயத்தில் சாப்பிட 2 தினத்தில் குணமுண்டாகும். அவசியமானால் குரு மாத்திரையை 2 அல்லது 3 நாள் வரை காலை வேளை மருந்துடன் சேர்த்துக்கொள்ளலாம்.

### ☞ மேற்பக்குவம்.

வயற்றின் விலாப்பக்கங்களில் 2 சல்லி மிளகும்-2 கை கடுகும்-2 புளியங்கொட்டையளவு குரு தைலம் சேர்த்து அரைத்து கனதியாய் ஒரு சாண் சவுக்க துணியில் தடவி பற்று போடவும். இந்த மேற்பக்குவம் சகல ஜுரங்களுக்கும் துணையுள்ள முறை என்று அறியவும். பிடிவாதமான ஜுரத்துக்கு ரொம்ப குணமானது.

**முறைக்காய்ச்சல்-மலை ஜுரங்களுக்கு :**— மேற்சொல்லிய எதாவது ஒரு முறை அல்லது எல்லா முறைகளையும் மாற்றி மாற்றி செய்யலாம்.

## IV. பித்தசம்பந்த ரோகங்களுக்கு.

19. **மலக்கட்டுடன் பித்தரோகம் இருக்குமானால்:**—குரு மாத்திரையை வாரம் ஒருமுறை சுகபேதிக்கு சாப்பிட்டு கழிக்கவேணும். அதிக மலப்போக்கு அவசியமில்லையானால் பைல் பில்ஸ் (பித்த மாத்திரை) அல்லது அரை குருமாத்திரை அல்லது கோரோஜனை சேர்ந்த ஹெல்த் பில்சை இரவில் இரா மாத்திரையாக உபயோகிக்க குணமுண்டாகும். பித்தத்தை கழிக்க இதற்குமேல் மாத்திரைகள் கிடையாது என்பது திண்ணம். ஐரோப்பியதேச அரண்மனை மருந்துகளில் ஸிடிடோ-லாக்சோவின் உபயோகிக்கலாம். மற்ற நாட்களில் அடியிற்சொல்லிய பித்த துவையல் செய்து சாப்பிடவும்.





25. மகோதரம் வயற்றில் நீர்கட்டு:—நீரைத் தூக்கிக்கொள்வதினால் உண்டாகும் சகல வீக்கத்துக்கும் 2 கடுக்காயின் தோடு-நீர்முள்ளி இலை 2 கொத்து-நெருஞ்சில் இலை கொடி முள்ளுடன் ஒரு பிடி இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து அரைக்கால்படி வெள்ளாட்டு நீர் சேர்த்து அரைப்படி தண்ணீருடன் கஷாயமாக்கி கால்படியாக வற்றவைத்து மூன்றில் ஒரு பங்கு கஷாயத்தில் குருமாத்திரை உரைத்து அல்லது மாத்திரையை உடைத்து காலையில் விழுங்கிவிடவும், மதியம்-சாயந்திரம் தனி கஷாயத்தை மட்டும் கொடுக்கவும். மறுநாள் ஹெல்த் பில்ஸ் 2 சேர்த்து கஷாயத்துடன் காலையில் கொடுக்கவும். இருபங்கு கஷாயத்தை மதியம்-சாயந்திரம் கொடுக்கவும். 3 அல்லது 4 நாளில் சுகப்படும். வீக்கம் சற்று வற்றியபின் குருமருந்துசாலைக்கு எழுதவும். வேறு கடப்பு மருந்துகள் செய்தனுப்பலாம்.

## VI. சகல வாய்வுக்கும்.

26. வெள்ளைப்பூண்டு உறித்தது பலம் 1–வெடியுப்பு புளியங்கொட்டைப் பிரமாணம்-நயம் பெருங்காயம் ஒரு கடலைப்பிரமாணம்-இவைகளை எல்லாம் சேர்த்து தட்டி வென்னீர் விட்டு சார் எடுத்து 2 குரு மாத்திரையைப் பழத்தில் பொதிந்து விழுங்கி இந்த சாரை சாப்பிடவும். மலவிர்த்தியாகி குணம் தரும்.

27. நாள்பட்ட வாய்வாயிருந்தால் 3 அல்லது 4 கஸ்தூரி கார மாத்திரை-சாரணைவேர் பெருவிரல் அளவு-கருவேப்பிலை ஈர்க்கு 10-முருங்கை ஈர்க்கு 10–ஜீரகம்–ஓமம்–இந்துப்பு–ஒவ்வொன்றும் 1 சல்லி இடை–மிளகுப்பிரமாணம் பெருங்காயம்-எலுமிச்சம்பழம் ஒரு மூடியின் சார் இவைகளைச்சேர்த்து ஒன்றரை சேர் தண்ணீர் விட்டு கால் சேராக வற்றவைத்து கற்கண்டு போட்டு இரவில் படுக்கப்போகும்போது சாப்பிடவும். மலவிர்த்தி கட்டுப்பட்டால் வாரத்துக்கு 2 நாள் குருமாத்திரை அல்லது பைல் பில்சை இராமாத்திரையாக சாப்பிடவும். மலக்கட்டும் நிவர்த்தியாகி சுகமுண்டாகும்.

28. **குரு லிவர் டிராப்ஸ்:**—சாப்பிட்டால் அநேகமான வாய்வுகள் தீரும். குருமருந்துசாலைக்கு எழுதவும்—**மலையாளம் வாய்வு சூரணம்** இதுவும் வாய்வுகளுக்கு ஓர் அருமையான மருந்து.

29. **அண்ட நோய்க்கு:**—வலி அதிகமாயிருக்குமானால் குரு மாத்திரை 2 எடுத்து ஒரு களற்சிபருப்பை அறைத்து அதற்குள் பொதிந்து காலையில் சாப்பிடவும். பேதியாகும், சாயந்திரம் கொதிக்கிற ஒரு சேர் பசுவின் பாலில் ஒரு பலம் வெள்ளைப்பூண்டை நசுக்கி கலக்கி சாப்பிடவேண்டியது. மறுநாள் காலையில் காலை அனுப்பானத்தையும், மாலையில் மாலை அனுப்பானத்தையும் 2 அல்லது 3 நாள் சாப்பிடவும். அவசியமானால் குரு மாத்திரையை 2 நாள் காலையில் சாப்பிடலாம்.

30. வெளிப்பக்குவம்:— இலுப்பை அறப்பை அரைத்து வைத்து கட்டலாம். அல்லது விளக்கெண்ணெயில் 2 அல்லது 3 களற்சி பருப்பும், 10 குருமாத்திரையும் சேர்த்தரைத்து சுடவைத்து பீஜத்தில் தடவி எருக்கலம் பழுப்பை மேல்வைத்து கட்டவும். இவைகளைக்கட்டுமுன் குருதைலம் சாம்ப பூசிக்கொள்வது உத்தமம் அல்லது குருமாத்திரை 5-ம் போதுமான குரு தைலமும் சேர்த்து முதலில் விரையில் தடவி அரைமணி கழித்து குரோசாணி ஓமம் 1 பலத்தை அரைத்து கட்டவும். இப்படி 2 அல்லது 3 நாள் வரை இப்பக்குவங்களை கட்டவும்.

வேறு பக்குவம்:— வென்னீரில் விரையை அரை மணி நேரம் ஊறவைத்து பின்பு குரோசாணி ஓமம் 1 பலம்-புகையிலை ஒரு விரல் நீளத் துண்டு-குருதைலம் 1 புளியங்கொட்டைப் பிரமாணம் சேர்த்தரைத்து பூசி பஞ்சுவைத்து கட்டவும். இப்படி தினம் 2 அல்லது 3 வேளை கஷ்டத்துக்கு தக்கதாக செய்யவும்.

இப்புஸ்தகத்தில் சொல்லியபடி செய்வீர்களாகில் எவ்வித கடுமையான வலியும்-விரை வாய்வும் சீக்கிரத்தில் குணப்படும்.

31. நாட்பட்ட விரை வாய்வுக்கு:— குரு காந்தமருந்தை விரையில் தேய்த்து வரவும்-உள் மருந்துக்காக விபரம் எழுதவும்.

32. நீர் அண்டம்:—சிறு சைசாக இருந்தால் மேற்சொல்லிய பக்குவங்களால் குணப்படும். பெரிய சைசாகிவிட்டால் ஊசிவிட்டு நீரை வெளியேற்றி மருந்து செய்யவேணும் அல்லது ஆப்பரேஷன் செய்வது நல்லது.

33. ஸ்திரீகளுக்கு உண்டாகும் பாரிச வாய்வு :— ஒரு பக்கமாய் அடி வயற்றில் வலி-வண்டிப்பிரயாணம்போனால் வலி-அடிவயற்றை அழுக்கினால் வலி—இவைகளுக்கு குருமாத்திரை--பைல் பில்ஸ்--ஹெல்த் பில்ஸ்-கோரோஜனை சேர்ந்த ஹெல்த் பில்ஸ்-இவைகளை அடிக்கடி இரா மாத்திரையாக உபயோகம் செய்துகொண்டு பகல் வேளையில் காலை மாலை 2 மிளகும்-2 கஸ்தூரி காரமாத்திரையும்-புளியங்கொட்டைப் பிரமாணம் பொற்றலைக்கரிப்பானும் 40 நாள் சாப்பிட்டு வர குணமுண்டாகும். அல்லது குருமருந்துசாலைக்கு எழுதினால் நல்ல மருந்துகள் செய்து அனுப்பப்படும். மலப்போக்கு செய்யும் மேற்சொல்லிய மாத்திரைகளை தினம் சாப்பிட வேண்டுமென்றல்ல. வாரம் 2 தடவை மட்டும் சாப்பிடலாம்.

பத்தியம்:—வாய்வு பதார்த்தங்கள் தள்ளவும்.

அல்லது:— பொற்றலைக்கறிப்பான் சுண்டக்காய்ப் பிரமாணம்-களற்சிப்பருப்பு ஒரு பாதி-கஸ்தூரி காரமாத்திரை 2-இவைகள் எல்லாவற்றையும் தேன் விட்டரைத்து தினம் 2 வேளை சாப்பிட்டு வரவும்.





33. யானைக்கால்-சதை அண்டம்:—இதுகளுக்கு உண்டாகும் நெரிகட்டி ஜுரம் இவைகளுக்கு குருமாத்திரையை நிலவேம்பு கஷாயத்துடன் சாப்பிட்டு பேதியானபின் காச்சல் மாத்திரையை காலை-மாலை ஒவ்வொன்று சாப்பிட்டு வரவும். நாள்பட்டதுக்கும் இது ஓர் சாந்தியாகும்.

மேற்பூச்சுக்கு:—குரு தைலம் 20 சொட்டு, குருமாத்திரை 5, எருக்கம்வேர்பட்டை பலம் 1, இதை புளித்த மோரில் அரைத்து குளப்பி கனதியான பாகத்தில் பூசிவர வற்றும். மிகவும் பிரயோஜனமான முறை.

## VII. மூலரோகத்துக்கு.

34. இரத்த மூலத்துக்கு:— காலையில் 1 அல்லது 2 குரு மாத்திரையை வாழைப்பழத்தில் பொதிந்து சாப்பிட்டு மலவிர்த்தி செய்துகொள்ளவும். சாயந்திரம் 5 அல்லது 6 மணிக்கு 2 பலம் உரித்த வெள்ளைப்பூண்டை பசுவின் பாலில் வேக்வைத்து ஒரு அவுன்ஸ் மாட்டுக்கோமியமும் சேர்த்து உள்ளுக்கு சாப்பிட உடனே நிற்கும். இந்த வெள்ளைப்பூண்டு பக்குவத்தை மட்டும் 3 அல்லது 5 நாள் உபயோகிக்கலாம். அல்லது இதற்கு ஓர் மலையாளம் மூல வல்லாதி லேகியம் இருக்கிறது. எழுதினால் அனுப்பலாம்.

35. சீய்மூலம்-வலிமூலம்-மூலதடிப்பு-மூலதினவு:—மூலத்தை தினம் நன்றாய் விரல்விட்டு கழுவவேணும். பிஸ்காரி குழாயால் தண்ணீர் செலுத்தியும் கழுவலாம். பின்பு வேப்பயெண்ணெயில் குரு மூலமுளை மருந்தை குழப்பி பஞ்சில் தடவி மூலத்துக்குள் வைக்கவும் உள்ளுக்கு வெள்ளைப்பூண்டை பாலில் அவித்து சாப்பிடுவது உத்தமம். புண்பட்ட மூலத்துக்கு நத்தை எண்ணெ பூசிவரவும். மேற்காட்டிய மூல வல்லாதி லேகியம் வெகு குணமானது.

36. மூலக்கடுப்புக்கு (வயற்றுக்கடுப்புக்கும்):—இரண்டு சிறு டீ கரண்டி விளக்கெண்ணெயுடன் ஒரு குருமாத்திரையைச் சேர்த்து சாப்பிட குணமுண்டாகும். பின்னும் கடுப்பு இருந்தால் ஒரு வாழைப்பழம், ஒரு கரண்டி தேன் ஒரு கரண்டி நெய் சேர்த்து பிசைந்து ஒரு பெரிய புளியங்கொட்டைப் பிரமாணம் குரு வயிற்றுக்கடுப்பு மருந்தும் வெறு வயற்றில் காலை-மாலை சாப்பிட குணமுண்டாகும். அல்லது குரு மாத்திரை உபயோகத்துக்குப்பின பேதனு என்ற ஒரு கடைச்சரக்கு ஒரு கரண்டி தூள்பண்ணி தேனில் குழப்பி வெறு வயற்றில் சாப்பிட குணமாகும். அல்லது தண்ணீரால் ஊறவைத்து தண்ணீரை காலை மாலை டீ மாதிரி குடிக்கவும்.

பத்தியம்:—மருந்து சாப்பிட்டிருக்கும்போது 2 மணி நேரத்துக்கு ஒரு ஆகாரமும் சாப்பிடாமலிருப்பது நல்லது பின்பு ஜவ்வரிசி கஞ்சி சாப்பிடலாம்.

## VIII. குரு மாத்திரை பிரயோகம். மேகநீர் வியாதிகளுக்கு.

**37. மேகநீர் சம்மந்தமாயுண்டான புண்கள்:**—தடிப்புகள்-புள்ளி புள்ளியாயுண்டாயிருக்கும் ஊரல்கள்-லிங்கத்தில் உள்ள புண்கள்-அறையாப்புக்கட்டிகள்-வண்டுகடி-ஊரல்கள்-பவர்ணமை, அமாவாசைகளில் ஏற்படும் நெறிகள்-கட்டிகள்-விஷக்கடிகள் ஆகிய இவைகளை திட்டமாய்க் குணமாக்குகின்றது.

**உபயோகம்:**—காலைதோறும் ஒவ்வொரு மாத்திரையை விழுங்க வேண்டியது. விழுங்குவதற்காக இரண்டு மிடர் தண்ணீர் அல்லது 2 மிடர் கொடிக்கள்ளி கஷாயம் சாப்பிட்டுக்கொள்ளலாம்.—இப்படியாக 7 நாள் சாப்பிடவேண்டியது. பின்பு தண்ணீர்விட்டுக்கொண்டு அதற்குப் பின் கீழ்காட்டிய பக்குவத்தை சாப்பிடலாம்.

**பக்குவம்:**—மாத்திரை 20, கெந்தகம் அரை ரூபாய் இடை, பரங்கிப் பட்டை 2 ரூபாய் இடை, நன்னாரிவேர்-சீந்தில்கொடி 2 ரூபாய் இடை-இவைகளை இடித்து தூள்பண்ணி தேன்விட்டு குளப்பி சுண்டக்காய் பிரமாணம் காலை-மாலை சாப்பிட பூரண சுகம் வரும்.

கெந்தகத்தை தூள் பண்ணி கொதிக்கிற வீசம்படி பாலில் கலக்கி பின்பு உடனே பாலை வடிகட்டிவிட்டு கெந்தகத்தை எடுக்க சுத்தியாகும், அதை மருந்துடன் சேர்த்து அறைக்கவேண்டியது. மாத்திரைகளை சாப்பிட்டு நிறுத்தினபின் தலைக்கு தண்ணீர் விட்டுக்கொண்டு பின்னும் பத்து நாளைக்கு மேற்காட்டிய தூள் மருந்துகளைச்செய்து சாப்பிடவேண்டியது

**38. வெளிப்பிரயோகமாக:**—10 சொட்டு தண்ணீரில் 4 மாத்திரைகளை உறைத்து ஒரு புளியங்கொட்டையளவு வெண்ணெயில் குளப்பி, புண்களில் அறையாப்புக்கட்டிகளில்-மற்றும் விஷக்கடிகள்பட்ட விடத்தில் பூ[illegible] வைக்கவேண்டியது. காலையும்-மாலையும் பூசவேண்டியது.

**39. மேகநீர் கரப்பான்-துர்வியாதிகள்-மேகநீர் பற்று தடிப்புகளுக்கு சுருட்டு:**—5 குருமாத்திரையை எருக்கம்வேர் பட்டை தூளுக்கு[illegible] மத்தியில் வைத்து சுங்கானில் (Pipe) அடைத்து சுருட்டு மா[illegible] [illegible]வும் இப்படி ஒரு வாரம் 10 நாள் பிடிக்கவும் நல்ல குணமுண்[illegible]

**பத்தியம்:**—உப்பு-புளி-தள்ளினால் குணப்படும். மற்றப[illegible] மாய் குணம் கொடாது. ஆனால் கெடுதலும் செய்யாது.

**40. லிங்கப்புண்களுக்கு புகை:**—குரு மாத்திரை 2-அதற்கு இ[illegible]ண்டு பங்கு பூரம்-ஒரு டீ கரண்டி எருக்கம்பாலில் அறைத்து திரி[illegible]





தடவி திரியாக உருட்டி சாயவைத்து அதை எறியவிட்டு லிங்கப்புண்ணுக்கு நன்றாய் புகை படும்படி காலை-மாலை பிடிக்கவும். இப்படி ஒருவாரம் பிடிக்க ஆறிவிடும் (அல்லது குரு மேகரணக்களிம்பு-குரு லிங்கப் புண் பவுடர் இவைகளை உபயோகம் செய்யலாம்:—எழுதவும்). அருமையான முறைகள்.

## IX. குரு மாத்திரையில் கவனிக்கவேண்டிய குறிப்புகள்.

1. குருமாத்திரைக்குறிய முக்கிய குணம் மலத்தைப் போக்கியே வியாதியைத் தணிக்கும்.

2. மலப்போக்குள்ள வியாதிக்குக் குருமாத்திரையைக் கொடாமல் அந்தந்த வியாதிக்குறிய அனுப்பானத்துடன் குருதைலத்தை 1 அல்லது 2 சொட்டு சேர்த்துக்கொடுக்கவும். அல்லது கஸ்தூரிகாரமாத்திரை 4 மாத்திரை குருமாத்திரைக்கு பதிலாக சேர்க்கவும்.

3. அவசரமாய் மருந்து பிரயோகம் செய்யவேண்டியதாயிருந்தால் அனுப்பானத்துக்காக காத்திராமல் கிடைத்த அனுப்பானத்துடன் கொடுத்துவிடவும். பின்பு அனுப்பானத்தை கொடுத்துக்கொள்ளலாம்.

4. மாத்திரையை சாப்பிட்டபின்பு மலத்தை நிறுத்தவேணும்போது டைகர் மாத்திரை அல்லது மோர்-எலுமிச்சம்பழச்சாரும் சீனியும் சேர்த்து கொடுக்க நிற்கும் 5 அல்லது 6 தடவைக்குமேல் போனால் மட்டும் நிறுத்தவேணும்.

5. ☞ மேகநீர் வியாதிக்கு மாத்திரை சாப்பிடும்போது மலம் பெலவீனப்படுத்தத்தக்கதாக அதிகமாய்ப்போனால் மாத்திரம் ஒரு பாசிப்பயாளவு அபின் சேர்த்து மாத்திரையைச் சாப்பிடவேண்டியது. மற்ற உபயோகங்களுக்கு அப்படியல்ல.

6. அறிவிப்பு:—குருமாத்திரையை அதிக பெலவீனமும் ரொம்பவும் மட்டுக்கு மிஞ்சின மெலிவுமான திரேகிகள், மூலகிராணியுள்ளவர்கள்-பெருரவ[illegible]கிறவர்கள், லேசான மருந்துகள்-கஷாயங்களிலும் மலம் கழியக் [illegible]ல்லது தண்[illegible]ள் இம்மருந்தைச் சாப்பிட்டு வயற்றோட்டத்தை அதிகப்படுத்திக் [illegible]டிக்கவும். [illegible]க்கூடாது. நிதானமாய் ($\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ மாத்திரை மட்டும்) சாப்[illegible]வேண்டியது. அதிகமாய்ப்போனால் மோராவது-எலுமிச்சம்பழமாவது டைகர் மாத்திரையாவது உடனே சாப்பிடவேண்டியது.

## X. ஜன்னி 13—வாதம் 80 க்கும் குரு மாத்திரை — குரு தைலம்.

சகல ஜன்னிக்கும்:—இஞ்சி, முருங்கப்பட்டை—வெள்ளைப்பூண்டு சாற்றில் 2 அல்லது 3 குருமாத்திரையைக் கறைத்து உள்ளுக்கு செலுத்த வேண்டியது. பேதியாகி குணம் தரும். குரு தைலத்தை எல்லா பொருத்துகளிலும் தேய்க்கவேண்டியது. அவசரமாய் மலம் கழியவேண்டியதிருந்தால் 2 குருமாத்திரையும்-2 புளியங்கொட்டைப்பிரமாணம் சோப்பும்—1 அவுன்ஸ் தண்ணீரில் கலக்கி பிஸ்காரி குழாயால் ஆசனத்துக்குள் செலுத்த 5 நிமிஷத்தில் மலம் கழிந்துவிடும். மலம் கழிந்தும் குணம் காணுவிடில் ஜுரமும் சம்மந்தப்பட்டிருக்கும் அந்தந்த ஜுரங்களுக்குத் தக்கதாக அனுப்பான பிரயோகங்கள் செய்யவேணும். ரொம்ப ஆயாசமும் பெலவீனமும் தோன்றினுல் வெள்ளாட்டு கறியை அவித்து எடுத்த சார் அரைக்கால்படி எடுத்து உப்பிடாமல் சன்னம் சன்னமாக ஊட்டவேண்டியது. இப்படி 2 அல்லது 3 வேளை தயார்செய்து கொடுக்கலாம். (ஜுரங்களைப்பற்றிய அத்தியாயம் வாசிக்கவும்).

**பத்தியம்:**—அன்னப்பால் தெளிவு-நிலப்பூச்சி சேர்த்து அவித்த அன்னப்பால் தெளிவு போதுமானது உப்பிட்டு கொடுக்கவும். உப்பிடாமல் கறி அவித்த சார் ஊட்டவேணும். (Mutton Broth).

2. சகல வாதத்துக்கும், வலிகளுக்கும்:—மேற்சொல்லிய ஜன்னி அனுப்பானத்தில் குருமாத்திரையை கொடுக்கவும். வெளிப்பிரயோகமாக குருதைலத்தை வியாதியுள்ள இடத்தில் நன்ருய் தேய்த்துவரவும். தொட்டால் வலி எடுக்கும் வாதமாயிருந்தால் குரு தைலத்தை சளம்ப பூசி எருக்கலம் இலையை வைத்துக்கட்டவும். அல்லது தைலம் தடவி சூடான ஒத்தணமிடவும். சகலவித வாதரோகமும் குணப்படும்.

☞ **வேறு பக்குவம்:**—குருமாத்திரையில் மேகநீர் வியாதிகளுக்கு என்ற 8-ம் அத்தியாயத்தில் உள்ள இடிமருந்து கொடுக்கலாம்.

3. தீராத வாதத்துக்கு:—குரு மாத்திரை அரை மாத்திரை-சேங்கொட்டை எண்ணை 10 சொட்டு சேர்த்து (குாட்டினுல் நசுக்கி எடுக்கவும்) பத்து சொட்டு நல்லெண்ணையும் கொட்டைப்பாக்களவு வெல்லமும் சேர்த்து பிசைந்தெடுத்து அதில் பொதிந்து அல்லது பிசரி விழுங்கவேண்டியது. 5 நாள் 10 வேளை சாப்பிடவும். **பத்தியம்:** புளி தள்ளவும். ஆனுல் மோர் வெள்ளாட்டிறைச்சி சேர்த்து சாப்பிடலாம். இது ஓர் கைகண்ட மருந்து. இது சாப்பிட மனமற்றவர்கள் குருமருந்துசாலைக்கு எழுதினுல் குணமாகும் வேறு பக்குவம் செய்தனுப்பலாம். ஒவ்வொரு குணத்தையும் எழுதவும்.





# குரு

## XI. பாலகருக்கு.

1. **கவனிப்பு:**— குழந்தைகளுக்கு ஜாஸ்தியான மலப்பிரவிர்த்தி அவசியம் என்று கண்டால் குரு மாத்திரையை உபயோகம் பண்ணுங்கள் மற்றபடி அடியிற்காட்டியவியாதிகளுக்கு ஹெல்த்பில்லே போதுமானது.

கைவசம் ஹெல்த் பில்ஸ் இல்லாதேபோனுலும் குரு மாத்திரையை நிதானமாய் அளவுப்படி எடுத்து உபயோகம் பண்ணலாம். பொதுவாய் அரைக்கரண்டி விளக்கெண்ணை அல்லது வேப்ப எண்ணை சமயோஜிதமாய் சேர்த்துக்கொள்வது நன்மை.

☞ ஹெல்த் பில்ஸ் அத்தியாயத்தையும் பார்க்கவும்.

2. **ஜன்னி-வலிப்பு-நாக்கணை என்கிற தேக்குத்திக்கலை-இளைப்பு இவைகளுக்கு:**—வெற்றிலை 2, இஞ்சி ஓர் புளியங்கொட்டை அளவு-வெள்ளைப்பூண்டு 2 அரிசி--இவைகளை தட்டிச் சார் எடுத்து அத்துடன் முழு டோஸ் மாத்திரையைக் கறைத்து உட்செலுத்தவேண்டியது காலு ஐந்து மணி நேரத்தில் மலவிர்த்தியாகி சுகந்தரும். பின்பு அவசியமானுல் மறு காலையிலும் **ஹெல்த் மாத்திரையை** அளவுப்படி எடுத்து பாலிலாவது வெந்நீரிலாவது கறைத்து அத்துடன் அரைக்கரண்டி வேப்ப எண்ணை கலந்து ஊட்டவேண்டியது; பூரண சுகம் கிடைக்கும். சளியும், நெஞ்சு கட்டும், ஜுரமும் இருந்தால் தும்பை துளசி சார் ஒரு கரண்டி எடுத்து 2 கரண்டி தண்ணீரும் சேர்த்து சுடவைத்து கஸ்தூரி காரமாத்திரை 1 சேர்த்து காலை மாலை கொடுக்கலாம்.

**மேற்பக்குவமாக:**—நெஞ்சிலும், தொண்டைப்பதிப்பிலும், வயற்றிலும் குரு தைலத்தை தேய்க்கவேண்டியது. சில குழந்தைகளுக்கு இந்த மேற்பக்குவம் மட்டுமே குணத்தைக்கொடுக்கும்.

3. **மந்தம்-மந்த வயற்றோட்டம்-மந்த ஜுரம் இவைகளுக்கு:**—மந்தம் இன்னமிருப்பதாகக் கண்டால் மாத்திரையில் பாதி அளவாவது அல்லது ஹெல்த் பில்ஸ் முழு அளவாவது கொடுத்து மந்தத்தை வெளியேற்றிக் கொண்டு பின்பு நம் குரு **டைகர் மாத்திரையில்** கால் மாத்திரை ஒரு சங்களவு தண்ணீரில் கறைத்து உட்செலுத்தவே, வயற்றோட்டம் நின்று ஜுரமும் குணப்படும் அல்லது ஹெல்த் பில்லில் சொல்லிய கஷாயத்துடன் ஓமம் சேர்த்து கஷாயமாக்கி கொடுக்க குணம் தரும். ஓமமும் **கஸ்தூரி கார மாத்திரையும்** உபயோகிக்க பூரண குணம் வரும் அல்லது மாந்தத்தில் சொல்லிய கஷாயத்தில் கொடுக்கவும்.

பக்கம் 16. நம்பர் 13.

* குரு ஹெல்த் மாத்திரையை வாரம் இருமுறை அல்லது ஒரு முறை உபயோகித்து வந்தால் இவ்வித தொந்தரவுகள் வராதென்பது நிச்சயம்.

4. இரா நீர்கட்டு வாய்க்குள்ளிருக்கிறது இவைகளுக்கு:—2 குன்றி மணியிடை நவச்சாரத்தையும் குருமாத்திரையில் முழு அளவையும் சேர்த்து உள்ளுக்கு கொடுக்கவேணும். மலசுத்தி இன்னம் அவசியம் என்று கண்டால் மறுநாள் அனுப்பானத்துடன் ஹெல்த் பில்ஸ் முழு அளவு எடுத்து உபயோகம் செய்யவேணும். எழாவது ஐட்டம் 15-ம் பக்கத்தில் சொல்லியபடி வாய்க்குள் உள் நாக்கில் தடவவேணும். நல்ல குணம் தரும்.

வெளிப்பிரயோகமாக:—தைலத்தை தொண்டையிலும், நெஞ்சிலும் 2 மணிக்கொருதரம் தேய்க்கவேண்டும். நன்றாய் கசக்கி தேய்க்கவும்.

5. சளி, இருமல் ஜுரத்திற்கு:—பிள்ளையின் பெலமறிந்து குருமாத்திரைகளில் பாதி அல்லது ஹெல்த் பில்லை கரைத்துக்கொடுத்து மலவிர்த்தி செய்துகொண்டு, பின்பு ஆடாதோடையிலை 2, கண்டதிப்பிலி 10, இவைகளைச்சேர்த்து நசுக்கிப்போட்டு ஒரு சங்களவு கஷாயமாக எடுத்து அதில் 1 சொட்டு குரு தைலத்தைவிட்டு உள்ளுக்குக்கொடுக்கவேண்டியது. காலை-மாலை இரண்டு வேளையும் கொடுக்கவும். நெஞ்சிலும், நெஞ்சு பதைப்பிலும் குரு தைலம் பூசவேண்டும். சில பிள்ளைகளுக்கு வெளிப்பிரயோகமட்டுமே போதுமானது. அனுப்பானம் கிடைக்காவிட்டால் தைலத்தை தேனில் கலந்து கொடுக்கலாம். அவசியமானால் பின்னும் கஸ்தூரி மாத்திரையை 4 அல்லது 5 நாளைக்கு உபயோகிப்பது நல்லது. மார்சளி என்ற பாகத்தில் சொல்லியபடியும் செய்யலாம். வாசித்துப்பார்க்கவும். பக்கம் 16 நம்பர் 12. அதிக கபம் இருந்தால் வாந்தி எடுக்க செய்யவேண்டும்.

6. லேசான இருமலும்—கபம் கட்டி திக்திக்கென்று மூச்சு விட்டு வாதைப்படும் குழந்தைகளுக்கு:—குரு மாத்திரையில் முழு டோஸ் கொடுத்துக்கொண்டு நெஞ்சில் குருதைலத்தை பூசி தவிடாவது, மணலாவது வறுத்துக்கொண்டு ஒத்தணமிடவேண்டியது. ரொம்பவும் கண்டிப்பாயிருக்குமாகில் தைலமும், ஒத்தணமும் சற்றுவிடாது கொடுத்தால் 12 மணி நேரத்திற்குள் சுகம் வந்துவிடும்; சில பிள்ளைகளுக்கு 1 மணி நேரத்தில் மூச்சடைப்பு நின்றுவிடும். சுகம் உண்டாக உண்டாக ஒத்தணத்தை மூன்று மணிக்கொருதரமாகக் கொடுத்து பின்பு நிறுத்திப்போடலாம். குரு தைலத்தில் 2 சொட்டு எடுத்து அத்துடன் ஆடாதோடை இலைச்சார் 2 கரண்டி சேர்த்து உள்ளுக்கு கொடுக்க குணமுண்டாகும். கபம் கட்டி மூச்சுவிடுமாகில், வாந்தி எடுக்கும்படி செய்யவேண்டியது. (அதற்கு குப்பைமேனிசாறு ஒரு தேக்கரண்டி கொடுக்கவும், அல்லது மயில் துத்தத்தை ஒரு மிளகளவு எடுத்து ஒரு சங்கு தண்ணீரில் கரைத்து ஊட்டவேண்டியது. உடனே கபம் வாந்திபண்ணி நல்ல சுகம் வரும்.) அல்லது ஹெல்த் பில்ஸ் 4 மாத்திரை அல்லது அரை குரு மாத்திரையை கரைத்து ஊட்டினாலும் வாந்தி





பண்ணும். அவசியமானால் மறுநாளும் இப்படிச்செய்யவும். பயமில்லாமல் எதாவது ஒரு பக்குவத்தைச்செய்ய நல்ல குணம்தரும் குரு ஆஸ்த்மா டிராப்ஸ் என்ற மருந்தை கபம் வாந்திபண்ணியபின் கொடுக்கலாம்.

7. உண்ணாக்கு வளர்ந்து இருமல் எடுப்பவருக்கு:— ஒரு குருமாத்திரையும்-மாத்திரைக்கு இருபங்கு பிரமாணம் சீனக்காரம் சேர்த்து நசுக்கி 20 சொட்டு தேனில் குழப்பி அதில் பாதியை எடுத்து உள் நாக்கிலும், உள் நாக்கு பக்கத்திலும் நன்றாய்த் தடவிவிடவேண்டியது. மறு பாதி பாகத்தை சாயந்திரம் தடவவேண்டியது. மலவிர்த்தி ஜாஸ்தியானால் மறுநாளில் மாத்திரையை நிறுத்தி அனுப்பானத்தை மட்டும் தடவவேணும். இப்படி நல்ல முறை மேலும் உள்ளுக்கு சுக்கு-சித்திரத்தை கஷாயம் செய்து அதில் 1 சொட்டு குரு தைலம் போட்டு உள்ளுக்குக்கொடுக்கவேண்டியது. இந்த கஷாயத்தை ஒவ்வொரு நாளிலும் இரவில் படுக்கப்போகும்போது கொடுக்கவேண்டியது. கஷாயத்தை மூன்று நாள் உபயோகம் செய்யவும். கஷாயத்துக்கு பதில் ஒரு கரண்டி வெற்றிலை சாற்றில் மிளகு பிரமாணம் ஜாதிக்காய் உரசி கொடுக்கலாம்.

8. சகல ஜுரங்களுக்கும்:— குழந்தைகளுக்கு 2 பவளமல்லிகை இலையையும்-மிளகளவு வெடியுப்பும்-அதில் வயதுப்படி குரு மாத்திரையும் அல்லது 1 or 2 ஹெல்த் பில்சும் வைத்தரைத்து ஒரு சங்கு பிள்ளைப்பாலில் கரைத்து காலையில் கொடுக்கவும். பின்பு சாயந்திரம் குரு மாத்திரையை நீக்கி கஸ்தூரி காரமாத்திரையை மேற்சொல்லிய அனுப்பானங்களுடன் கொடுக்கவும். அவசியமானால் இரவிலும் ஒரு டோஸ் அனுப்பானம் மட்டும் கொடுக்கவும். அனுப்பானம் 4 or 5 நாளைக்கு கொடுக்கவும்.

9. பெரியவர்களுக்கு:—மேற்சொல்லிய அனுப்பானத்தை 5 அல்லது 6 மடங்கு பெருக்கிக்கொண்டு 1 குரு மாத்திரை அதில் சேர்த்து சாப்பிடலாம். ஜுரத்தைப்பற்றிய அத்தியாயம் வாசிக்கவும்.

10. கரப்பானுக்கு:—சீயக்காய்-அரப்பு-சோப்பு-முதலானது போட்டு புண்ணை நன்றாய்க்கழுவி சகல ரணக்களிம்பு அல்லது மேகரணக் களிம்பை போட்டு கட்டவும்.

இந்த களிம்பால் தலையிலுள்ள பொடுகு-கரப்பான்-பற்றுகள்-கை கால்களிலுள்ள கரப்பான்கள்--புட்டத்து சிரங்குகள்—அம்மைகுத்தி உண்டான புண்கள்-சிசுபிள்ளை தொப்புள் புண்கள்-காது நசுவணிகள்-நாடி உதடு முதலான விடத்தில் உண்டாகும் நச்சுப்புண்கள் சமூலமும் குணமாகும்.

வாரம் இருமுறை ஹெல்த் பில்ஸாவது, குருமாத்திரையாவது உள்ளுக்குக்கொடுக்கவேண்டியது. அரை கரண்டி எண்ணெயும் சேர்த்துக் கொள்ளவும். ☞ சோகை பிடித்திருந்தால்-பெலவீனம்-மெலிவு இருந்தால் பாலர் டானிக்கை கொடுங்கள். அல்லது எழுதிக் கேளுங்கள்.

11. *சிரங்குகளுக்கு:—அரை வீசம்படி வேப்பம் எண்ணெயில் 20 குரு மாத்திரையை குளப்பி அத்துடன் 2 கொட்டைப்பாக்கு பிரமாணம் கெந்தகம், அதில் பாதி காரமான புது சுண்ணாம்பு சேர்த்து குளப்பி சுடவைத்து புண்களில் 3 தினம் போட சுகமாகும், அருமையான மருந்து. 2 கரண்டி தண்ணீர் சேர்த்து மாத்திரையை நன்றாய் அரைத்து குளப்பிக்கொள்ள வேணும்.*

பிள்ளைகள் சாப்பல்-மண் தின்பதற்கு:—*கீழ்காய் நெல்லி இலை-கறிப்பான் இலை-கடுக்காய் தோடு இவைகள் தனித்தனியே 1 அல்லது 2 புளியங்கொட்டைப் பிரமாணம் வயதுக்குத் தக்கபடி எடுத்து அத்துடன் ½ அல்லது ¼ குரு மாத்திரை அல்லது 2 ஹெல்த் பில்ஸ் வைத்து கரைத்து எல்லாவற்றையும் 2 சங்கு வெந்நீரில் கலக்கி பிளிந்து சார் எடுத்து 3 நாள் காலைதோறும் கொடுக்கவும். பின்பு மேற்சொல்லிய அனுப்பானத்தை மட்டும் 1 வாரம் காலையில் கொடுக்கவும்.* சோகையினால் உண்டாயிருந்தால் குரு பாலர் டாணிக்கை கொடுக்கவும். *மண் தின்பது நின்று போகும், சோகை, பெருவயறு மாறிப்போகும். கவனிக்கவும்.*

12. மார்சளிக்கு:—*பிரண்டையை வாட்டி சார் பிளிந்து அரை சங்கு எடுத்து ஒரு ஹெல்த் பில்ஸ் அல்லது அதே பிரமாணம் குரு மாத்திரை சேர்த்து 3 அல்லது 5 வேளை வரை அதிகாலையில் கொடுக்கவும். அந்த சாயந்தரங்களில் அனுப்பானத்துடன் கஸ்தூரி காரமாத்திரை கொடுத்து வரவும். வயற்றுப்போக்கு போதுமென்றால் குரு மாத்திரையை நிறுத்தி அனுப்பானங்களை காலை-மாலை முன் சொல்லியபடி கொடுக்கவும். குழந்தைக்கு தொந்தரவாயிருந்தால் மட்டும் இப்பக்குவங்கள் செய்யவேணும். மற்றபடி சும்மா விட்டுவிடுவது நல்லது. குருதைலம் மட்டும் தேய்த்து வந்தால் போதும். கறி சூப்பு 3 கரண்டி தினம் கொடுத்து வரவும்.*

நாள்பட்ட மார்சளி இளைப்புக்கு:—*ஆயுள்வேத லேகியம் ரொம்ப நல்ல மருந்து—எழுதவும். ஆஸ்த்மா டிராப்ஸ் 5 முதல் 10 சொட்டு தினம் 1 அல்லது 2 தடவை கொடுத்து வரலாம்.*

13. சகல மாந்தந்துக்கும் மருந்து:—*மாந்தமென்று அறிந்த மாத்திரத்தில் புளி-நுணா-வேம்பு-வெற்றிலை இவைகளின் ஈர்க்கு ஒவ்வொன்றிலும் 1 எடுத்து அத்துடன் தேய்த்து உமி போக்கின ஓமம்-வாய்விழங்கம் புளியங்கொட்டை பிரமாணம் இவைகளை எடுத்து நன்றாய் தட்டி நசுக்கி அரைக் கால்படி வெந்நீரில் போட்டு காய்ச்சி பாதியாக வற்றவைத்து மூன்று வேளைக்குப்பங்கு பண்ணி காலையில் அரை குரு மாத்திரை அல்லது 1 அல்லது 2 ஹெல்த் பில்ஸ் மாத்திரையுடன் கொடுத்துவிடவும். மதியம்-மாலை இந்நேரங்களில் அனுப்பானத்தைமட்டும் கொடுக்கவும். மறுநாளிலும் அனுப்பானத்தை மட்டும் கொடுக்கவும். பின்னும் அவசியமானால் அனுப்பானத்தைமட்டும் 2 அல்லது 3 நாள் ஒரு கஸ்தூரி மாத்திரையுடன் கொடுப்பது உத்தமம். (நுணா=மஞ்சணாத்தி).*





ஆகாரம்:—*பொறித்த அரிசி புனர்பாக தண்ணீர் இரண்டு பங்கும், ஒரு பங்கு தாய்ப்பாலுமாக சேர்த்து அடிக்கடி 2 சங்களவாக கொடுக்க குணமாகும். குணம் தோன்றியவுடன் வழக்கப்படி ஆகாரங்களை துவக்கலாம்.*

☞ வேறு பக்குவம்:—*குரு பாலர் வயற்றோட்ட நிவாரணியை உபயோகிக்க சகல மாந்தமும் சுகம் ஆகும். குரு மருந்து ஜாப்தா பார்க்கவும்.*

## XII. ஸ்திரீகளுக்கு.

1. பிரசவவலி ஆரம்பிக்கும்போது:—*மலமும், நீரும் பிரியவேண்டியது அவசியம் அப்போதுதான் பிரசவம் கஷ்டமில்லாமல் ஆகும்.*

உபயோகம்:—*ஜீரகத்தை ஒரு கொட்டைப்பாக்கு பிரமாணம் அரைத்து அத்துடன் 1 குருமாத்திரையையும் நசுக்கி உள்ளே வைத்து விழுங்கிவிட மலமும், நீரும் பிரிந்து பிரசவம் லேசாக ஆகிவிடும்.*

2. கெர்ப்ப ஸ்திரீகளுக்கு பொய்வலி:—*இது பிரசவ வலிபோலும் வயற்றுவலிபோலும் வந்து மலத்தையும், நீரையும் தூக்கிக்கொண்டு தொந்திரவுபண்ணும். இந்த மாத்திரையை மேற்பக்குவப்படி உபயோகம் செய்யவே மலமும், நீரும் பிரிந்து வலி நின்று சுகந்தரும்.*

3. பிரசவம் தாமதித்தால்:—*குருமாத்திரையில் 5 எடுத்து 10 வெங்காயத்துடன் வைத்தரைத்து வயற்றில் பூசவேண்டியது. பின்பு ஒரு மாத்திரையை புளியங்கொட்டையளவு சூடத்துடன் வைத்து நசுக்கி விழுங்கிவிடவேண்டியது. மேற்பிரயோகம் மட்டும் இரண்டு மூன்று தடவை மணிக்கொருமுறை செய்யவேண்டியது. அந்த ஸ்திரீக்கு வயற்றில் குரு தைலமும் விளக்கெண்ணெயுமாகச் சேர்த்து இடுப்பு-வயறு-விலாப்புறம் எல்லாம் நன்றாய் தேய்த்து பிடித்துக்கொடுக்கவேணும். சந்திரகாந்த மாத்திரையை 2 அல்லது 3 எடுத்து நசுக்கி மூன்றுமிடர் வெந்நீருடன் விழுங்க கால் மணி நேரத்தில் வலி ஆரம்பித்து பிரசவமாகும். இவ்விதப் பக்குவங்களால் வலி ஊற்சிதப்படும்.*

4. கெர்ப்ப ஸ்திரீகளுக்கு:—*அடிக்கடி வயற்றை தூக்கிக்கொண்டு வலிக்குமானால் குரு மாத்திரை அரை—பித்த மாத்திரை—கோரோஜனை மாத்திரை—ஹெல்த் சால்ட்டு—பேதியுப்பு இவைகளில் ஏதாவது ஒன்றை அரைபாகமாக கொடுத்து பேதிகழியவிட்டு பின்பு தினம் 1 or 2 தடவை சந்தான சொர்ணத்தை அளவுப்படி கொடுத்து வரவும்: யாதொரு குணபேதமில்லாமல் பூர்ண காலத்தில் பிரசவமாகும்.*

5. பிரசவித்த ஸ்திரீகளுக்கு மலச்சிக்கல்:—குரு மாத்திரை 1-பித்த மாத்திரை 2-கோரோஜனை மாத்திரை 3, இவைகளில் ஏதாவது ஒன்றை கொடுத்தால் மலவிர்த்தியாகி வேறு வியாதிகள் வராமல் பாதுகாக்கலாம்.

6. பிரசவித்த ஸ்திரீகளுக்குக் காய்ச்சல்:—இதற்கு மலவிர்த்தி ரொம்பவும் அவசியம். உடனே அறைத்த வேப்பங்கொழுந்து ஒரு எலுமிச்சங்காயளவு எடுத்து அதினுள் ஒரு குரு மாத்திரையை அல்லது 2 பித்த மாத்திரையை வைத்து விழுங்கிவிடவேண்டியது. வயற்றின் அடி பாகத்தில் குரு தைலத்தைப் பூசிக்கொண்டு மணலாவது, தவிடாவது வறுத்து ஒத்தணமிடவேண்டியது. இப்படி நாலு மணிக்கொருதரமாக ஒத்தணமிடவேண்டியது. இப்படி நாலு மணிக்கொருதரமாக ஒத்தணமிட ஜுரம் விடும். இவர்களுக்கு வரும் காய்ச்சலை லேசாய் நினைத்துவிடக்கூடாது. பிரசவித்த மர்மஸ்தானங்களை உள்ளேயும் வெளியேயும் நீருக்குப் போகும் போதெல்லாம் நன்றாய்க் கழுவவேணும். கவனிக்கவும்.

மலவிர்த்தி:—சரியானபடி ஆகிக்கொண்டு இருந்தால் கீழ்காட்டிய பக்குவத்தை செய்யவும். கொட்டைப்பாக்கு பிரமாணம் வேப்பங்கொழுந்து-ஒரு புளியங்கொட்டைப் பிரமாணம் மஞ்சள்-நிலப்பூச்சி ஒரு கொட்டைப்பாக்கு பிரமாணம், கஸ்தூரி காரமாத்திரை 3, புளியங்கொட்டைப் பிரமாணம் குங்குமப்பூ இவைகளையெல்லாம் சேர்த்தரைத்து விழுங்கவும். காலை மாலை கொடுக்கவும். தின மலவிர்த்தி முக்கியம்—முக்கியம்.

காய்ச்சல் ஜாஸ்தியாக அடிக்குமானால் காய்ச்சல் மாத்திரைகளை காலை-மதியம்-சாயந்திரம் கொடுப்பதுடன் குரு தைலத்தை சளம்ப அடிவயற்றில் பூசி ஒத்தணமிடவேண்டும். கெற்ப்பையில் தண்ணீர் அடித்து கழுவிவரவேணும். மேற்சொல்லிய நிலப்பூச்சி பக்குவத்தையும் சேர்த்து செய்துகொள்ளலாம். மேலும், சாராயமும் தண்ணீரும் சமபாகமாகச் சேர்த்து வைத்துக்கொண்டு ஜுரம் நிற்கும்வரை அரை மணிக்கொருதரம் சளம்ப வயறு முழுவதும் பூசிவரவும்.

7. * இவ்வித காய்ச்சல் எப்போதும் கெற்பபையில் புண் உண்டாகி அதினால் காய்ச்சல் உண்டாகிறது. இதற்கு குறியாக உட்கார்ந்து காலைச் சேர்க்கிறபோதும், உட்கார்ந்து குனிகிறபோதும் சற்று வலி தோணும்; அடிவயற்றில் கைவைத்து அமுக்கினாலும் வலிக்கும்; உதிரக்கழிவு திடீரென்று நின்றிருக்கும். இப்படிப்பட்ட குறிப்புகள் தோன்றினவுடனே மெற்சொல்லிய பக்குவப்படி செய்தால் ஜுரம்-ஜன்னி-குடல் பழுத்தல்-கெற்பக்குடலில் வீக்கம் முதலானவை வராமல் காத்துக்கொள்ளலாம். குரு தைலத்தை அடிவயற்றில் சளம்ப பூசவேண்டும். எல்லாவற்றையும் முன் ஜாக்கிரதையாகச் செய்யவேணும்.





8. பிரசவித்த ஸ்திரீகளுக்கு நீர்க்கச்சிக்கல்:— குரு மாத்திரை 1-வறுத்த கருஞ்சீரகம் 3 காசு எடை-பெருங்காயம் ஒரு கடலைப்பிரமாணம் எலலாம் சேர்த்தரைத்து கொடுக்கவும். மாலையில் அனுப்பானம் மட்டும் கொடுக்கவும் பின்னும் 3 நாள் அனுப்பானத்தைமட்டும் 3 கஸ்தூரி மாத்திரையுடன் கொடுக்கவேண்டும். முதல் நாள்மட்டும் குரு மாத்திரையுடன் கொடுக்கவேண்டும். ஏதோ கஷ்டமிருந்தால்மட்டும் மருந்துகள் செய்ய வேண்டும். மற்றப்படி மருந்துகளே அவசியமில்லை.

9. பால்கட்டிக்கொண்டு வரும் ஜுரம்:— சிலருக்கு இது பெருத்த இம்சையாயிருக்கும். இதற்கு குரு தைலத்தை நன்றாய் சளம்ப மாறில் பூசி வைக்கவேண்டும். அதிகப் பால் கட்டிக்கொண்டால் வென்னீரைக் கம்பளித்துணியில் நனைத்து மார்பில் ஒத்தணமிட்டுக்கொண்டே பாலை எடுத்துப்போட்டு பின்பு தைலத்தையும் பூசி இதற்குமேல் மல்லிகைப் புஷ்பத்தையும் வைத்து இறுகக் கட்டவேண்டியது. பிள்ளை உயிரோடு இருக்கிறவர்களுக்கு இப்பக்குவங்கள் அவசியமில்லை. மற்றவர்கள் மேற்காட்டிய முறை செய்துகொள்ளவேண்டியது மிக அவசியம். குரு மாத்திரை 1 சாப்பிடுவது உத்தமம். இப்பக்குவங்கள் செய்வதனால் மறு பிரசவத்திற்கு பால் உண்டாகாமல் போகும் என்று யோசிக்கவேண்டாம். அப்படியல்ல.

10. பாலில்லாதவர்களுக்கு:— பால் சுரக்க சதகுப்பை ஒரு ரூபாய் எடை-அத்துடன் வெள்ளைப்பூண்டு 1 அல்லது 2 பலம் இவைகளை பாலில் அவித்து காலை மாலை சாப்பிடவேண்டும். பின்பு வெளிப்பிரயோகமாக சிற்றுமணக்கு இலைச்சார் 2 சங்கு எடுத்து அதில் 2 குருமாத்திரையைக் கறைத்து சற்று நேரம் ஊறவைத்து எடுத்து தேய்க்கவேண்டும். பிள்ளை பால் குடிக்கும் இடம் தள்ளி மற்றவிடமெல்லாம் தினம் மூன்று வேளை தேய்க்கவேண்டும். பிள்ளையின் வாயில் பட்டாலும் ஒன்றும் செய்யாது ஒருவாரம் வரைக்கும் செய்யவேண்டும், சிற்றுமணக்கு இலை கிடைக்காவிட்டால் ஒரு சங்களவு பட்டைச்சாராயத்தில் 3 மாத்திரையைக் கறைத்து மார்பில் தேய்த்துவரவேண்டும். அழுத்தித் தேய்க்கவேண்டும். கூடுமானால் ஒயின் லேசாய் சேர்த்துவரவேண்டியது. நல்ல ஆகாரங்கள் சாப்பிடவேண்டும். வேட்டைக்கறி-ஆட்டு இறைச்சி-கருவாடு-மீன்-உளுந்து சேர்ந்த தோசை சேர்க்கவும். இப்பக்குவங்கள் செய்தால் பால் உண்டாகும்.

குரு லேகியம்:—ரொம்பவும் நல்லது. தேக பலம் உண்டாகும். பால் உண்டாகும். மார்பு கனம் உண்டாகும். நெஞ்சில் சதை பிடிக்கும் நல்ல ஆகாரங்களும் சேர்க்கவேணும். லேகியத்துடன் 2 அல்லது 3 சங்களவு பருத்திக்கொட்டை பாலும் சமம் தேங்காய் பாலும் சேர்த்து தித்திப்பிட்டு சாப்பிடவும். இம்முறைப்படி ஒரு மண்டலம் லேகியம் சாப்பிட ரொம்ப நல்ல குணமுண்டு. அறியவும்.—கைகண்டது.

கொடுக்கவும் அல்லது குரு விஷ மையை கொடுக்கவும். கடித்தவிடத்தில் 2 குருமாத்திரையை குப்பைமேனிச் சாற்றில் குளப்பி தேய்க்கவும். 2 நாளைக்கு புளி தள்ளுபடி. புனர்பாக கஞ்சி அரை உப்புடன்.

6. பேநாய் கடிக்கு:—2 அல்லது 3 குருமாத்திரையும் ஒரு கரண்டி வேப்பம் எண்ணையும் அல்லது குரு விஷ மை 1 அல்லது 2 மிளகுப்பிரமாணம் ஒன்றுவிட்டு ஒரு நாள் உள்ளுக்கு கொடுத்து திரேகத்தில் அடியிற் சொல்லிய குழம்பை பூசவும். பேயத்திவேர்--ஆலம்பட்டை--வேப்பிலை மூன்றும் வகைக்கு பலம் 6 இடித்து அரைப்படி கழநீரில் போட்டு கொதிப்பித்துக் குழம்பாக்கி ஏழு நாளைக்கு பூசி வரவும். (பத்தியம்-உப்பு-புளி தள்ளுபடி).

7. எலி கடி விஷத்துக்கு:—குரு மாத்திரை அல்லது விஷ மையை மேற்சொல்லிய 5 அல்லது 6-வது முறைப்படி கொடுத்து பின்பு மறுநாள் வேலிப்பருத்தி வேரை ஒரு சிறு எலுமிச்சங்காய் பிரமாணம் அறைத்தெடுத்து 3 நாள் காலையில் சாப்பிடவும். புதுகடியாயிருந்தால் கடித்தவிடத்தில் முருங்கை இலையை இடித்து கட்டவும், அல்லது கடித்தவிடத்தில் குரு விஷ தைலத்தை (தேள் கடி மருந்து) பஞ்சில் தோய்த்து கட்டவும். பொட்டாசியம் பெர்மாங்கனேஸ் என்ற மருந்தை தேய்க்கலாம்.

வேறு முறை:—குரு மாத்திரை ஒன்றுடன் ஆகாசகருடன் கிழங்கு 1 விராகனிடை சேர்த்து அறைத்து வெள்ளாட்டுப்பாலுடன் சாப்பிடவும். பின்பு மூன்று நாளைக்கு அனுப்பானம் மட்டும் காலையில் சாப்பிடவும். பத்தியம்: உப்பு தள்ளுபடி. சொஸ்தமாகும்.

8. சாதாரண பாம்புகளுக்கு:—விஷப் பாம்புகளுக்கு சொல்லிய முறைப்படி சிகிச்சைகள் செய்துவிட்டால் யாதொரு தொந்தரவுகள் புண்கள் உண்டாகும் என்று பயப்படவேண்டியதில்லை.

## XIV. மிருகங்களுக்கு.

அடைப்பான் வியாதி முதற்கொண்டு சகலவித வியாதிக்கும், விஷங்களுக்கும் மனுஷருக்குசெய்வதுபோலவே மிருகங்களுக்கும் குரு மாத்திரை பிரயோகம் செய்யலாம். சகல அனுப்பானமும், அப்படியே மாத்திரையையும் அனுப்பானத்தையும் 4 or 5 மடங்கு அளவை அதிகப்படுத்திக்கொள்ளவேண்டியதுதான், வேறல்ல.

ஆடுகளுக்கு மனுஷருக்கு கொடுக்கும் அளவும், நாய் முதலானதுகளுக்கு ஆடுகளில் பாதி அளவும் கொடுக்கவேணும்.





## 2. டைகர் மாத்திரை.

**(Tiger Pills)** புட்டி அணா 8.

100 மாத்திரை அடங்கிய புட்டி ரூ. 1—8—0.



இது விஷபேதிக்கு கைகண்ட அவுஷதம், அஜீரண வயற்றோட்டம், வாய்வு, பித்தம், உஷ்ண வயற்றோட்டமும் இந்த மருந்தில் குணப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| பெரியவர்களுக்கு (12 வயதுக்குமேல்) | 3 | மாத்திரை. |
| 5-12 வயது வரை | 1 or 2 | ,, |
| 1-5 ,, | ½ or 1 | ,, |
| சிசுக்களுக்கு | ¼ | ,, |

இரண்டு அல்லது 3 வேளை மருந்திலும் பூரண சுகமுண்டாகின்றது, ஒவ்வொரு தடவை மலவிர்த்தியானவுடனும் ஒவ்வொரு வேளை மருந்து சாப்பிடவேண்டும். வியாதியின் மும்மரத்துக்குத் தக்கபடி.

### விஷபேதிக்கு.

1. விஷபேதி காலங்களில் லேசான அஜீரணங்களே விஷத்தை விருத்திக்கின்றமையால் அஜீரணத்தை உடனே நிவர்த்திபண்ணவேண்டியது மிக அவசியம்.

2. ☞ குரு ஓமம் கர்பூர சத்து:—வயற்றில் மந்திப்பை உடனே அடிக்கின்றது. பேதியின் விஷமும் அத்தோடே அடிபட்டுப்போகின்றது. வயற்றோட்டங்களையும் கண்டிக்கின்றது. ஆகையால் மந்திப்பு தோன்றியவுடன் இதைச் சாப்பிடவும்.

விஷபேதி காலங்களில் அற்ப வயற்றோட்டத்தைப்பற்றியும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். வயற்றோட்டம் கண்டவுடன் டைகர் மாத்திரையைச் சாப்பிட்டால் ஒரே வேளை மருந்து பூரண சுகத்தைக்கொடுக்கின்றது.

பொதுவாய் ஜனங்கள் கெண்டை வாங்க ஆரம்பித்த பின்னுடிதான் மருந்துக்காக ஓடித்திரிகிறார்கள். அப்பேற்பட்ட சமயத்திலும் இந்த மாத்திரைகள் உயிர்த்தோழனாகவிருந்து காப்பாற்றுகிறது.

## உபயோகம்.

### சகல வயற்றேட்டமும் குணப்படும்.

3. வயற்றேட்டம்:—உடனே 3 மாத்திரைகளை சவைத்து அல்லது ஒரு சங்கு தண்ணீரில் கறைத்தாவது சாப்பிடவேண்டியது. அவசியத்துக்குத் தக்கதாக அரைமணி ஒரு மணிக்கொரு முறையும் கொடுக்கலாம்.

4. வயற்றுவலி:—வயற்றுவலிகண்டாலும் ஒரு முழு அளவு உடனே சாப்பிடவேண்டும். மேற்பிரயோகமாக வயற்றில் குரு தைலம் தேய்த்து வென்னீர் ஒத்தணமிடவேண்டியது. கருப்பு பாட்டிலிலாவது, செம்பிலாவது வென்னீர் வைத்துக்கொண்டு ஒத்தணமிடவேண்டியது.

5. வாந்திக்கு:—வாந்தி மிகுதியாயிருக்குமாகில் தாகத்துக்குத் தண்ணீர் கொடுப்பதை நிறுத்தி மாத்திரையையும், 10 கிராம்பையும் அரை வீசம்படி தண்ணீரில் அறைத்துக்கொடுக்கவேண்டியது. மருந்தை வாந்தியெடுத்துவிடுமானால் உடனே வாந்தி எடுத்த நிமிஷமே மறுபடியும் மருந்தை அதே பிரகாரம் கொடுத்துவிடவேண்டியது. கடுகை அறைத்து ஒரு மாங்காயளவு உருட்டி ஒரு சாண் சவுக்கத் துணியில் தடவி நடுவயற்றில் ஒட்டி வைக்கவேண்டியது. இப்படி ஒரு மணிக்கொருதரம் ஐந்து அல்லது ஆறு தடவை போடவேண்டும். இது சிறு பிள்ளைகளுக்குக்கூட பொத்துப் போகாது.

6. மிகுதியான தாகத்திற்கு:—சோடா வாட்டர் கொடுக்கலாம்.

(1) அரிசியை வறுத்து கொதிக்கிற வெந்நீரில்போட்டு ஊறவைத்து பின்பு வடிகட்டிக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய் ஒவ்வொரு மிடாக உப்பிட்டு கொடுக்கவேண்டியது. பார்லி அரிசி தண்ணீரும் கொடுக்கலாம்.

(2) கோதுமை ரொட்டியை அறுத்து வாட்டி தண்ணீரில் ஊற வைத்து அதின் தண்ணீரும் கொடுக்கலாம். அத்துடன் ஒவ்வொரு தடவை தாகத்துக்கு கொடுக்கும்போதும் 10 சொட்டு எலுமிச்சம்பழச்சார் விட்டு கொடுத்தால் ரொம்பவும் உத்தமம். வாந்தி ஜாஸ்தியாகி குடிக்கிற தண்ணீரையெல்லாம் உடனே உடனே எடுத்துவிடுமாகில் தாகத்துக்கு கொடுப்பதை சற்று நிறுத்தி நிறுத்தி கொடுக்கவேண்டும்.

7. ஆகாரம்:—வாந்தி நிற்கும் வரை ஆகாரம் கொடுப்பதைப்பற்றி யோசிக்கக்கூடாது. வாந்தி நின்றுவிட்டால் ஆகாரம் கொடுக்கவேண்டும். களைப்புஉண்டாகி வியாதியஸ்தன் சோர்ந்துபோகாதபடி உப்பிட்ட தெளிவு தண்ணீர், காப்பி, தேயிலை தண்ணீர், கார்ன்பிளவர், ஆரோட்டி மா, ரவை இவைகளை தண்ணீர்போல் கஞ்சிசெய்து உப்பும் தித்திப்புமிட்டு





கொடுக்கலாம். கொஞ்சமாய் இரண்டு மூன்று மிடாகமட்டும் கொடுக்கவேண்டும். ஆனால் அடிக்கடி கொடுக்கலாம் 24 மணி செல்லும் வரை கெட்டியான் ஆகாரம் கொடுக்கக்கூடாது.

8. அதிக சோர்வுள்ள வியாதியஸ்தர்களுக்கு:—

(1) இரண்டு மணிக்கொருதரம் இரண்டு தேக்கரண்டி பிராந்தியாவது, சாராயமாவது எடுத்து ஆகாரத்திலாவது, தண்ணீரிலாவது விட்டு அடிக்கடி கொடுக்கவேண்டியது.

(2) வாந்தி நன்றாய் நின்றுவிட்டால் மாத்திரம் கொழுப்பில்லாத கறியாவது, கோழிக்குஞ்சு கறியாவது இரண்டு மூன்று பலம் எடுத்து சூப்பு செய்து அதை இரண்டு தடவையாக இரண்டு மணிக்கொருதரமாக கொடுக்கவேண்டியது. அதிலும் இரண்டு தேக்கரண்டி பிராந்தியாவது, பட்டைச் சாராயமாவது சேர்த்துக்கொள்ளவேண்டியது. டின்னில் அடைத்துவரும் கோழிக்குஞ்சு சத்து ஒரு கரண்டியாக 1 மணிக்கொருதரம் கொடுக்கலாம்.

9. ஒத்தணம்:—கெண்டை வாங்குகிறவிடத்திலும், குளிர்ச்சியும் சலவையுமுள்ள இடத்திலும் குரு தைலம் ஒரு பங்கும், மண் எண்ணை அல்லது கற்பூரத்தைலம் 2 பங்குமாகச் சேர்த்து தேய்த்து ஒத்தணமிடவேண்டியது. தேகத்தை குளிர்ந்துபோக விடக்கூடாது. கம்பளி போட்டு தேகத்தைப் போர்த்தி வைக்கவேண்டும். சீசாவில் வெந்நீர் அடைத்து அல்லது மணலாவது, தவிடாவது வறுத்து ஒத்தணமிடவேண்டும். ஒத்தணத்தால் குளிர்ச்சியுடன் போராடவேண்டும் கவனிக்கவும்.

10. கவனிப்பு:—மேற்சொல்லிய பக்குவங்களை முயற்சியாய் விடாமல் கவனித்துச் செய்தால் கைவிடப்பட்ட வியாதியஸ்தனையும் சுகம் பண்ணலாம். ரொம்பவும் அனுபோகமான முறைகள்.

* வயற்றேட்டம் கண்டவுடனே மாத்திரைகளைப் பிரயோகம் செய்தால் ஒரேவேளை மருந்து பூரண சுகம் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது.

11. சுத்தமும் சுகமும்:—மலம்-நீர்-வாந்தி கொஞ்சமும் தங்காதபடி மணல்போட்டு எடுத்து புதைத்துவிடவேணும். அப்போதைக்கப்போதே சுத்தம் பண்ணவேணும். பலவிடங்களில் மலம்-வாந்தி சிதறிக்கிடந்துதான் வியாதியானது மற்றவர்களையும் பிடித்துக்கொள்ளுகிறது. குளிர்ந்து போனதும், பழமையானதுமான பதார்த்தங்களை ஒருவரும் சாப்பிடக் கூடாது.

12. நீர் பிரியாதிருந்தல்:—ரொம்ப கஷ்டப்படுகிறவர்களுக்கு இரண்டு நாள் கழித்துக்கூட நீர் பிரியும். தண்ணீர்போன்ற ஆகாரம் செல்லச் செல்ல நீர் பிரியும்; இதைப்பற்றி கவலைப்படவேண்டாம். சூப்புடன் 2 கரண்டி பிராந்தி சேர்த்துவரவேணும். அடிக்கடி ஆகாரமும்,

பிராந்தியும் சேர்க்கவேண்டும். ஆகாரத்துடன் அல்லது தண்ணீருடன் வெடியுப்பு 2 குன்றிமுத்து பிரமாணம் சேர்த்துக் கொடுத்துவரவேணும். முதுகின் கீழ்பாதியில் இடுப்பைச்சேர்த்து தைலம் தேய்த்து கடும். ஒத்தணம் போடவேணும்.

13. வலம் நின்று வயற்று ஊத்தம்:—இது சிலருக்கு மட்டும் வருகிறது. ஒரு மருந்தும் சாப்பிடாமலிருப்பவர்களுக்கூட இவ்வித நிலைமை ஏற்படுகிறது. இதற்கு அருமையானது ஹெல்த் பில்ஸ்தான் ஒவ்வொரு மாத்திரையாக ஒரு மணிக்கொருதரம் உபயோகப்படுத்தவே வலம் சற்று கழிந்து வயற்று ஊத்தம் இறங்கிவிடுகிறது. வயற்றில் தைலத்தை தேய்க்கவேண்டும். மனம் சடையாமல் எல்லாப் பக்குவங்களும் செய்யவேண்டும்.

(2) அல்லது அரை வீசம்படி ஜலத்தில் 2 சுண்டக்காய்ப் பிரமாணம் சோப்பையும், 2 ஹெல்த் பில்சையும் கறைத்து ஆசனத்துக்குள் பிஸ்காரியால் செலுத்த 10 நிமிஷத்தில் வலம் கழியும்.

ஜன்னி 13, வாதம் 80க்கும் குருமாத்திரை 12 பக்கம் பார்க்கவும். இந்த பக்குவங்களையும் கவனிக்கவும்.

14. உதவி செய்பவர்கள்:—வியாதியஸ்தர்களுக்கு பயமுண்டாக்கும் வார்த்தைகளையாவது, முகச்சடைவுகளையாவது காண்பிக்கவேகூடாது. உற்சாகத்துடனும் தைரியத்துடனும் உதவி செய்யவேண்டும். உதவி செய்பவர்கள் ரொம்பவும் சூடான ஆகாரங்களை சமைத்த உடனே சாப்பிடவேண்டும். வீட்டிலுள்ள எல்லாருமே வெறும் வயறுயிராமலே எதாவது சூடாய் சாப்பிடவேண்டும். வெறும் வயற்றுடனிருந்து ஒருவரும் உதவி செய்யக்கூடாது. அப்படிப்பட்டவர்களை வியாதி தொத்திக்கொள்ளும்.

## 3. GURU THYLAM.

Bottle As. 10. Dozen Rs 5—8—0.

V. P. Charges 1-4 Bottles As. 5.

There are hundreds of Thylams and Balms in the Market of which some are useless. After studying and observing their actions minutely we have prepared this Thylam with great scientific instructions. We can assure you of its marvellous effects and its superiority over all others which you have hitherto used. It is "Nulli Secundus."





We have it for sale at a low price so that it might be in the hands of everybody, both Poor and Rich alike.

## 3. குரு தைலம்.

புட்டி. அணா 10. டசன் ரூ. 5—8—0.

1-4 புட்டி வி. பி. தபால் செலவு அணா 5.

1. குணமாகும் வியாதிகள்:— வாய்வு வலிகள், நரம்பு வலிகள், பிடிப்புகள், சுளுக்கு வலிகள், கைகால் குளிர்ச்சியுண்டாயிருந்தாலும், கெண்டை இழுத்தாலும் இதைத் தேய்த்து ஒத்தணமிடவேண்டியது. சிறு பிள்ளைகளுக்கு இது உயிர்த்தோழமையான மருந்து வாய்க்குள்ளிருப்பதினால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கும் நெஞ்சில் கபம்கட்டி திக்கிக்கென்று மூச்சுவிட்டு காய்ச்சலுடன் வாதைப்படும் பிள்ளைகளுக்கும் வயற்றுப் பொருமல், வயற்று வலியினால் கஷ்டப்படும் பிள்ளைகளுக்கும் இதை அந்தந்தவிடங்களில் நன்றாய்த் தேய்த்து சற்று ஒத்தணமிட வெகு ஆச்சரியமான குணங்கள் கொடுக்கிறது.




:o:

ஜன்னி 13, வாதம் 80—க்கும் சிறந்த பக்குவங்கள் (பக்கம் 13) அதில் குருமாத்திரை-குரு தைலத்தின் உபயோக முறை நன்றாய் கவனிக்கவும்.

2. தலைவலி-கபால இடி-பிரடிக்கனம்:— இவைகளுக்கு அந்தந்த இடங்களில் தேய்க்கவேண்டியது. கைகண்ட அவுஷதம். கைகுட்டையில் 10 சொட்டு வைத்து மூக்கில் முகரவேண்டியது.

3. முழங்கால் வலி-கணுக்கால்-கைவலிகள்-உலைச்சலுக்கும்:— இதைத்தேய்க்கவேண்டியது. சகல வாதங்களுக்கும் இதைவிட சிறந்தது வேறில்லை. இதை தேய்த்து ஒத்தணமிடுவது உத்தமம். எருக்கலம் இலையில் தடவி வைத்துக்கட்டலாம்.

4. பல்வலிக்கும் பல் அரணைக்கும்:—ஒரு புளியங்கொட்டையளவு சீனக்காரத்தை பொடித்து அதில் குரு தைலம் விட்டு குளப்பி வலிக்கிறவிடத்தில் நன்றாய்த் தேய்க்கவேண்டியது. உடனே சுகமாகும்.

5. தேள் கடிக்கு:—கொட்டியவிடத்திலும், நெறியிலும் குரு தைலம் 5 நிமிஷம் வரை தேய்க்கவேண்டியது. அந்த இடம் துவக்கி நெறி வரை குளிர்ந்த தண்ணீர் கால் மணி வரை தெளிக்கவும்.

6. கட்டிகள் புறப்பாடுகளுக்கு:— பச்சரிசி மாவு களி கிண்டி அதில் சூட்டுடன் 10 சொட்டு தைலம் விட்டு கிளரிக்கட்ட வலி குற்றல் நிற்கும்.

7. கெண்டை வாங்குவதற்கு:— ஒரு பங்கு குரு தைலம்-2 பங்கு கற்பூரத்தைலம் (Turpentine) அல்லது மண் எண்ணை சேர்த்து நன்றாய்த் தேய்க்கவும்.

8. மொழியில் அடி:—மொழி வீக்கம்-ரத்தக்கட்டு-சதை பிரட்டல் இவைகளுக்கு குரு தைலத்தை நன்றாய்த் தேய்த்து ஆட்டுக்கோமியம் அல்லது மாட்டுக்கோமியத்தில் சோத்துக்கத்தாழையை சீவி போட்டு சற்று சுடவைத்து கட்டவும். இப்படி தினம் ஒரு தடவை கட்டவும். இப்படி செய்துவந்தால் நாள்பட்டதுங்கூட சுகம் ஆகும். அதிக வலியும்-வீக்கமும் இருந்தால் மெதுவாய்த் தேய்க்கவும்.

9. வாதம் 80-க்கும்:—தொட்டால் வலி உள்ள வாதத்துக்கு வெண்ணீர் வைத்து நன்றாய் ஒத்தணமிட்டு அதன்பின் தைலத்தை சளம்ப பூசி மெதுவாய்த் தேய்க்கவும். அமுக்கினால் சாந்தப்படும் வலி-கடுப்புக்கு பலமாய்த் தைலம் தேய்த்து ஒத்தணமிடவேண்டியது.

---

## ☞ உள்ளுக்கு சாப்பிடலாம்.

10. வயற்று உப்பிசத்திற்கு:— 10 சொட்டு குரு தைலத்தை எடுத்து வென்னீரில் விட்டாவது அல்லது சீனியில் விட்டாவது உட்கொள்ள உடனே நிவர்த்தியாகும். பிள்ளைக்கு $1\frac{1}{2}$ சொட்டு முதல் 2 சொட்டு வரை கொடுக்கலாம். இது லேசான வயற்றோட்டத்தையும் குணப்படுத்தும்.

11. ஜலதோஷத்திற்கு:— 5 சொட்டை வெற்றிலையில் வைத்து அல்லது சீனியில் சேர்த்து சாப்பிட குணம் தரும். காலை மாலை சாப்பிடலாம். குழந்தைகளுக்கு, சொற்பமாய் உபயோகிக்கலாம்.

12. இருமல்கள்—புகைச்சல்கள்—நெஞ்சுசளி இவைகளுக்கு:— 10 சொட்டு தைலத்தை தேனில் குழப்பியுங் கொடுக்கலாம். ஜுரம், ஜுரத்துடன் கபம் இவைகளும் சுகப்படும். ஆடாதோடை கஷாயத்திலும் கொடுக்கலாம்.

---





13. பிள்ளைகளுக்கு:—மேல்காட்டிய முறைப்படியே கொடுக்கலாம். அளவு அரை முதல் 2 சொட்டு வரை.

☞ அநேகம் பிள்ளைகளுக்கு தைலத்தைமட்டும் வெளிப்பிரயோகமாக வியாதி உள்ள இடங்களில் தேய்க்கவே துணைப்படுகின்றது.

14. கபவாதம்—கபவாத ஜுரத்துக்கு:— நெஞ்சில் தைலத்தை சளம்ப பூசி அடிக்கடி ஒத்தணமிடவேண்டியது. உள்ளுக்கு 10 சொட்டு தைலத்துடன் 2 கடலைப்பிரமாணம் சூடகம்-சீனியும் சேர்த்து தினம் 3 வேளை உள்ளுக்கு கொடுத்து ஆடாதோடை இலை-நீர்முள்ளிஇலை சேர்த்து கஷாயம் செய்து சாப்பிடவும். மலக்கட்டுக்கு குரு மாத்திரை அல்லது பித்த மாத்திரை 1 சாப்பிடவும். அவசியமானபோது.

பத்தியம்:—மற்ற ஜுரங்களுக்குப்போல், ஆகாரத்துடன் 1 அல்லது 2 டீ கரண்டி பிருந்தி அல்லது பட்டைச்சாராயம் சேர்க்கவும்.

15. கக்குருமலுக்கு:—2 மணிக்கொருதரம் தொண்டையில் தைலத்தை நன்றாய்த் தேய்க்கவும். 1 சங்கு அல்லது 2 சங்கு கள்ளில் (Toddy) 2 சொட்டு குரு தைலம் அல்லது கஸ்தூரி காரமாத்திரை 1 அல்லது 2 சேர்த்து காலையில் சாப்பிடவும். சிறு எலுமிச்சங்காயளவு ஊமிபோக்கின ஓமத்துடன் 10 சொட்டு குரு தைலத்தை பிசரி துணியில் முடிந்து வைத்துக்கொண்டு முகர்ந்துகொண்டு இருக்கும்படி செய்யவேண்டியது. இப்படி ஒழுங்காய்ச் செய்தால் ஒருவாரத்தில் சுகம் வரும்.

16. ஜன்னி-வலிப்பு-மூடுஜன்னி-மயக்கம்:—இவைகளுக்கு பொருத்துகளில் தேய்க்கவும் பிடரி குருக்கின் நடு ஓடை, முழங்காலுக்கு கீழ் கெண்டைச்சதை இவைகளில் தேய்க்க தலையிலுள்ள விஷம் இறங்கும் ஒரு கடுகளவை கலிக்கமாகவும் அல்லது மூக்குக்குள் ஒரு சொட்டு தைலத்தை கோழி இறகால் தடவ மூர்ச்சை விடும். 10 சொட்டு தைலத்தை நாக்கிலும் தடவவும். வெற்றிலையில் தடவி மென்று கண்-காது-மூக்குகளில் ஊதலாம்.

17. வாந்தி-வயற்றுவலி:—இவைகளுக்கு வயற்றில் நன்றாய்த் தேய்த்து ஒத்தணமிடவேண்டியது. ஒத்தணமிடுவது தைலத்தின் குணத்தை அதிகப்படுத்துவதற்காக, அதை பரிஷ்காரமாய்ப் பார்க்கலாம். மேலும் 5-10 சொட்டு தைலத்தை உள்ளுக்கு சாப்பிட்டு இரண்டு மிடர் வென்னீர் சாப்பிட நிற்கும். சிசுக்களுக்கு வயற்றில் தேய்த்து பொருக்க ஒத்தணமிடவும். வெளிப்பிரயோகம் மட்டுமே போதுமானது.

18. ஒத்தணமிட்டு தைலம் தேய்த்தால் தைலத்தின் குணம் 2 மடங்கு அதிகப்படுகின்றது.

---

## மிருகங்களுக்கு.

19. இந்த தைலத்தை மனிதருக்கு உபயோகம்பண்ணுவதுபோலவே **மிருகங்களுக்கும், வெளிப்பிரயோகமாகவும், உள்ளுக்கும் கொடுக்கலாம்.** அளவு விபரம் குரு மாத்திரையில் பார்க்கவும். (பக்கம் 22.)

20. குதிரைகளுக்கு:—கடுமையான வயற்றுவலிக்கு கோழி இறகில் தைலத்தை சளம்ப துவைத்து நீர்தாரைக்குள்ளும், ஆசனத்துக்குள்ளும் செலுத்தி எடுக்க வெகு ஜடுதியில் வயற்றுவலி விடும். உள்ளுக்கும் தேனில் கலந்து ஊட்டலாம்.

21. மூர்ச்சைக்கு:—கலிக்கமிடலாம், கண்-காதுகளில் ஊதலாம்.

22. வயற்றேட்டத்துக்கு:—15 சொட்டு தைலம்-சிறு புளியங்கொட்டைப்பிரமாணம் மயில்துத்தம் வைத்து சேர்த்தறைத்து உள்ளுக்கு கொடுக்கவும். அவசியமானால் 2 மணிக்கொருதரம் கொடுக்கலாம். குரு தைலம் சகல வலிகளுக்கும் ரொம்ப அருமையானது. நிகரான தைலம் வேறு உண்டோவென்று பார்ப்பீர்களாகில் இதை உபயோகித்தவர்கள் வேறு கிடையாது என்றே சொல்லுவார்கள். உபயோகித்துப் பாருங்கள் அப்போதுதான் உண்மை விளங்கும்.

---

## 4. GURU TOOTH POWDER.

Tin As. 5. Dozen Rs 3—0—0.
Small Tin As. 3. Dozen Rs 1—14—0.



This tooth powder has given entire satisfaction to every body that tried this. Till one tries it upon himself, no remark of any kind either good or bad, could be drawn. This is a safe and reliable tooth powder and does not corrode the teeth; many praise its efficacy. The Guru Tooth Powder is very effective because it is a combination of Ayurvedic and Europeon drugs. Harmless but more effective. WE HAVE VERY LARGE DEMANDS FROM ALL PARTS.

V. P. Charges 1—3 Tins As. 5.





## 4. குரு பல்பொடி.

Wide known. Specific.

டின் அணா 5. டசன் ரூ. 3—0—0.
சின்ன டின் அணா 3. டசன் ரூ. 1-14—0.

JUN 1920

1. நீங்கள் இதற்குமுன் உபயோகித்துவந்த பற்பொடிகள் யாவற்றிலும் இது சிறந்தது என்று சொல்ல ஐயமில்லை. அதை உபயோகித்துவந்த நண்பர்கள் வெகு திண்ணமாய் எழுதுவதுபற்றி நாமிவ்வளவு உருதியாய்ச் சொல்லத் துணிந்தோம். பற்களை கெட்டிப்படுத்துகிறது. பல்சீள் பல்வலி-பல் கூச்சம்--பல் தேய்தல்--பல் சொத்தை--பல் அரணை-இகர் புண்கள்-வாய் அரோசியம் சகலமும் இந்த பொடியால் குணமாகின்றது. அது மாத்திரமா? அவ்வித தொந்தரவுகள் திரும்ப உண்டாகாதபடி பாதுகாத்துவரும் மிகவும் அருமையான பற்பொடி இது.

2. அநேகர் பெருமையாய் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் பற்பொடிகளை வாங்கி உபயோகித்து பல் கருத்து இகரைத்தின்று வாய் குமட்டல் உண்டாகி வருத்தப்படுகிறார்கள். பல் கறை பிடிக்கும் பற்பொடிகள் முதலில் குணம்போல் தோன்றி பின்பு அவைகளே பற்களுக்கு பிரதிகூலமாயிருந்து பற்களை சீக்கிரம் விழப்பண்ணுகிறதைக் காண்பீர்கள். இதுவே அனுபோகமும் சாஸ்திரமும்.

3. ஆனால் எங்கள் குரு பல்பொடியானது மேற்சொல்லிய குணங்கள் நீங்க அமைக்கப்பட்டது. பல் கருக்காது. பல் வெண்மை கொடுக்கும். பற்களின் ஒளி நீங்காது. பற்களை பாதுகாக்கும், வியாதியை நீக்கும் சகல நற்குணமும் இதற்குண்டாகையால் எல்லோரும் மெச்சிப் பேச இடம் பெற்றது.

4. உபயோக விபரம்:— தினம் காலையில் உபயோகிக்கவேண்டியது. பச்சை தண்ணீராவது, வென்னீராவது உபயோகிக்கலாம். அவரவர் சவுகரியத்தைப் பொருத்தது.

அவசியமானால் காலை-மாலை உபயோகிக்கலாம்.

5. அதிக வலி:—கால் மணிக்கொருதரம் பல்லில் அள்ளி வைத்து தேய்க்க குணம் தரும்.

**1916-ஆம் தங்கமெடலும் பெற்றது.**

வி. பி. தபால் சார்ஜ் 1—3 டின் அணா 5.

## 5. GURU HEALTH PILLS.

## குரு ஹெல்த் மாத்திரை.

(40 மாத்திரை) புட்டி அணா 5. டசன் ரூ. 3.

Bottle As. 5. Doz. Rs. 3. (V. P. Charges 1-6 Bottles As. 5.)

FOR CHILDREN. FOR CHILDREN.

This is an excellent and efficient laxative for Children. It can be given to very young infants also. A useful medicine for children should be in hand always. This cures almost all the diseases of Children. This is a special Pill.

DOSE:—Half to 2 or 3 pills – (for babies under four months half to 1 pill).

**குழந்தைகள் வியாதி விஷயத்தில் குரு மாத்திரை உபயோக விபரத்தையும் கலந்து வாசித்துக்கொள்ளவும். அநேக விஷயங்கள் அதில் பார்க்கலாம்.**

## பாலர் வைத்தியம்.

### அறைவீட்டுக் குழந்தைகளுக்கு.



1. இது சிறு பிள்ளைகளுக்கு மிகவும் பிரயோஜனமான மருந்து. இதை உபயோகம் செய்துவரும் வீட்டில் பிள்ளைகளுக்கு வியாதி வருவது அபூர்வம் இது உண்மையே. இது பிள்ளைகளுக்குப் பிராணதோழனென சொல்லத்தகும். இதை வாரம் இருமுறை அல்லது ஒரு தடவை உபயோகம் செய்தால் நல்லது. விளக்கெண்ணெ, வேப்பெண்ணெ இவைகளில் சேர்த்துக்கொடுக்கலாம். உஷ்ணத்தினால் உண்டாகும்வியாதிகளுக்குவிளக்கெண்ணெயிலும், குளிர்ச்சி-ஜன்னி இவைகளால் உண்டாகும் வியாதிகளுக்கு வேப்பெண்ணெயிலும் சொடுக்க கைகண்ட குணம் தரும். (அரை அல்லது ஒரு கரண்டி எண்ணெயுடன்) மாத்திரையை முதலில் ஒரு கரண்டி தண்ணீரில் கறைத்துக்கொண்டு அதன்பின் எண்ணெ கலந்துகொடுக்கவும்,





2. பிள்ளைகளுக்கு சேனை ஊத்தும் விபரம்:— சில விடங்களில் பிள்ளைகளுக்கு வெல்லத்தைக் கொஞ்சம் கறைத்து இரண்டு மூன்று கரண்டியாக கொடுப்பார்கள். சில தேசங்களில் சீனி சர்க்கரையை தண்ணீரில் கறைத்து ஊற்றுவார்கள். சில பாகங்களில் அதிமதுரத்தை தண்ணீரில் ஊரவைத்து ஊற்றுவார்கள், இரண்டையும் கலந்து சிலர் செய்கிறார்கள். அது தேகத்தையும்; அப்பியாசத்தையும் பொருத்தது. இப்படி சேனை ஊற்றுவது பிள்ளையின் கட்டு மலம் கழியும் வரை, இவ்வித ஆகாரத்தை ஊற்றுகிறார்கள் பின்பு தாய்ப்பாலையாவது மாட்டுப்பாலில் தண்ணீர் சேர்த்தாவது ஊற்றவேண்டும். முதல் நாளிலே பிள்ளையை தாயாரிடம் பால் உண்ணவிடுவது பிள்ளைக்கும் தாய்க்கும் நல்லதே. மலமும் நன்றாய் கழியும்.

3. பிள்ளைகளுக்கு வயறு கழிய:— ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி விளக்கெண்ணெ கொடுக்கலாம். விளக்கெண்ணெ கொடுக்க பயந்தவர்கள் குரு ஹெல்த் பில்சை அரைக்கரண்டி பாலில் கறைத்து அத்துடன் அரைக்கரண்டி விளக்கெண்ணெயும் சேர்த்துக் கலந்து கொடுத்தால் மிகுந்த நன்மை தரும். இந்த ஹெல்த் பில்சை சாதாரணமாய் விளக்கெண்ணெயுடன் கொடுத்து வந்தால் குழந்தைகளுக்கு மாந்தம்—கிரந்தி—கரப்பான் முதலியவைகள் வராது என்பது திட்டம்.

4. சிசுக்களுக்கு வாந்தி:— சில குழந்தைகளுக்கு சேனை ஊற்றினாலும் எதுக்கழித்து வாந்திபண்ணும் அதற்கு பரிகாரம் கோவையிலைச்சார் 1 கரண்டி அல்லது அரைக்கரண்டி காலை-மதியம் அவசியமானால் 3 அல்லது 4 தடவை கொடுக்க குமட்டல் நின்று குணம் தரும். அந்த சக்கையுடன் 10 மிளகும், 10 சொட்டு குரு தைலமும் வைத்தரைத்து மேல்வயற்றில் பூசவும்.

5. சேங்கிரந்தி:— இது பிறந்த வீட்டில் வரும் வியாதி. இதின் குணம் கால் கை சிவப்பேறும் மலங்கட்டும்-வயற்றில் காற்றடைக்கும்-சிறுசத்தமாய் அனத்தும். உடனே முருங்கையிலைச்சார் 30 சொட்டுடன் அரைகரண்டி விளக்கெண்ணெயுடனும் ஒரு ஹெல்த் பில்ஸ் அல்லது (கால் குரு மாத்திரைக் கொடுக்கவேண்டியது.) வயற்றில் குரு தைலம் தடவி வெந்நீரில் துணியை நனைத்து பிழிந்து குழந்தை பொருக்கக்கூடிய சூட்டுடன் துணியை வயற்றில் போட்டு மூடவும். இப்படி ஒத்தணம் மட்டும் மணிக்கொருதரம் அல்லது இரண்டு மணிக்கொருதரம் செய்துவர கைகண்ட குணம் தரும். ஒவ்வொரு தடவையும் கால்மணி அரைமணி நேரம் விடாமல் ஒத்தணமிடவும். குளிப்பாட்டும்போது வேப்ப இலையைத் தண்ணீரில் போட்டு காய்ச்சி அந்த தண்ணீரில் குளிப்பாட்டவும். பின்பு அவசியமானால் கஸ்தூரி கர்ப்பமாத்திரை கொடுத்துவரவும்.

6. கருங்கிரந்தி:—இதுவும் பிறந்த இரண்டு மூன்று நாளைக்குள் கூட துவக்கி கொல்லக்கூடிய வியாதி. வியாதி கண்டவுடன் குரு மாத்திரை கால் மாத்திரை அல்லது ஹெல்த் பில்சை அளவுப்படி எடுத்து ஒரு கரண்டி தாய்ப்பாலில் கறைத்து ஒரு கரண்டி விளக்கெண்ணெயும் சேர்த்து அத்து.

டன் ஒரு மிளகு பிரமாணம் உப்பு சேர்த்து கசக்கி முறுங்கையிலைச்சார் 20 சொட்டு பிழிந்து இவை எல்லாவற்றையும் சேர்த்துக் கொடுக்கவும். இப்படி காலைதோறும் இரண்டு அல்லது மூன்று நாள் அவசியமானுல் பின்னும் இரண்டு மூன்று நாள் வரை கொடுக்க வியாதி நீங்கி பூரண சுகம் தரும். வயற்றில், பொருத்துகளில் தைலம் தடவி ஒத்தணமிடவும். ஹெல்த் பில்சை அனுப்பானங்களுடன் கொடுத்த பின் மதியம்-சாயந்திரங்களில் கஸ்தூரி காரமாத்திரையை அளவுப்படி உபயோகிப்பது மிகுந்த நன்மையைத்தரும்.

7. குழந்தைகளுக்கு ஜுரமிருந்தால்:— ஹெல்த் பில்சை அரைக்கரண்டி வேப்பெண்ணையுடன் கொடுத்து 3-மணிக்குப்பின் 4 சங்கு தண்ணீரில் இரண்டு மூன்று குன்றிமுத்து இடை வெடியுப்பை கரைத்து அதில் ஒரு சங்கு வெடியுப்பு தண்ணீர் எடுத்து காரமாத்திரையில் ஒன்றை கரைத்து தினம் 2 அல்லது 3 வேளையாகக்கொடுக்க குணந்தரும். மலபிரவிர்த்தி அவசியமானுல் மறுபடியும் மறுநாளும் ஹெல்த் பில்ஸ் கொடுக்கலாம். மற்றப்படி அவசியமில்லை. கஸ்தூரி மாத்திரையும், வெடியுப்பு சேர்ந்த தண்ணீரும் குணப்படுத்த போதுமானது.

குரு மாத்திரை அத்தியாயத்தில் மற்ற விபரங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. வாசித்துப் பார்க்கவும்.

## ☞ குழந்தைகளுக்கு வரும் வியாதியின் விபரம்.

8. செங்கிரந்தி—கருங்கிரந்தி—கிரந்தி—பாலதோஷம்-மாந்தம்-கணம்-பிளி-கரப்பான் இவைகளே. இவைகளை இங்கிலீஷ் முறைப்படி மூல காரணத்தை ஆதாரமாகக்கொண்டு பேரிட்டிருக்கிறார்கள். இவ்வியாதிகளில் மாந்தமானது தாய்ப்பால் மற்ற வித்தியாசமான ஆகாரங்களிலிருந்தும் பின்பு மாந்தம்-புளிப்பு இவைகள் மாந்தம் நாள் செல்ல விடப்பட்டதனுலும்: இத்துடன் தாய்தந்தையர் திரேக கேடுபாடுகள் சேர்ந்தால் கணமும்-கரப்பான் முதலியவைகள் தூர் இரத்தத்திறுைம் உண்டாகிறது. இவைகள் எல்லாவற்றிற்கும் ஹெல்த் மாத்திரையே கைகண்டது அனுபோகத்தில் பார்க்கலாம்.

## மருந்தின் குணங்கள்.

9. ஹெல்த்பில்சானது வயற்றில் புளிப்பு-பால்மாந்தம்-பால்திரட்சி-தொக்கம்-ஜன்னி-ஜுரம்-சகலவித மாந்தம்—வயற்றுவலி—சளி—இருமல் மற்றும் தொற்று வியாதிகள் சீர்தட்டு—தோஷம் இவைகள் உண்டாகாதபடி





பிள்ளைகளை வெகு பத்திரமாய் பாதுகாத்துவருவதுடன் இவ்வியாதி வந்தாலும் இதை உபயோகிக்கவே விலகிப்போம். சிரங்கு—கரப்பான் இவைகள் எல்லாம் ஓடிப்போம்.

இந்த ஹெல்த் பில்சை அவசியம் தோணும்போதெல்லாம் உபயோகிக்கவேண்டியது.

10. ☞ பிள்ளைகளின் மலம்தான் சகல வியாதியையும் தெரிவிக்கும் அறிகுறியாய் இருப்பதால், பிள்ளைகளின் மலம் வித்தியாசமான நிறம்-குணம்-பிசுபிசப்புடன் போவதாய் கண்டவுடன் இந்த மாத்திரையை உபயோகம் செய்யவேண்டியது.

11. பிள்ளைகள் கனதியாயிருப்பதாக தெரிந்தாலும்-நாக்கு வெள்ளையாய் அழுக்கடைந்திருந்தாலும்-மலத்தில் வித்தியாசம் தோன்றினுலும் பிள்ளைகள் மந்த பதார்த்தங்களைத் தின்று வருவதாய்த் தெரிந்தாலும் மாத்திரையை உபயோகம் செய்யவேண்டியது.

12. ஹெல்த் பில்ஸ்:—பாதி மாத்திரை முதல் 2 வரை வயதுக்குத் தக்கபடி எடுத்து பாலில் அல்லது வெந்நீரில் அல்லது தேனில்கரைத்து கொடுக்கவேண்டியது. இவைகளுடன் அரைக்கரண்டி விளக்கெண்ணை சேர்த்தே கொடுப்பது ரொம்ப நன்மை. சமயத்துக்குத்தக்கதாக வேப்பெண்ணையும் சேர்த்து கொடுக்கவும். இரண்டு தடவை மலம் நன்றாய்க் கழியக்கூடிய அளவுதான் அனுபோகமானது. அறை வீட்டுக் குழந்தைகள் முதற்கொண்டு 5 வயது குழந்தைகள் வரையில் உபயோகிக்கலாம்.

## கவனிப்பு.

உஷ்ணத்தினுல் உண்டாயிருக்கும் வியாதிகளுக்கு விளக்கெண்ணையிலும், ஜன்னி-குளிர்ச்சியினுல் உண்டாயிருக்கும் வியாதிகளுக்கு வேப்பெண்ணையுடனும் கொடுக்கவும். பாலில் அல்லது தண்ணீரில் மாத்திரையைக் கரைத்து பின்பு எண்ணை சேர்க்கவும்.

## பாலதோஷ குணம்.

13. பொது குறிப்புகள்:—மலம் கழியும்-வாந்தி-ஒக்காளம் மேல்வெதும்பும்-கண் வளையமிடும்-உச்சி பள்ளப்படும்-தாகமெடுக்கும்.

தோஷத்தில் பலவிதமிருக்கிறது. அவைகளைப்பற்றி தனித்தனியாய் சொல்ல இப்பிரிதியில் சாத்தியப்படாது. பொது குறிப்புகளை கவனித்துக்கொள்ளவும்.

பின்பு ஹெல்த் பில்சை உபயோகிக்காமல் காலை-மாலை 4 அல்லது 5 தினம் வரை காரமாத்திரையை மட்டும் மேற்படி கஷாயத்துடன் கொடுக்க கைகண்ட குணம் தரும்.

27. மாந்தத்தின் உஷ்ணம், கணத்தின் உஷ்ணம்:— இவைகளுக்கு சிற்றாமணக்கு எண்ணை 10 அல்லது 20 சொட்டு மேற்படி கஷாயத்துடன் சேர்த்தால் நல்லது.

28. கரப்பான் வகை 18 ஆக பிரித்திருக்கிறது:—இதற்கு ஹெல்த் பில்சை சிற்றாமணக்கெண்ணையுடன் 3 அல்லது 4 நாள் காலையில் கொடுத்து வரவேண்டியது. பின்பு வாரம் இருமுறை ஒழுங்காய் காலை நேரத்தில் கொடுத்துவர வேண்டியது.

* புண்களுக்கு சகல ரணக்களிம்பு போட குணமுண்டாகும் அல்லது (ஜீமா) களிம்பு கைகண்டது எழுதவும்.

தலையிலுண்டாகும் கரப்பான்களுக்கு மனோரமா கூந்தல் தைலம் நல்ல குணம் கொடுத்து சுகப்படுத்துகிறது. ஜீமா களிம்பும் கைகண்டது

29. விப்புருதி கட்டிகள்—ஓடி ஓடி கட்டும் கட்டிகள்:— இதற்கு ஹெல்த் பில்சை ஒரு கரண்டி சிற்றாமணக்கெண்ணையுடன் மூன்று நாள் காலையில் கொடுக்கவேண்டியது.

பின்பு ஒரு வாரத்திற்கு மாவிலிங்கப்பட்டை-பச்சை நன்னாரிவேர்-சீந்தில்கொடி சமநிறையாய் எடுத்து நன்றாய் அரைத்து பெரிய சுண்டைக்காய் பிரமாணம் வெள்ளாட்டுப்பாலில் அல்லது வென்னீரில் கரைத்து கொடுக்கவும். இப்படி காலைதோறும் கொடுக்கவும். தாயும் இப்படி ஒரு பெரிய கொட்டைப்பாக்கு பிரமாணம் சாப்பிட்டு கரப்பான் பதார்த்தங்கள் முற்றிலும் தள்ளவும். இப்படிச்செய்தால் வேறு கட்டிகள் உண்டாகமாட்டாது. முன் உண்டாயிருந்த கட்டிகள் ஜடுதியில் குணப்படும்.

30. நாள்பட்ட மாந்தம் பிரளி கணம்:— இவைகளினால் உண்டாயிருக்கும் வயற்று தொந்தரவுகள் எல்லாவற்றிற்கும் குரு பாலர் வயற்றோட்ட நிவாரணி ரொம்ப அருமையானது எழுதவும். இந்த மருந்தை புஸ்தகத்தில் சொல்லிய அளவுப்படி எடுத்து வேம்பு-புளி-நுணா-மா-நொச்சி இவைகளின் ஈர்க்கு, தும்பை-துளசி இவைகளின் இலை ஒவ்வொன்றும் 5 சேர்த்த கஷாயத்தில் கொடுத்தால் வியாதி குணப்படுகிறது. ஒரு புட்டி சிலவேளைகளில் 4–5 குழந்தைகளுக்கு சுகம் கொடுக்க போதுமானதாயிருக்கிறது. அனுப்பானங்களில் சிலது தவறினாலும் பரவாயில்லை. உடனே கொடுக்கவும்.

☞ குரு பாலர் வயற்றோட்ட நிவாரணியை வியாதி கண்டவுடனும் கொடுக்கலாம்.





# 6. குரு கோரோஜன மாத்திரை.

40 மாத்திரைகள் அணா 8. 100 மாத்திரைகள் ரூ. 1–0–0.

1–6 புட்டி வி. பி. தபால் செலவு அணா 5.

1. ஹெல்த்பில்சுடன் நயம் கோரோஜனை சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. ஹெல்த் பில்சில் சொல்லிய சகல வியாதிக்கும் அருமையானது. கோரோஜனை மாத்திரைகளில் இது மிக சிறந்த முறை.

2. கோரோஜனை சேர்ந்திருப்பதால் மேலான குணத்தை உடையதாக இருக்கிறது.

# 7. கஸ்தூரி கார மாத்திரை.

40 மாத்திரைகள் புட்டி அணா 5. டஜன் ரூ. 3—0—0.

1–6 புட்டி வி. பி. தபால் செலவு அணா 5.

1. இது பிள்ளைகளுக்கு மிகவும் அருமையான மருந்துகளில் ஒன்று. பிள்ளைகளுக்கு அருமையான உறை மருந்து. இதை தலை முழுக்காட்டியவுடன் உபயோகித்து வந்தால் தண்ணீர்-குளிர் இவைகளினால் உண்டாகும் ஜலதோஷம்-ஜுரம் முதலிய வியாதிகள் உண்டாகாது.

2. குழந்தைகள் வியாதிக்கு ஹெல்த் பில்ஸ் கொடுத்த பின்பு சகல வியாதிகளுக்கும், சகல ஜன்னி—ஜுரம்—தோஷம்—கணம்—மாந்தம்—வயற்று வலி-பசியின்மை-சகலகுணபேதங்களுக்கும் இந்த காரமாத்திரைகளை தினம் காலை-மதியம்-மாலை கொடுத்து வந்தால் பிள்ளைகள் வியாதிக்கு வைத்தியரே அவசியமிராது.

3. குழந்தைகள் வைத்தியம் செய்யும் ஒவ்வொருவர் கையிலும் நம் குரு ஹெல்த் பில்சும்-கஸ்தூரிகாரமாத்திரையும்-குரு தைலமும் இருந்தால் பிள்ளைகளுக்கு வரும் யமனுக்கு எதிர்த்து நிற்கலாம். இது திண்ணம் இது அனுபோகம்.

4. குழந்தைகளுக்கு இதற்குமுன் நீங்கள் உபயோகித்துவரும் அநேகவித கோரோஜனை மாத்திரைகள், பால சஞ்சீவி மாத்திரைகளுக்கு அனுப்பானமாக இந்த கஸ்தூரி காரமாத்திரையை உபயோகிக்கலாம். வேறு அனுப்பானமே தேட அவசியமிராது. பலவித மூலிகைகள் சேர்ந்தது. மிகவும் அருமையான முறை.

5. அளவு:—1 முதல் 4 மாத்திரைகள். அறை வீட்டு குழந்தைகளுக்கு கால் அல்லது அரை மாத்திரை போதுமானது.

☞ இது குழந்தைகளுக்கு வயற்றுப்போக்கு செய்யாது. அந்த குணம் ஹெல்த் பில்சுக்குத்தான் உண்டு. வயற்றுப்போக்கு செய்யாமலே அநேக வியாதிகளை குணம் பண்ணும்.

## 7. GURU LEGYAM.

Tin Rs 2—8—0. (Half Pound Net.)

This is a palatable and sweet flavouring Tonic confection to suit the taste of all people.

We have combined in this legyam the safe and sure Vegetable **sexual tonics** of Ayurvedic Shastras together with the selected highly nutritious **phosphites** of British Materia Medica.

☞ A SUCCESSFUL COMBINATION.

These selected cell-constructing-cell-forming-blood-making and vitalizing phosphites are highly extolled by the Homeopathic and Allopathic leading physicians of Europe and America. This Guru Legyam forms an ideal tonic of these days. *It nurishes the brain-tones up the nerves-hardens the bones-enriches the blood and strengthens the muscles.* In fact, it conquers diseases by making the weak and the delicate strong and energetic. *It is a great restorer of lost appetite, last sexual power and lost blood.*

This legyam being a combination has the highest power in toning up broken-down constitutions. Its actions





are pronounced in every way. It surely prevents premature senility. It is a great health restorer of the day. **Almost all the chest diseases are cured.** All kinds of weakness and bloodlessness will be cured. Wasting diseases in the young and old, **Longstanding nervous diseases-such as Headaches-Back headaches-Eyeweakness-Loss of Memory-Biliousness-Bloodlessness are cured.**

This combination legyam is **a great Boon to females** also who grow weaker by child bearing and child nursing. Also it imparts strength and health to their babies by increasing both the quality and quantity of milk. It specially cools their body and strengthens them.

**Children also can take it** easily and with pleasure and it is an efficient Tonic for them also.

*Dose:*—One arecanut size three times daily-half an hour before meals or one hour after meals. **For children** one or two tamarind nut size.

**All those who have mental worry, anxiety, and who have much mental work can have full reliance upon this medicine.**

## 7. குரு லேகியம்.

அரை ராத்தல் டின் ரூ. 2—8—0.

1. ஆயுள்வேத சாஸ்திரத்தில் அமைந்திருக்கும் வெகு அருமையான வீரிய விர்த்தினிகளுடனும், டானிக்குகளுடனும், ஐரோப்பா, அமெரிக்கா முதலான இடங்களிலுள்ள பெயர்போன டாக்டர்கள் பிரபல்யப்படுத்தும் சில ஹைபோபாஸ்பைட்டுகளைச்சேர்த்து லேகிய முறையாய் அரும்பிரயாசையுடன் அமைத்திருக்கின்றோம்.

## இதின் குணங்கள்.

2. திரேகத்திற்கு பெலத்தையும், ஊக்கத்தையுமே கொடுத்து சகல வியாதியையும் மேற்கோள்ளும் ஓர் சஞ்சீவியாயுமிருக்கிறது. பசியை உண்டாக்கும் தீபன சஞ்சீவியாயுமிருக்கிறது. சகல நரம்புகளுக்கும் பெலனும், ரத்தவிர்த்தியும், திரேக புஷ்டிப்பையும் கொடுக்கிறது. ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்துக்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது. குழந்தைப் பேற்றினாலும், பிள்ளைகளுக்குப் பால் கொடுப்பதனாலும், அதிக சூதகப்போக்கினாலும் பெலவீனப்படும் ஸ்திரீகளுக்கு இதைக் கொடுத்தால் சுகமடைகிறார்கள். சிசுக்கள் பெலவீனமாயும், மெலிவாயும் இருந்தால் பால் கொடுக்கும் தாய்மார் இதைச்சாப்பிட்டு வர தாயும் பிள்ளையும் பிரயோஜனமடைகிறர்கள். பால் விர்த்தி செய்யும்.

3. இதில் இருவித மருந்துகள் சேர்ந்திருப்பதனால் தாதுவிர்த்திக்கும், திரேக திடத்திற்கும் ரொம்ப சிரேஷ்டமானது. திரேக உஷ்ணத்தையும் பூரணமாய் மாற்றிவிடுகிறது.

4. அளவு:—ஒரு கொட்டைப்பாக்கு பிரமாணம் தினம் 2 அல்லது 3 வேளை சாப்பாட்டுக்கு 1 மணிக்குப்பின் அல்லது அரை மணிக்கு முன் உட்கொள்ளவேண்டியது, பிள்ளைகளுக்கு 1 அல்லது 2 புளியங்கொட்டைப்பிரமாணம்.

## 8. CHANDR... சந்திரகாந்த மாத்திரை.

**60 மாத்திரைகள் அடங்கிய புட்டி ரூ. 2-8-0.**



1. இதில் நிக்கல், பாரியம், தங்கம், அப்பம் இவைகளை உயர்ந்த மாதிரியாகச்செய்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் அனுபோகமான மருந்து. இதை அனுபவித்தவர்களுக்கும் இதை அனுபவிக்கிறவர்களுக்குமே இதன் அருமை தெரியும்.





## குணமாகும் வியாதிகள்.

2. நல்ல பசி உண்டாக்குகின்றது. திரேகபலத்தைக் கொடுக்கின்றது. வயற்றுவலி, வாய்வு உபத்திரவமுள்ளவர்களுக்கு இது ஓர் சஞ்சீவியாய் உதவுகின்றது. எவ்வித வயற்று வலியையும் நிவர்த்திக்கின்றது. திரேகவலி, கைகால் கடுப்பு தீரும். நீடித்த தலைவலி உள்ளவர்களுக்கு இது படிப்படியாய் நிவர்த்திபண்ணி பூரணசுகம் கொடுக்கின்றது. சூதகம் ஜாஸ்தியாய் படுபவர்களுக்கு இது பூரண சுகத்தைக்கொடுத்து ஒழுங்கு படுத்துகிறது.

3. ☞ ஸ்திரீகளுக்குப் பிரசவம் தாமதித்தாலும், பிரசவவலி குறைந்து காணப்பட்டாலும், பிரசவவலி வேறு பக்கமாய் நோக்கியதால் வலி சகிக்கமுடியாததாகவிருந்தாலும் இவ்வித குணங்களுக்கும் இதுவே கைகண்ட மருந்து மூன்று மாத்திரைகளைக்கொடுக்கவேண்டியது. யாதொரு குற்றமின்றி சரியான வலியாய் உண்டாக்கி ஒழுங்காய் பையைச் சுறுங்கச்செய்து சிசுவைத் தள்ளுகிறது. ஆபத்துக்குதவும் மருந்து. நஞ்சு கொடி விழத்தாமதித்த காலத்தும் லேசாய்த் தள்ளிவிடும்.

4. சூதக கால வயற்றுவலியையும் இரண்டு முறை சாப்பிடவே நிறுத்திப்போடும். சூதககாலத்திலும் சிலருக்கு கண்டிப்பான வலியிருக்கும் அச்சமயத்திலும் மூன்று மாத்திரைகளைக் கொடுக்கவே வலியை நிறுத்தும். பிரசவத்திற்கு அடுத்தாப்போல் வரும் சுண்டு வயற்றுவலிக்கும் உபயோகித்து நல்ல ஆகாரம் கொடுக்க குணம் தரும்.

5. * மற்றும் வியாதிகளுக்கு அதனதன் உபத்திரவங்களுக்குத்தக்கதாக மூன்று மாத்திரை வரையில் உபயோகம் செய்யலாம். இந்த மாத்திரைகளை ஒரு மாசம் வரை உபயோகித்து வந்தால் நீடித்த வாய்வு உபத்திரவங்கள், சூதக உபத்திரவங்கள் நிவர்த்தியாகி பூரணமாய்க் குணப்படுகின்றது.

6. அளவு:—1 அல்லது 2 காலையிலும், மாலையிலும் அவசியமுள்ள வரை சாப்பிடவும்.

## THE GREAT SEXUAL, BLOOD AND NERVINE TONIC.

### 32 TEA-SPOONS BOTTLE Rs. 3—0—0.

This preparation contains superior Remedies to build up the 3 stars of the Human System, (Sexual Blood and Nervous Power.) This combination acts speedily upon the system, and effects a positive cure.

**"IT IS SECOND TO NONE."**

**Dose:**—Half to three quarter Tea-spoonful, twice or three times daily, half an hour after meals, in an ounce of water.

## 9. குரு தாதுவிர்த்தி மருந்து.

...ம்பவும் அருமை
32 டீ கரண்டி கொண்ட பட்...அமைத்த பக்குவம். அனு
...ளுக்கே இதன் அருமை தெரியும். ஆயுள்வேத
...குவமும்-ஐரோப்பிய பக்குவமும் அமைந்தது.

3 STAR

...தர் இச்சைகளினால் தங்கள் தேகத்தின் பெலத்தையும்-ஆண்மைத்தையும் இழந்து-பசி குன்றி-நடக்க முதலாய் பெலன்ற்று மனவருத்தமடைந்து யார் தங்களை மீட்கமுடியுமோவென்று கவலைப்பட்டு திகைத்து நிற்கும் மானிடர்களுக்கு இது தேகபெலத்தை கெட்டி பண்ணி, இழந்த ஆண்மைத்தை மீட்டு தளர்ந்துபோன சகல நரம்புகளையும் முறுக்கேற்றி, கெட்டுப்போன ரத்தத்தை சுத்தி பண்ணி, இழந்த ரத்தத்தை திரும்ப சேகரித்து பூரண சுகத்தையும் தேக ஆரோக்கியத்தையும் கொடுக்கின்றது.

அளவு விபரம்:—அரை முதல் முக்கால் டீ கரண்டி வரை எடுத்து 10 கரண்டி தண்ணீர் சேர்த்து தினம் 2 அல்லது 3 வேளை சாப்பாட்டுக்கு பின் உட்கொள்ளவேண்டியது.





## 1. இது குணமாக்கும் வியாதிகள்.

1. இழந்துபோன தாதுவை மீட்டுக்கொடுப்பதுடன் சகல நரம்புகளுக்கும் முறுக்கேற்றுகிறது.

2. விந்து சேகரிக்கும் பை தளர்ந்து நீரிலும்-மலபாதைக்குப்போகும் போதும்-இன்னம் மற்ற வேளைகளிலும் விந்து கழண்டு பெலத்தாட்சியடைபவர்களுக்கு கைகண்டது. இப்படிப்பட்டவர்கள் துர் இச்சைக்கு கொஞ்சமும் இடமில்லாமல் தங்களைக் காப்பாற்றிக்கொண்டு பின்பு மருந்தைச் சாப்பிட பூரண சுகம் கிடைக்கின்றது. மருந்துக்கு பிற்பாடு கணக்காய் தேக சம்பந்தம் வைத்துக்கொள்ளலாம்.

3. சுவாசாசயம், இரத்தாசயம் பெலவீனப்பட்டு உண்டாகும் எப்பும்-இளைப்பும்-படபடப்பும்--ஆயாசமும் இம்மருந்தால் சுகப்படும். இரண்டு பாட்டில்கள் சாப்பிடவேணும்.

4. ஜீரணக்கருவிகள் பெலத்தாட்சியாகி பசியின்மை-வேளாவேளைகளில் வயற்றுப்பொருமல்—வயற்றோட்டம் முதலானது உண்டாகுதல் இவைகளுக்கும்.

5. அசதி-சோம்பல்-பெலத்தாட்சி இவைகளுக்கும் பூரண சுகமுண்டாக்குகின்றது. இத்துடன் சுத்த ஆகாயத்தில் வேகமான நடை அப்பியாசப்படுத்தவேண்டும்.

6. அதிக மூளை உழைப்புள்ளவர்களுக்கு உண்டாகும் தலைக்கனம்—பிடரிவலி-மண்டைக்குத்து--கண் காந்தல்-தேக உஷ்ணம் இவைகளைக் குணப்படுத்துகின்றது.

7. கண் எறிவு-கால் எறிவு-கால் மதமதப்பு-அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல் இவைகளைப் பூரணமாய் நிவர்த்திபண்ணுகிறது.

8. நாள்பட காச்சலாயிருந்து பின்பு சவுக்கியப்பட்டு உள் காந்தலாய் நாலு ஐந்து நாளைக்கொருதரம் திரும்ப வருவதும் இப்படி வரும் ஜுரங்களுக்கு மற்ற மருந்துகளை நிறுத்தி இதைக் கொடுத்து வந்தால் ஒரு வாரத்துக்குள் பூரண சுகமுண்டாக்குகின்றது. திரும்ப காச்சல் உண்டாகமாட்டாது. தேக பலமும் வந்துவிடுகின்றது. மலைக்காச்சலாய் இருந்தால் மட்டும் சுகமாகாது.

☞ மேற்காட்டிய சகல அம்ச குணங்கள் பொருந்தியதாய் இருப்பதுமன்றி, இதற்கு மேலான வேறு மருந்துகள் இல்லையென்பதை திட்டமாய் அறிந்துகொள்ளலாம்.

## 2. ஸ்திரீகளுக்கு.

9. பெலவீனம்-அசதி சோம்பல் அடிக்கடி வாய்வு நெஞ்சில் அடைத்தல்-மிகுதியான ஏப்பம் இவைகளுக்கும்.

10. பிரசவத்துக்குப்பின் கெற்ப்பையில் சரியானபடி புண் ஆறாமல் அதில் வாய்வு உண்டாகி ஜாஸ்தியான மலப்போக்கும் அரை சோர்பட்டுப் போகுதலுக்கும்-பசியில்லா திருத்தல் இவைகளுக்கும் சாப்பாட்டுக்குப் பின் சாப்பிட்டுவர பூரண சுகமும்-பெலனும் உண்டாகிறது.

11. பெலவீனப்பட்ட சகலமான ஸ்திரீகளுக்கும் இது ஜீவ ஆதாரமான மருந்து. பாலில்லாதவர்களுக்கும் பிரயோஜனமானது. ஸ்திரீகளுக்கும் முதற்பாகத்தில் காட்டிய எட்டுவகை வியாதியில் எது இருந்தாலும் இது கைகண்டது. அநேகருக்கு ஒரே பாட்டில் பூரண சுகத்தைக் கொடுக்கும்.

12. சூதக சிக்கல், சூதக வயற்றுவலி, சூதகம் ஜாஸ்தியாய்ப் படுதல் ஆகிய இவைகள் திரேக பெலவீனத்தாலும், கெற்பப்பையில் ரத்தவோட்ட குறைவினாலும் உண்டாவதுண்டு. அப்படியிருந்தால் இது மிகவும் அருமையானது.

13. பத்தியம்:—அவரவர் திரேகத்துக்குப் பொருந்திய ஆகாரமே சாப்பிடவேண்டியது. நெய், பால், தயிர் முதலானது அதிகமாய்ச் சேர்க்கவேணும் பத்தியமென்பது கிடையாது. இச்சாமத்தியம் கவனிக்கவேண்டியது. பெலவீனப்பட்ட சகலரும் இதைச் சாப்பிட்டு சுகம் பெறலாம்.

14. ☞ தாதுவிர்த்திக்காகச் சாப்பிடுகிறவர்களும், மற்றும் யாவரும் ஸ்தூலசரீரிகளாயிருந்தால் இதைச் சாப்பிடும்போதே திரேக உழைப்பும், நடையும், திரேக அப்பியாசமும் செய்வது நல்லது. திரேக அப்பியாசத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகப்படுத்திக்கொள்ளலாம்.







## 10. SANTHANA SORNAM.

Rs. 3—0—0.

This remedy acts as a wonderful tonic for the womb. It is a uterine sedative and alterative also. This, being an Ayurvedic and European combination, acts successfully in painful menstruation, excess of menses, etc., etc., etc. European medicines in this are an American specialists favourite.

It cures sterility of various causes and other secret ailments of females; cures also frequent abortions and miscarriages and thus safely caries the full course of pregnancy.

DOSE:—Half to three quarter Tea-spoonful after meals, twice or 3 times daily, in an ounce of water after meals.

Each BOTTLE contains 32 Tea spoons. No special dieting. Everything as usual.

☞ குரு சந்தான சொர்ணம் சாப்பிட விரும்பும் ஸ்திரீகள், தங்களுக்கு இருக்கும் வியாதியைப்பற்றி எழுதினால், அதற்குரிய சில அனுபானங்களை அவசியமென்று கண்டால் எழுதியனுப்புவோம்.

## 10. சந்தான சொர்ணம்.

புட்டி ரூ. 3—0—0.



இது சந்தான விர்த்தி செய்யும் மருந்து. இதை ந்த சமமான மருந்து வேறில்லை என்று திடமாய்ச் சொல்லக்கூடும். இம்மருந்தைக்கண்டு பிடித்திருக்கும் அமெரிக்கன் டாக்டரிடம் இருந்தே இதன் குணாதிசயங்களைக்கேட்டு அறிந்திருக்கிறோம். பலன் பெற்றவர்கள் ஏராளம்.

### இது குணமாக்கும் வியாதிகள்.

1. கெற்பப்பை சுருங்கி அடைபட்டிருப்பதைத் திறக்கும் வல்லபமுடையது. மூன்றுபாட்டில்வரை சாப்பிடவேணும். சிலருக்கு ஒரே பாட்டிலில் கெற்பமுண்டாகியிருக்கிறது. அநேக நற்சாட்சியங்கள் பார்க்கலாம்.

3. இன்னம் ஓர் அருமை என்னவென்றால், மூலக்கிருமிக்காக கிருமி மருந்து சாப்பிட்டு மலவிர்த்தி செய்துகொண்டு, பின்பு இந்த மாத்திரைகளை அடிக்கடி உபயோகித்துவந்தால், மூலக்கிருமியில் வருஷக்கணக்காய் கஷ்டப்படுகிறவர்களுக்கு இது ஓர் விமோசனம். அவ்வித தொந்திரவுகளைத் தடுத்துப்போடுகிறது.

4. அளவு:—மலவிர்த்தி ஒழுங்கில்லாதவர்கள் இரவில் படுக்கப் போகும்போது 1 முதல் 3 மாத்திரை சாப்பிடவேண்டியது. மற்றகுணங்கள் வேண்டியவர்கள் காலை ஒன்று மாலை ஒன்றாக சாப்பிடவேண்டியது. மலவிர்த்தி ஜாஸ்தியாய் வேண்டியவர்கள் 2 முதல் 3 வரை சாப்பிடலாம் தினமும் உபயோகிக்க மனமில்லாதவர்கள் அவசரமானபோதெல்லாம் உபயோகித்துக்கொள்ளலாம்.

பத்தியம்:—ஒன்றும் கிடையாது யாவரும் சாப்பிடலாம். யாவரும் சுகமடையலாம்.

5. ☞ மெல்லிய திரேகிகளுக்கு இதுவே சுகமான பேதியாகும் மருந்து. காச்சலில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் மலசுத்திக்காக கொடுக்க தகுந்த மருந்து இது. மெல்லிய திரேகிகளுக்கு பொருந்திய மருந்து.

☞ ஐரோப்பிய ராஜகுடும்பங்களில் உபயோகமாகிவரும்: 1. லாக்சோலின், 2 ஐடிடோ என்ற மருந்தையும் கொடுக்க இதே குணம் தரும். இவைகள் குருமருந்துசாலையில் மட்டும் கிடைக்கும் எழுதவும்.

---

## ஸ்திரீகளுக்கு.

இது கெற்ப்பபைக்கு சரியான பெலனும், ஊக்கமும் கொடுக்கிறபடியாலும், இது மலசுத்தி-நீர்சுத்தி ஒழுங்காய் போவதற்குறிய மருந்தாயிருப்பதாலும் பிரசவத்திற்கு 8 நாள் இருக்கும்போதே தினம் இரவில் ஒன்று சாப்பிட்டுவர ஆச்சரியமானவிதமாய் யாதொருவித தொந்திரவும் மோசமுமின்றி பிரசவம் ஆகிறது. ஸ்திரீகளுக்கு நல்ல உற்சாகமும், பெலனுமாயுமிருக்கும். இது ஓர் விசேஷித்த மருந்து.

☞ மலசுத்தி இருகலாயும், நல்ல பசியில்லாமலும் வயற்றில் சற்று வலியும் ஜீரணிக்கும் நேரத்தில் சில தொந்திரவுகள் காணப்பட்டுவரும் துன்மத்துக்கு (Atonic Dyspepsia) இது குணமுள்ளது. 4 பாட்டில் வரை இரா மாத்திரையாக சாப்பிடவேணும்.

பத்தியம்:—பத்தியமென்பது கிடையாது. சகலமும் அவரவர் நிதானப்படி சாப்பிட்டுக்கொள்ளலாம். தினமும் சாப்பிட அவசியமிராது.

---





14429 600 008.

## 12. ESSENCE OMUM CARPOOR.

Bottle As. 8. 1-4 Bottles V. P. Charges As. 5.

This is four times superior to common Omum water. **This is a combination of several drugs.** Each bottle contains 24 strong doses. Medicine vendors, instead of wasting time in distilling Omum water, can easily prepare one pint of Omum water by adding simple good Warm water measuring one pint to one bottle of this essence making half to one ounce eash dose. During cholera and cold season every family should possess this valuable medicine.

## ஓமம் கர்பூர சத்து.

புட்டி அணா 8.

இது அஜீரணம்-மந்தம்-ஜீரணசக்திக்குறைவு-ஜலதோஷம் அதிகப்படி சாப்பிட்டு உண்டாயிருக்கும் வயற்றுக்கனதி இவைகளை உடனே கண்டிக்கும். வாய்வுப் பொருமல்-வயற்றேட்டம் இவைகளையும் கண்டிக்கும். குளிர் காலம், விஷபேதி காலம் இவைகளில் சொற்ப அஜீரணமும் விஷத்தை விருத்திபண்ணுகிறபடியால் இது கைவசமிருக்கவேண்டியது அவசியம். விஷபேதியின் விஷத்தை உடனே கொல்லும்.

உபயோகம்:—பாட்டிலை நன்றாய் குலுக்கி 20 முதல் 30 சொட்டு வரை எடுத்து அரை வீசம்படி தண்ணீரில் அல்லது 2 அவுன்ஸ் தண்ணீர் விட்டு கலக்கி உள்ளுக்கு சாப்பிடவேண்டியது. மேற்காட்டிய சகலத்தையும் கண்டிக்கும். இது மிகவும் அருமையான மருந்து. இந்த ஒரு பாட்டில் இரண்டு ஓமத்திராவக பெரிய பாட்டிலை பார்க்கிலும் சிறந்தது. ஒரு புட்டி எத்தனையோ பேருக்கு குணம் கொடுக்க போதுமானது.

பிள்ளைகளுக்கு:—3 சொட்டு எடுத்து ஒரு சங்கு தண்ணீரில் விட்டுக் கொடுக்கலாம்.

☞ விஷபேதி காலத்தில் இது அவசியம் கையிலிருக்க வேண்டும். டைகர் மாத்திரைக்கு அனுப்பானமாக உபயோகித்தால் ரொம்ப நன்மை தரும்.

☞ 1 முதல் 4 புட்டிக்கு தபால் சிலவு அணா 6.

---

## 13. GURU DIGESTIVE POWDER.

### குரு டைஜெஸ்டிவ் பவுடர்.

**Dyspepsia** டின் ரூ. **1.** **Cure.**

1—3 டின் தபால் சிலவு அணா 5.

1. இது குன்ம வயற்றுவலி-குன்ம வாய்வு-திரட்சி குன்ம வாந்தி-புளியேப்பம்-வாய்வு பிடிப்புகள் இவைகளை நிவர்த்தி பண்ணுகிறது ஜீரணசக்தி குறைவுள்ளவர்களுக்கும் இதுவே ஜீரணிக்கும் கொரடா-வாயினால் உண்டாகும் விக்கல்-குமட்டல்--வயற்றில் எரிச்சல்--முக்கியமாய் குன்ம வயற்றுவலிக்கும், செமிக்காமல் மலம் இரண்டு மூன்று தடவை போகிறவர்களுக்கும் ரொம்ப பிரயோஜனமானது. பிரசவத்திற்கு பின் ஸ்திரீகளுக்கு உண்டாகும் மல நழுக்கல்-வயற்றுப்பொருமல் இவைகளுக்கு கைகண்டது. அஜீரணம் பட்டுப்போகுதல்-ஜாஸ்தியான மலம்--பெரு மலம் கழிதல் இவைகளும் சுகம் ஆகும். சகல குன்மமும் தீரும்.

வேறுவித மல நழுக்கல், செமிக்காத மலம் முதலானது டைஜெஸ்டிவ் பவுடரால் குணமாகாவிடில் லிவர் டிராப்ஸ் என்ற பித்த திராவகத்தாலும்—கிராணி வயற்றோட்ட மாத்திரையாலும் சுகமாகிவிடும்.

* வியாதியின் குணத்தை எழுதினால் நல்லது.

## 14. கிருமி பூச்சி மருந்து.

**For Worms.** **For Worms.**

**12** மாத்திரை அணா **0-12-0.** யுத்த விலை ரூ. **1-0-0.**

1. இதை இரவில் படுக்கப்போகும்போதாவது அல்லது காலையில் வெறு வயற்றிலாவது சாப்பிடவேணும். இதற்கு நிகர் மருந்து கிடைக்காது. இது பூச்சிகளை கூட்டோடே வெளியேற்றும். இந்த மருந்துக்கு இரண்டு தடவை பேதியும் ஆகும். (பேதி மருந்து அவசியமில்லை).

2. பூச்சி மருந்து சாப்பிட்டபின் பெரியோர் பைல் பில்ஸ் அல்லது பிங்குபில்ஸ் சாப்பிட்டு வந்தால் மூலபூச்சிகள் அடியோடேபோய்விடுகிறது.

3. அளவு:-3—5 வயது வரை ... 1 மாத்திரை.
5-12 ,, ... 1-2 ,,
12-வயதுக்குமேல் ... 2-3 ,,





இரண்டு வயதுக்கு கீழ்பட்ட குழந்தைகளுக்கு பூச்சி மருந்து கொடுக்கலாகாது.

4. சீனியில் கலந்து சாப்பிடவேண்டியது. இந்த மருந்தினால் மலம் தாராளமாய் இரண்டு தடவை போகும். பேதி அவசியமானால் குரு மாத்திரை சாப்பிடலாம் அல்லது வேறு வழக்கமான பேதி மருந்துகள் சாப்பிடலாம். விளக்கெண்ணையும் சாப்பிடலாம்.

### பூச்சியினால் உண்டாகும் வியாதிகள்.

பிள்ளைகளுக்கு:— வயற்றுவலி--வலிப்பு--ஜன்னி--பெருமலப்போக்கு-பற்கடித்தல்-தூக்கத்தில் பயந்து விழித்தல் இன்னம் அநேகம் செய்யும்.

பெரியவர்களுக்கு:— மூலத்தில் அரிப்பு--வாந்தி வயற்றுவலி-ஆரோசிப்பு-இன்னம் அநேக வியாதிகளை இந்த பூச்சிகளே பெலப்படுத்தி விடுகிறது.

## 15. காச்சல் பவுடர்.

**FEVER POWDER.**

புட்டி அணா **0—5—0.**

12 டோஸ் மருந்து இருக்கும்.

கடும் ஜுரம்-கை கால் கடுப்பு-சல்லக்கடுப்பு-தலையிடி-இடுப்பு வெட்டுதல்-குத்தல்கள்-குடைச்சல்கள்-இவைகளுக்கு கைகண்டது.

அளவு:—1 அல்லது 2 பவுடர் கொஞ்சம் கசந்த காப்பியுடன் அல்லது வென்னீருடன் காலை மாலை கொடுக்கலாம். அதிக காச்சல் இருக்கும்போது மட்டும் கொடுக்கவும். (1 பவுடர்=2 கடலைப்பிரமாணம்).

அதிக ஜுரத்துக்கு தலையில் வெடியுப்பு சேர்ந்த தண்ணீரில் ஒரு கைக்குட்டையை மடித்து இந்த தண்ணீரில் நனைத்து நெற்றியிலும் நடு வயற்றிலும் விடாமல் போட்டு வரவும். (அளவு:— 1 கரண்டி வெடியுப்பு அரைக்கால் படி ஜலத்துக்கு).

1—6 புட்டி வரை தபால் சார்ஜ் அணா 5.



## 16. காச்சல் மாத்திரை.

## FEVER PILLS.

டசன் மாத்திரை அணா 0-8-0.

**100 மாத்திரை ரு. 3-0-0.**

அளவு:— 12 வயதுக்கு மேல் 1 அல்லது 2, (பிள்ளைகளுக்கு அரை அல்லது 1 மாத்திரை).

உபயோகம்:—நல்ல மிளகு ஒரு ரூபாய் இடை—ஆடாதோடை இலை--கறிப்பான் இலை--தும்பை--துளசி ஒவ்வொன்றும் ஒரு ரூபாய் இடை எடுத்து நசுக்கி கஷாயமாக்கி அத்துடன் மாத்திரையைக் கொடுக்கவும். அகப்பட்ட சரக்கை வைத்து கஷாயம் செய்து அல்லது கஷாயம் இல்லாவிட்டால் பாதியளவு மாத்திரை அதிகம் சேர்க்கவும். முதலில் குரு மாத்திரை சாப்பிட்டு மலவிர்த்தி செய்துகொள்வது நல்லது. காச்சல் விட்டிருக்கும் சமயத்தில் பார்த்து 2 அல்லது 3 டோஸ் 2 மணிக்கொருதரம் சாப்பிடுவதுதான் உத்தமம். முறை ஜுரங்கள்-விட்டுவிட்டு வரும் ஜுரம்—மலங்காடு தோட்டக்காடு முதலானவிடங்களில் உண்டாகும் குளிர் நடுக்கு ஜுரங்களுக்கு கைகண்டது.

தலைவலி:—இது ஓர் விசேஷித்த தலைவலி தினம் 3 மணி நேரம் தலை வலித்து பின்பு விட்டு மறுபடியும் அதே நேரத்தில் வரும் தலை வலிக்கும் இது கை கண்டது.

பத்தியம்:— சகலவித ஜுரங்களுக்கும் அரிசிப்புனர்பாகம்-ரவை-ஜவ்வரிசிக்கஞ்சி--கார்ன்பிளவர்--ஆரொட்டிமாவுக்கஞ்சி--ரசமும் குழைந்த சாதமும்-தனிப்பால் முதலானதும் கொடுக்கலாம்.

ரொம்ப பெலவீனமான வியாதியஸ்தர்களுக்கு கொழுப்பில்லாக் கறியில் செய்த பிராத்தும் அத்துடன் 4 கரண்டி பிராந்தியும் அல்லது பட்டை சாராயம் சேர்க்கவேணும்-மற்ற ஆகாரங்களுடனும் பிராந்தி 2 அல்லது 3 கரண்டி சேர்ப்பது நல்லது.

காச்சல் கட்டிக்கு:—தினம் 2 அல்லது 3 மாத்திரை சாப்பிட்டு வந்தால் 40 நாளில் கட்டிகளை கறைக்கிறது. அத்துடன் காந்த மருந்தும் கட்டியில் தேய்க்கவேண்டியது. மலசுத்திக்காக பைல் பில்ஸ் சாப்பிட்டு வரவேணும். குரு ஜீவாட்சாமிர்த லேகியம் மலசுத்திக்குரொம்ப அனுபோகமானது.

1 முதல் 6 புட்டி வரை தபால் செலவு அணா 5.







Malaria

## 17. GURU AGUE MIXTURE.

## எகியூ மிக்ச்சர்.



Specific.

காச்சல் திராவகம்.



யுத்தத்தால் புட்டி ரூ. 1-0-0.

இது காச்சல் மாத்திரையில் காட்டிய முறைக் காச்சல்கள்-விட்டுவிட்டுவரும் காச்சல்கள்-மலை ஜுரங்கள்-குளிர் நடுக்கு ஜுரம் இவைகளுக்கு மிக அருமையானது. இதை மெச்சிக்கொள்ளாதவரில்லை. மாத்திரையில் காட்டிய அனுப்பானத்தில் கொடுக்கலாம்.

அளவு:-பெரியோர்க்கு ஒருவரை-அதாவது 1 தேக்கரண்டி
5-12 வயது வரை அரை கரண்டி.
1—5 வயது வரை கால் அல்லது மூன்றிலொரு கரண்டி.

காச்சல் மாத்திரையில் காட்டிய அனுப்பானத்தில் அல்லது மிளகு கஷாயத்தில் சீனக்காரம் கறைத்து அதில் இந்த மருந்தைவிட்டு கொடுக்கவேண்டியது. காச்சல் விட்டிருக்கும் சமயத்தில் 3 தடவை கொடுத்தால் ரொம்ப நல்லது. திரும்ப வரவேண்டிய முறை வராது போம். அனுப்பானம் கிட்டாவிட்டால் 10 கரண்டி வெந்நீரில் கலந்துகொடுக்கவும்.

---

பத்தியம்:—காச்சல் மாத்திரையில் சொல்லப்பட்டிருக்கிறபடியே.

1 முதல் 4 புட்டி வரை தபால் செலவு அணா 5.

---



Blood

## 18. குரு பிங்கு பில்ஸ்.



Tonic.

**50 மாத்திரை ரு. 1-8-0. 30 மாத்திரை ரு. 1.**

1 முதல் 4 புட்டி வரை தபால் செலவு அணா 5.

அனேக மூலிகை சத்துக்களும், உலோக சத்துக்களும் சேர்த்து உயர்ந்த மாதிரியாய் அனுபோகத்தின்பேரில் செய்யப்பட்டிருக்கின்றது.

இது ரத்தம் செத்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் மிக நல்ல மருந்து. தூர் நீரினால் உண்டாயிருக்கும் சொறி சிரங்குகள், கட்டிகள், பெலவீனம்-

**GURU PINK PILLS:—**



அசதி-சோம்பல்-நரம்பு தளர்ச்சி இவைகள் பூரணமாய் குணப்படுகின்றன. காச்சல் முதலானதில் கிடந்து பெலத்தையும், இரத்தத்தையும் இழந்து நடக்கக்கூட சத்து இல்லாமல்--பசியில்லாமல் வருத்தப்படுகிறவர்களுக்கு இதற்குச்சமமான முறை வேறு கிடைப்பதரிது. இது மூளைக்கு பெலனையும்-ஞாபக சக்தியையும்-மன ஊக்கத்தையும் கொடுக்கின்றது. பெலவீனப்பட்ட சகலமானவர்களுக்கும் இது உயிர்தோழன். சூதகம் கம்மிப்பட்டிருந்தாலும், சூதகம் ஒழுங்கில்லாமலிருந்தாலும் இதை இரண்டு முறை சாப்பிட்டால் குணமாகும். இதில் குணமாகும் வியாதிகள் எண்ணிறந்தவைகள். இது ஜனங்களுக்கு ரொம்ப பிரயோஜனமான மருந்து.

☞ கிரயமும் ரொம்ப சொற்பம். கவனிக்கவும்.

அளவு:— காலையில் ஒன்றும், மாலையில் ஒன்றும் சாப்பிடலாம்— அல்லது வேளை ஒன்றுக்கு இரண்டும் சாப்பிடலாம். சாப்பாட்டுக்குப் பின் சாப்பிட்டுவருவது நல்லது. மாத்திரைகளை சற்று மென்று தண்ணீருடன் விழுங்குவது நல்லது.

பத்தியம்:—கிடையாது. நல்ல ஆகாரங்கள் சாப்பிடவும்.

---

## 19. GONORRHOEA SPECIFIC.

## வெள்ளை நீர்கடுப்பு மருந்து.

புட்டி ரூ. *1-4-0.*

1. இது குணமாக்கும் வியாதிகள்:—நீர்கடுப்பு-நீருடன் வெள்ளைச் சலமாய்ப்படுதல்-வெள்ளை முத்தித் தண்ணீர்போல் மஞ்சள் நிறமாய் விழும் மேகம்-நீரில் ரத்தம் படுதல்-கொஞ்சம் கொஞ்சமாய் நீர் இறங்குதல்-நீர் பையில் உண்டாயிருக்கும் ரணம்-இவைகளுக்கு கைகண்ட பிரத்தியட்சமான மருந்து.

2. இத்துடன் நீர்தாரைப்புண்ணை ஆற்றுவதற்காக பிஸ்காரி குழாயில் தைலம் எடுத்து செலுத்துவதும் ரொம்ப நல்லது. நாள்பட்ட வெள்ளைக்கு பிஸ்காரி பிரயோகம் அவசியம்.

☞ தைலத்துக்குறிய பவுடர் 8-க்கு அணா 12.
கண்ணாடி பிஸ்காரி குழாய் 1-க்கு „ 6. ☜





### உபயோக விபரம்.

3. உள் மருந்தின் அளவு:—20 முதல் 30 சொட்டு வரை எடுத்து சீனியில் போட்டு சாப்பிடவேண்டியது. இப்படி தினம் மூன்று வேளை அல்லது நான்கு வேளை சாப்பிட இரண்டே தினத்தில் சுகமுண்டாகும். சுகமான பின்னும் ஒருவாரம் வரை மருந்து சாப்பிடவேணும்.

4. ☞ இத்துடன் அனுப்பும் பவுடர் 8 நாளைக்கு. இந்த பவுடரில் எட்டில் ஒரு பாகம் எடுத்து ஆறு அவுன்ஸ் தண்ணீரில் கரைத்து (அதாவது அரைக்கால் படி சுத்த ஜலத்தில்) வைத்துக்கொண்டு உபயோகம் செய்யவேண்டும்.

5. முதலில் நீர் தாரையை சுத்தஜல வென்னீர் எடுத்து பிஸ்காரிக் குழாயைக்கொண்டு சுத்தம்பண்ணி பின்பு இந்த தைலத்தையும் பிஸ்காரிக் குழாயில் எடுத்து தினம் மூன்று நான்கு வேளையாக உபயோகம் செய்யவே இரண்டு தினத்தில் வியாதிசுகப்படும். நாள்பட்டதும் பூரணமாய்க் குணப்படுகின்றது. பிரத்தியட்சமான மருந்து என்பதற்குச் சந்தேகமில்லை.

6. * இவ்விரு முறையும் கலந்து செய்தால் நாள்பட்ட மேகமும் கடுப்பும் குணமாகும். உள் மருந்தை இரண்டு வாரம் வரை விடாது சாப்பிடுவது ரொம்ப நல்லது.

☞ கலங்கலான நீர்-நீர் தரிப்பு-குத்தல்-ரத்தமேகம்-வேறும் கடுப்பு இவைகள் இருந்தால் எழுதவும்.

## ஸ்திரீகளுக்கு.

7. ☞ ஸ்திரீகளுக்கு இருக்கும் வெள்ளை:—இந்தவெள்ளைக்கும், சூடுபடுதலுக்கும் பிஸ்காரிப் பிரயோகம் செய்வது கைகண்டது. அவர்களுக்குறிய பிஸ்காரிக்குழாய்.

☞ விலை அணா 6 வேணுமானால் அனுப்புவோம்.

பத்தியம்:— வாய்வு, கரப்பான் பதார்த்தங்கள், உஷ்ணமானதும் காரமானதுமான பதார்த்தங்கள் தான் தள்ளுபடி. மற்ற பத்தியமில்லை. ஸ்திரீ சம்போகம் ஒருமாதம் கண்டிப்பாய் தள்ளவேண்டும்.

# 20. TONIC FOR CHILDREN.

## குரு பாலர் டாணிக்கு.

புட்டி ரு. 1—0—0.



இது குழந்தைகளுக்கு ரத்தவிர்த்தி செய்யும் மருந்து. சோகையை நீக்கும்—பெருவயறு—பெருமலப்போக்கு—கணை வியாதிகள்—அடிக்கடி உண்டாகும் ஜுரம்—ஜன்னி—இழுப்பு வலிப்புகள் இவை எல்லாம் வராது நின்றுபோம். இதில் 1 அல்லது 2 புட்டி சாப்பிட்டால் எல்லாம் போம். குழந்தைகள் நல்ல சுகதேகியாய் வளரும். நிற்க-நடக்க ஏலாத குழந்தைகளுக்கு இது ஜீவ ஆதாரமான மருந்து. கால்-கை-இடுப்பு பெலப்பட்டு சீக்கிரம் நடக்கும். பல் முளைக்க தாமதிக்கும் குழந்தைகளுக்கும் இதுவே மருந்து. புண் பொடிகளால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கும் இதுவே சிறந்த மருந்து. அடிக்கடி இருமல்-ஜலதோஷம்-வயற்றோட்டங்கள் உண்டாகும் பிள்ளைகளுக்கும் கொடுக்க அவ்வியாதிகள் திரும்ப உண்டாகாமலிருப்பதை அனுபவத்தில் பார்க்கலாம். குழந்தைகளின் திரேகத்திலுள்ள சகல பாகங்களையும் பெலப்படுத்தி வியாதி வரவொட்டாமல் செய்கிறதையும் பார்க்கலாம்.

**ஆகாரம்:**—பத்தியமில்லை. நன்றாய் ஜீரணிக்கக்கூடிய ஆகாரங்கள் நெய்-பால்-மோர்-வாழைப்பழங்கள் உபயோகிக்கவும். வயதுக்கு மிஞ்சின கடின ஆகாரங்களை கவனித்து கொடுக்கவும் or கொடுக்கக்கூடாது.

அளவு:—10 முதல் 20 சொட்டு வரை வயதுக்கு தக்கபடி 6 மாதம் அல்லது 8 மாத குழந்தை முதற்கொண்டு 4 வயது வரை இதை உபயோகிக்கலாம்.

---

### கவனிக்கவும்.

☞ குழந்தைகளுக்கு இருக்கும் மற்ற வியாதிகளைப் பற்றி எழுதினால் அருமையான மருந்துகள் அனுப்பலாம்.

குழந்தைகள் வியாதிக்கு ஸ்பெஷல் மருந்துகள் செய்தும் சுகப்படுத்தலாம்.





# 21. பாலர் வயற்றோட்ட நிவாரணி.

பெரிய புட்டி அணா 12. சின்ன புட்டி அணா 8.



வயற்றோட்டம் வந்து சங்கடப்படாத பிள்ளைகள் இல்லை. குழந்தைகளுக்குரிய ஆகாரங்களை நிதானமாய் கொடுக்காமலும், பொருந்தாத ஆகாரங்களைக் கொடுத்தும், வியாதி விர்த்தியாகிறது. இவ்வித வயற்றோட்டங்களுக்கு ஹெல்த் பில்ஸ் முதலானதுகளைக் கொடுத்து தொக்கத்தை நிவர்த்திசெய்துகொண்டால் வயற்றோட்டம் நின்றுக்கொள்ளும். அடிக்கடி அவசியமானபோது ஹெல்த் பில்ஸ் உபயோகம் செய்தால் நல்லது. அப்படிக்கில்லாமல் நாள்படவிடப்பட்ட வயற்றோட்டங்களுக்கு குரு பாலர் வயற்றோட்ட நிவாரணி ஓர் அருமையான மருந்து. உங்கள் கைப்பக்குவங்களால் தீராத வயற்றோட்டத்துக்கும், நாள்பட்ட வயற்றுக் கடுப்பு-பெருமலம் இவைகளுக்கு குருமருந்துசாலை வயற்றோட்ட நிவாரணியைக் கொடுங்கள்—சுகப்படும்.

அளவு:—10 முதல் 40 சொட்டு வயதுக்குத் தக்கபடி எடுத்து தண்ணீர் கலந்து அல்லது ஹெல்த் பில்சில் வயற்றோட்டத்துக்காகச் சொல்லிய கஷாயங்களில் கொஞ்சம் ஓமம் சேர்த்து கொடுக்கவும். கவனியுங்கள்.

பத்தியங்கள்:—பிள்ளைகளுக்குப் பொருந்தக்கூடிய ஆகாரம் எது என்று கண்டு, அதையும் நிதானமாய்க் கொடுக்கவும்.

**ஆகார ஜாப்தா:**—தாய்ப் பால்—பசுவின் பால்—பசுவின் பாலுடன் அரிசி புனர்பாகத் தண்ணீர் அல்லது பார்லிவாட்டர் சேர்த்துகொடுக்கவும். இது தவறினால் மெலின்ஸ்மாவு-நெசில்ஸ்மாவு-பெங்கர்ஸ்பூட்-ராபின்சன்ஸ் பேட்டெண்டு-பார்லி மாவு-ஆர்லிக்ஸ் மால்டெட் மில்க் இதுகளை கஞ்சியாய் சமைத்துக் கொடுக்கவும். கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுக்கவும். இந்த ஆகாரங்களை குடிக்கப் பிரியப்படாவிட்டால் இரண்டு சங்களவாக சங்கில் எடுத்துப் போடலாம். ஆகாரங்களை நிதானமாய் அதிகப்படுத்த அல்லது மாற்றவும். எந்த ஆகாரம் பொருந்துகிறது அல்லது பொருந்தவில்லை என்று கண்டுபிடிக்கவேண்டியது மிக முக்கியம். ஒரே ஆகாரம் எல்லா குழந்தைகளுக்கும் பொருந்துகிறதில்லை. அதை பெற்றோர்தான் கவனிக்கவேணும். அவரவர் தன் பிள்ளைகளுக்கு பொருந்துகிற ஆகாரத்தை கவனித்துவரவேணும். வயற்றோட்டம் நன்றாய் நின்றபின் சாதாரண ஆகாரங்கள்-பிள்ளையைப் பெலப்படுத்தும் ஆகாரங்கள் கொடுக்கவேணும்.

## 22. ஆயுள்வேத லேகியம்.

The best remedy for Cough, Cold, Asthma and Chronic Bronchitis. It is the specific for lung diseases.

டின் ரூ. 1-0-0.

இது ரொம்பவும் பிரயோஜனமானது. நாள்பட்ட இருமல்கள்-புகைச்சல்கள்-கபத்தைப்பற்றியதாயிருந்தாலும், உஷ்ணத்தைப்பற்றியதாயிருந்தாலும் சுகமாகும். மந்தாரகாசம்-காசயிறைப்பு-இருமல்கள் தீருகின்றது. கைகண்ட ஔஷதமுறை-ரொம்ப அருமையானது.

காலையிலும்-மாலையிலும்-இரவிலும் இரண்டு சுண்டக்காய் பிரமாணம் எடுத்து சாப்பிட்டுவரவேண்டும். க்ஷயரோகம்கூட மட்டுப்படுகின்றது.

பத்தியம்:—ஒன்றுமில்லை. நன்றாய் திருப்தியாய் சாப்பிடவேண்டியது. கறி, சூப்பு முதலானதும் உபயோகம் செய்யவேண்டியது.

மந்தார காச இளைப்புக்கு வியாதி மும்மரமாய் இருந்தால் அந்த சமயத்தில் ஆஸ்த்மா டிராப்ஸ், ஆஸ்த்மா பவுடர் உபயோகிக்கவேணும்.

## ASTHMA POWDER.

மந்தாரகாச பவுடர். ரூ. 1—0—0.

நெருப்பு தணலில் 1 கரண்டி பவுடரை கொஞ்சம் கொஞ்சமாய் தூவி புகைத்து புகையை விடாமல் சுவாசிக்கவேண்டும். படி அல்லது உளக்கில் நெருப்பு தணலை வைத்துக்கொண்டால் நல்லது.

## ASTHMA DROPS.

ஆஸ்த்மா டிராப்ஸ். ரூ. 1-0-0.

இளைப்பு தொந்தரவாயிருக்கும்போது இதை ஒன்று அல்லது இரண்டு டோஸ் மணிக்கொருதடவையாக சாப்பிட உடனே தொந்தரவு மாறிவிடும். நாள்பட்ட இளைப்பு-நெஞ்சு கட்டு-நெஞ்சுகனதி இருப்பவர்கள் தினம் அரைக்கரண்டி வீதம் 1 தடவை 1 அல்லது 2 தட்வை காலை-மாலை சாப்பிட்டால் ரொம்ப நன்மை. முட்டையும் பாலும் அல்லது மில்க் சால்ட் சேர்ந்த பால் சாப்பிடுவது ரொம்ப நல்லது.

## 23. மேகநீர் மருந்து.

Guru specifics for all Venereal diseases.

**"THE RIGHT CURE."**

*(Detailed History wanted for each case. Our charges are quite moderate.)*







சகலவித மேகநீர் சம்பந்தமாய் வரும் லிங்கப்புண்கள்—அரையாப்புகட்டிகள்-பற்றுகள்-அறிகரப்பான்கள்-கள்ளிப்பூகிரந்திகள்-தேக முழுவதும் விழும் கட்டிகள்-புண்கள்--சகலவிஷத்தால் உண்டாகும் சகல வியாதிக்கும் அருமையான மருந்துகளிருக்கிறது. வியாதியின் ஆரம்ப குணங்களையும் இப்போதிருக்கிற குணங்களையும்தெரியப்படுத்தினால் வியாதிக்குத்தக்கபடி ஆயுள்வேதமுறை அல்லது இங்கிலீஷ் முறைப்படி மருந்து அனுப்பி சுகம் கொடுக்கலாம். வியாதியை எப்படியும் சுகம்பண்ணலாம்.

☞ மருந்து விலை வேத சகாயம்.

---

## 24. The Great Gout & Rheumatic Cure.

## மொழி சூலை-முடக்கு சூலை மருந்து.

ஒரே வாரத்தில் குணம் கொடுக்கும்.
ரூ. 3-0-0.

துர் விஷய வியாதி வந்ததுண்டா-வந்து எவ்வளவு காலமாச்சு என்ற விபரம் தெரிவித்தால் நல்லது.

---

## 25. குரு காதுவலி தைலம்.

அணா 6.




காதுகுத்து-காது வெளிச்சி-காது சீள் ஓட்டம்-அடிக்கடி உண்டாகும் மண்டைக்கரப்பான்-காதுசீள் இவைகள் இத்தைலத்தால் சுகம் ஆகும். சீளை நன்றாய்த் துடைத்துவிட்டு காதுக்குள் 10 சொட்டு மருந்தைவிட்டு அடைக்கவேணும்.

தினம் 2 தடவை விட்டு வரவும்.

---

## 26. SORBENE.
### சார்பீன். ரூ. 1-0-0.



கண் மங்கல்-கண்ணில் மாசுபடர்தல்-பூவிழுதல் (கடாராக்ட்) என்ற வியாதி அதாவது வயது காலத்தில் கிருஷ்ணனில் பூ விழுந்து மறைத்தல், சிறுபுண்ணினால்-சிறுகாயங்களால் உண்டாகும் வெள்ளை அல்லது பூ இவைகள் எல்லாம் குணப்படும். கண்ணில் தினம் 2 அல்லது 3 தடவை 5 சொட்டு மருந்துவிட்டு கால் மணி நேரம் வைத்துக்கொள்ளவேண்டியது. இது கண்ணுக்குறிய அருமையான மருந்து. கொஞ்சமேனும் எறிச்சல் வலி கொடாத மருந்து. துவக்கத்திலேயே உபயோகிப்பது நல்லது.

மற்ற கண் வியாதிகளைப்பற்றி குறிப்பான
விபரத்துடன் எழுதினால் மருந்து
அனுப்பி சுகப்படுத்தலாம்.

## 27. குரு மேகரணக் கழிம்பு.
அணா 8.



சகல மேகப் புண்கள்-கரப்பான்கள்-கிரந்திப் புண்கள்-லிங்கப் புண்கள்-குஷ்டப் புண்கள்-குழிப் புண்கள்-காது கரப்பான்-ரணங்கள்-சகலமும் குணப்படும். மற்ற மருந்துகளில் தீராத மேகநீர்ப்புண்கள் குரு மருந்தால் தீரும்.

(1-4 புட்டிக்கு வி. பி. செலவு அணா 5.)

## 28. "MANORAMA" HAIR OIL.
### "மனோரமா" கூந்தல் தைலம்.



கூந்தலுக்கு மிக சிறந்த தைலம். அநேக மூலிகைகளின் சத்து சேர்ந்த தைலம். கபால உஷ்ணம்போம்-தலைவலிபோம்-தலை செதில்கள்-மயிர் உதிர்தல் நின்றுபோம். கூந்தல் வெகு சிறப்பாய் வளரும் அனுபோகத்தில் காண்பீர்கள்.

**8 புட்டியின் அளவு ரூ 4-8-0.**

☞ 1919ஞ்த்திய விலை புட்டி அணா 12. சம்மதமானால் எழுதவும்.





## 29. GURU BATHING OIL.
### குரு ஸ்நானத் தைலம்.

அநேக அபூர்வ மூலிகைகளின் சத்து சேர்ந்த தைலம். பெரியோரால் சித்திக்கு வந்த தைலம். கண் பெலவீனம்-பீனிச வியாதிகள்-கபால நீர்கள்-பித்தம்-தலைபாரம்-காது இரைச்சல்கள் தீரும். தலை நரை கொள்ளாது தடுக்கும் மருந்து.

☞ 1919ஞ்த்திய விலை டின் ரூ. 1-8-0. டசன் ரூ. 15-0-0. சம்மதமானால் எழுதவும்.

## 30. GURU OINTMENT.
### குரு கழிம்பு.



**Ring Worm** புட்டி அணா 7. **Specific.**
1—4 புட்டிக்கு வி. பி. தபால் செலவு அணா 5.

சகலவித பற்றுகள்—எச்சல் தழும்புகள்—பித்த வெடிப்புகள்-படர் தாமரை—கஃசு பற்றுகள்—சகல அரிப்புள்ள தோல் வியாதிகள் 2 அல்லது 3 தினத்தில் குணப்படும். வியாதி உள்ள இடத்தில் தேய்க்கவும். (டசன் ரூ. 4—8—0.)

## 31. UNIVERSAL OINTMENT.
### For Ulcers & Wounds.
### சகல ரணக்கழிம்பு.

டின் அணா 10.

சகலவித புண்கள்-ரணங்கள்-காயங்கள்-பிள்ளைகள் கரப்பான்கள்-திட்டமாய் சுலபத்தில் ஆறுகின்றது. எவ்வித ரணங்களும் சுகப்படும். குழந்தைகள் புண்கள்-சிரங்குகளுக்கு வெகு சிலாக்கியமானது.

## 32. தேள்கடி மருந்து.

புட்டி அணு 4. டசன் ரூ. 2—8—0.

A cure for all poisonous Stings and Bites.

இது தேள்கடி-பூச்சிக்கடி-விஷவண்டு கடிகளுக்கும் 10 நிமிஷம் நன்றாய் தேய்க்கவேண்டியது. பின்பு நாய்கடி-பூனை, குரங்கு கடிகளுக்கு கடிபட்ட விடத்தை உடனே நன்றாய் தண்ணீர் விட்டு தேய்த்து கழுவிவிட்டு இதை துணியில் துவட்டி வைத்துக்கட்டினால் விஷத்தைச் சாப்பிட்டுவிடும். சகல கடிக்கும் உபயோகமாகக்கூடிய ஓர் விசேஷித்த மருந்தாகையால் இதை எல்லோரும் உபயோகியுங்கள். தேள் கடிக்கு குருதைலம் சிறந்தது. உபயோகித்துப் பாருங்கள்.

(1-4 புட்டிக்கு வி. பி. செலவு அணு 5.)

## 33. குரு விஷ மை.

(விலை: சுண்டக்காய் பிரமாணம் அணு 8.)

1. சகல விஷத்துக்கும் கைகண்ட அனுபோகமான மருந்து. நல்ல பாம்பு, விரியன் முதற்கொண்டு சகல பாம்பு கடிகள்—விஷப்பூச்சி கடி—பூரான் கடிகள்—வண்டு கடி—எலி கடி—பூனை கடிகளுக்கு இது சிறந்த மருந்து. உள்ளே கொடுக்கவேண்டிய மருந்து. ஆச்சரியமானது.

அளவு:—பயறு பிரமாணம் முதல் கடலை பிரமாணம் வரை வெற்றிலையில் வைத்து சாப்பிடவும். பேதியாகி விஷம் கழியும்.

பத்தியம்:—அந்த தினத்தில் மட்டும் புளி தள்ளவேண்டும். பழய விஷங்களுக்கு மாதம் ஒரு தடவை வியாதி மும்மரமான காலங்களில் கொடுக்கவும். இப்படி 2 அல்லது 3 தடவை கொடுத்தால் போதுமானது.

2. குரு மாத்திரை அத்தியாயத்தில் சொல்லிய விஷ பாம்பு கடிகளுக்குறிய மற்ற வைத்திய குறிப்புகளையும் கவனித்துக்கொள்ளவும். மூக்கு-காது இவைகளில் செய்யும் நசியங்களையும் கவனிக்கவும்.





## 34. MAGIC DROPS FOR TOOTHACHE.

## பல்வலி சொட்டு மருந்து.

அணு 8.

பல்வலி-பல் சொத்தை-இகர் தடிப்பு வலி-இகர் புண்கள் இவைகளுக்கு இதைத் தொட்டு பூசவும். சீக்கிரம் நல்ல குணம் கொடுக்கிறது வலி வெகு சீக்கிரம் நிற்கும். இகர் கரைதல்-பல்சீள் இவைகளுக்கு 2 அல்லது 3 சொட்டு எடுத்து தினம் உபயோகிக்கவும்.

அதிக வலியாயிருந்தால் தினம் 2 or 3 தடவை உபயோகிக்கலாம்.

## 35. வயற்றுக்கடுப்பு மருந்து.

புட்டி அணு 6.

இது சீதபேதி-வயற்றுளைச்சல்-மூலக்கடுப்பு-மூலக்கொதிப்பு இவைகளுக்கு கைகண்டது. இந்த மருந்தில் பாதியை எடுத்து இரண்டு கரண்டி விளக்கெண்ணெயில் குழப்பிக்கொண்டு நாலு பங்காக்கி மணிக்கொருமுறையாக சாப்பிட்டுவிடவேண்டியது. பின்பு மறு காலையில் மீதியான பாதியை தேனில் குழப்பிக்கொண்டு இரண்டு தட்வையாக வெறு வயற்றில் சாப்பிடவேண்டியது. காலையில் பாதியும்-மாலையில் பாதியுமாகச் சாப்பிடவேண்டியது. ஆகாரம்: ஜவ்வரிசி கஞ்சி அல்லது நன்றாய்க் குழைந்த கொஞ்சம் சாதமும் மோரும். தேயிலைத் தண்ணீர் (Tea) சாப்பிடலாம்.

மூலக்கடுப்பானால் ஒரு வாழைப்பழம்-2 கரண்டி நெய்-ஒரு கரண்டி தேன்விட்டு பிசைந்து—மூன்றிலொருபாக மருந்தையும் சேர்த்து பிசைந்து வெறு வயற்றில் சாப்பிடவும். காலை-மாலை சாப்பிடவும். ஆகாரம்: பாலும் பழமும்-மோரும் பழமும் அல்லது குழைந்த சாதம் கொஞ்சம்.

## 36. PILES REMEDY.

## மூலமுளை மருந்து.

அணா 10.

இது மூல அறிப்பு-மூலத்தில் வெடிப்புகள்—மூலப் புண்கள்—ரத்தம்—மூலத்தில் தடிப்புகள் எல்லாவற்றையும் சுகம்பண்ணும்: முளைகளும் ரணமாகாமல் கொஞ்சம் கொஞ்சமாய் வற்றும். இதை பஞ்சில் ஊட்டி மூலத் துவாரத்தில் உள்ளே தள்ளி செலுத்தவேண்டியது. பஞ்சானது பின்பு மலத்துடன் விழுந்துவிடும்.

☞ உள் மருந்துக்கு அவசியம் தோணினால் எழுதவும்.

ரத்தமூலத்துக்கு அருமையான உள் மருந்திருக்கிறது. (மூலவல்லாதி.)

## 37. Specialities for Diabetes.

## நீரழிவு நிவாரணி.

### (மதுமேகம் அல்லது அதிமூத்திர நிவாரணி.)

தித்திப்புநீர், இதில் நிரோகத்திலுள்ள இனிப்புசத்து நீரில் இறங்குதல்-ஈ, எறும்புகள் வந்து மொய்க்கும் நீர். இது நிறுத்தப்படாவிட்டால் காது அடைப்பு, ஆயாசம் உண்டாகும், உடல் மெலியும், பிளவை கட்டிகள் உண்டாகும்-ஒருவித களைப்பு-மூடு ஜன்னி இவைகள் உண்டாகி உயிர்போம். கண்மங்கல்-கை-கால்-விரல்களில் திமிர் உண்டாகும். இருமல்-க்ஷயம் கண்டும் உயிர்போம். இவ்வித நீரழிவுக்கு எங்கள் மருந்து கைகண்டது. ஆயுசு நீடித்திருக்கவேணுமானால் எங்கள் மருந்தை உபயோகித்து வாருங்கள். அநேகருக்கு பூரண சுகம் ஆனதுபோலவும் இருக்கிறது. வியாதி கெட்ட வியாதி தான் ஆனாலும் எங்கள் மருந்தில் இருக்கிற குணம் வேறொன்றிலும் இருக்காதென்று திட்டமாய் காண்பீர்கள்: எழுதிக் கேட்கவும்.





## 38. குரு காந்த மருந்து.

## Electric Solvent for Enlarged Glands.

புட்டி ரூ. 1—0—0.

### இது குணப்படுத்தும் வியாதிகள்.



மேற்பிரயோகத்தால் காச்சல் கட்டிகள்—அண்டவாய்வு—வீக்கங்கள்—மொழி வீக்கங்கள்—எலும்பு முரடுகள்—கண்டமாலை கட்டிகள்—அறையாப்பு கட்டிகள் சகலமும் கறையும். மலை ஜுரம்—விஷ ஜுரம்—குளிர் ஜுரங்களுக்கும் உபயோகித்தால் சீக்கிரம் குணப்படும். இவ்வித காச்சலுக்கு இடது விலாப் பக்கம் விலா எழும்புகளின் கீழ் ஓரமாயும், வலது பக்கத்தில் முன் பக்கமாய் வலது மாருக்கு நேர் கீழே விலா எலும்பின் ஓரத்தில் ஒரு கை அகலம் தேய்க்கவும்.

## 39. இருமல் பில்லைகள்.

## COUGH LOZENGES.

50 பில்லைகள்: யுத்தத்தால் விலை ரூ. 1—0—0.

சகல இருமல், தொண்டைக் கட்டு—கரகரப்பு இவைகளுக்கு வாயில் ஒதுக்கிக்கொண்டு உமிழ் நீரை உட்கொள்ளவேண்டியது. இது ஓர் நல்ல மருந்து.

☞ உள் குட்டிநாக்கில் தடவும் மருந்தும் அனுப்பலாம்.

தொண்டையில் ரணம்-நீண்ட உள்நாக்கு-சதைவளர்ச்சி இவைகளினால் விடாத இருமல் உண்டாகும். அப்படி இருந்தால் உள்ளே மருந்து தடவுவது மிக அவசியம் எழுதவும்.

## 40. பாடகர்க்கு பில்லைகள்.

## VOICE LOZENGES.

100 பில்லைகள் ரூ. 2—0—0.

தொனியை தெளிவாக்கும். இது பாடகர்க்கும், பிரசங்கிகளுக்கும், தொண்டைப் புண்-தொண்டைக் கம்மல் உள்ளவர்களுக்கும் வெள்ளியின் சப்தத்திற்குச் சமானமாய் அவர்கள் தொனியை மாற்றும். அவர்கள் தொனி ஒருபோதும் கம்மாமலும்-கெடாமலும் பாதுகாத்துவரும். வாய்ப் புண்-நாக்கு ரணங்கள்-குடல் ரணங்கள் எல்லாம் சுகமாகும்.

ஒன்று அல்லது இரண்டு காலை-மாலை வாயில் போட்டு ஒதுக்கி வர வேண்டியது. தினம் 6 வரை உபயோகிக்கலாம்.

---

## 41. ANTI SPLEEN DROPS.

### காச்சல் கட்டி மருந்து.

புட்டி ரூ. 1—8—0.



இது காச்சல் கட்டி மருந்து. காச்சல் கட்டிகளை சீக்கிரம் சவுக்கியம் பண்ணும். மத்தியானம்-சாயங்திரம்-இரவு புட்டியில் சொல்லியபடி சாப்பிடவும். காலையில் மாத்திரை.

☞ இத்துடன் மாத்திரையும் அனுப்பப்படும். இரண்டையும் உபயோகம் செய்யவேணும்.

50 மாத்திரை ரூ. 2—0—0.

தினம் காலையில் மாத்திரை சாப்பிடவேணும்.

---

## 42. GURU LIVER DROPS.

**A special cure for all Liver Disorders.**

Bottle As. 12.

It is a specific Remedy for weak liver, Billiousness-Giddiness-Jaundice-Sluggishness of liver-Dyspeptic Colic-Liver Dyspepsia-Slow digestion-Loose stools-windy complaints in bowels-shooting pains in back and stomach caused by liver Dyspepsia, Piles mischief &c.





It arrests frequent attacks of Billious fever-Billious Diarrhœa and also Billious vomitting.

This is an indispensable medicine for people who are Plethoric. Because these men always have a very sluggish liver. It successfully prevents diabetic tendency and other ailments that are common to such constitutions: the rich foods they take and in large quantities will be very well assimulated into the system if they only use this.

☞ For Liver Disorders with constipation use our *Bile Pills* or *Iteto* of (Royal family medicines list.)

---

## பித்தசாந்தி திராவகம்.

அணா 12.

பித்த படபடப்பு-பித்த குன்மம்-பித்தத்தால் அஜீரண மலப்போக்கு-வயற்றுப்பொருமல்-மஞ்சட்காமாலை-அடிக்கடி உண்டாகும் பித்த ஜுரங்கள் இவைகளுக்கு அனுபோகமானது. ஸ்தூல சரீரிகள் இதை அடிக்கடி உபயோகிப்பது நல்லது. பித்த வாய்வு-உஷ்ண வாய்வுகள் எல்லாம் சுகம் ஆகும்.

---

## 43. தன்வந்திரி செந்தூரம்.

ஒரு ரூபாய் இடை ரூ. 3—0—0.



மேகம் 21 வகைக்கும்-வாதம் 80 வகைக்கும்-சகல வாய்வுகள், வாய்வு குத்துகளுக்கும்-சகல ஜன்னிகளுக்கும் கைகண்டது. சமயோஜிதமாய் இஞ்சி - முருங்கப் பட்டை - வெள்ளைப்பூண்டு இவைகளின் சாற்றில்-தேனில்-(வெல்லத்தில் பொதிந்து) சாப்பிடலாம். சிறு பிள்ளைகள் வியாதிக்கும் கொடுக்கலாம். அளவும் பத்தியமும் 1 முதல் 2 கடலைப்பிரமாணம்: 7 வேளை மூன்றனை நாள் சாப்பிடவும். புளி—கரப்பான் பதார்த்தம்-வாய்வு பதார்த்தங்கள் தள்ளவும் ஏழு நாள்களுக்கு மட்டும்—பின்னும் கொஞ்ச நாள்களுக்கு கரப்பான் பதார்த்தங்கள்-வாய்வு பதார்த்தங்கள் சேர்க்காமல் இருப்பது நல்லது. 5வது நாள் முதல் புளி சேர்க்கலாம்.

குழந்தைகளுக்கு:—1 அல்லது 2 அரிசிப்பிரமாணம் மேற்சொல்லிய அனுப்பானங்களில் கொடுக்கவும்.

## பீ-மா. 44. BE-MA. பீ-மா.

**The Great Tonic food specific.**

Bottle Re. 1—4—0. 3 Bottles Rs. 3—0—0.



It builds up your Nerves and Muscles. It gives Health, Strength and Energy. If any disease is caused by weakness take this and you will reap its marvellous results. **It is a New Medicine.** (A good and a very agreeable tonic for women.)

இது சகல நரம்புகளுக்கும் முறுக்கேற்றி தசையை வளரச் செய்கிறது. இது ரொம்ப சிரேஷ்டமான மருந்தாகையால் இதை எல்லோருக்கும் தெரிவிக்கிறேன். சகல பெலவீனத்துக்கும் ஏற்ற மருந்து. ஆண்கள்—பெண்கள்—கெர்ப்ப ஸ்திரீகள் எல்லோரும் சாப்பிட்டு சுகம் அடையலாம். இது ஓர் நூதன முறை. மெல்லிய திரேகிகளுக்கும் ஸ்திரீகளுக்கும் ரொம்ப பிரயோஜனமான மருந்து.

☞ மெல்லிய திரேகிகள்—கெர்ப்ப ஸ்திரீகள் சாப்பிடத் தகுந்த சஞ்சீவி.

---

## 45. MAL-AREA. மலேரியா.

PREVENTIVE MEDICINE.

TONIC. டாணிக்.

புட்டி ரூ. 1—0—0. 3 புட்டி ரூ. 2–10–0.



This is a preventive and Tonic for those who live in malarious Districts. This Tonic suits every body. It is a preventive for malarious poison entering your system.

**"Prevention is better than cure."**

மலைநாட்டு வியாதிகள்—பின்னும் மலைக்காச்சல் வரக்கூடிய இடங்களிலுள்ள, நம் தேசத்தவருக்கு இது பிரயோஜனமான மருந்து. இதை சாப்பிட்டு வந்தால் மலைக்காச்சல்கள் வராமல் தடுத்துக்கொள்ளலாம். மலை விஷத்தால் வரும் சகல வியாதியும் வாரது. அவ்வித காச்சலில் அடிபட்டவர்கள் இதைச் சாப்பிட்டால் சீக்கிரம் பெலனடைந்து வேலைசெய்ய ஏதுவாகும். "வருமுன் காப்போன்."





உங்கள் வியாதிக்கு எந்த மருந்து வாங்கி சாப்பிடவேண்டும் என்று தெரியாத விஷயத்தில் தெரிவிக்கவேண்டியது.

## ஸ்திரீகளின் வியாதியைப்பற்றி தெரிவிக்கவேண்டிய குறிப்புகள்.

1. ஸ்திரீயின் பெயர், வயது. கலியாணம் ஆச்சுதா?
2. பிள்ளைகள் எத்தனை—பால் குடிக்கும் கைப்பிள்ளை உண்டா—கடைசி பிள்ளையின் வயது என்ன?
3. சூதகம் சரியான அளவு ஆகுதா—நிறம் குணம் என்ன—வயற்று வலி இன்னம் வேறே குணங்கள் உண்டா?
4. சரீரம் புஸ்டியானதா—அல்லது வரட்சியானதா?
5. தனக்கிருக்கிற வியாதியின் குணங்கள் என்ன? முதலாவது ஆரம்பித்த வியாதி என்ன? இப்போதிருக்கிற குணங்கள் என்ன? வரிசைக்கிரமமாய் விபரம் வேண்டியது. இப்போது இம்சை குணங்கள் யாது? தன்னை பெலவீனப்படுத்தி துன்பப் படுத்துகிறதாக தோணுகிற குறிப்புகள் என்ன? நன்றாகத் தெளிவாய் எழுதவேண்டியது.
6. பெலவீனம் அசதி உண்டா-எவ்வளவு காலமாக-இவை மேற்படி வியாதிக்கு முன்னமே உண்டா-அல்லது இடையிட்டுதானா?
7. படபடப்பு-மயக்கம் உண்டா-வியாதிக்குப்பின் திரேகம் மெலிவு தானா? நெஞ்சில் வாய்வு அடைத்தல் உண்டா?
8. நகக்கண்-கண் பட்டைகளில் ரத்தம் சரியானபடி தோணுதா?
9. வலம் குணம் என்ன-எத்தனை தடவை மலப்போக்கு போகும்? வித்தியாசமிருந்தால் விபரமாய் எழுதவேணும்.
10. நீரின் நிறம்-குணம், அளவு என்ன-இரவில் எத்தனை தடவை போகும்? விபரமாய் எழுதவேணும்.
11. மருந்து அனுப்பவா? எந்த விலாசத்திற்கு? (தபால் அட்ரஸ்)

☞ ஒருவர் பலருடைய வியாதியைப்பற்றி எழுதும்போது பெயர், வயது திட்டமாய் எழுதவேணும்.

# ஆண்கள் வியாதியைப்பற்றி தெரிவிக்கும் குறிப்புகள்.

1. பெயர், வயது, கலியாணம் ஆச்சுதா? பிள்ளைகள் உண்டா?
2. இப்போது தன்க்கிருக்கிற வியாதியின் குணம் என்ன? இந்த வியாதி எவ்வளவு காலமாக இருக்கிறது? எந்த வியாதியிலிருந்து ஆரம்பம்? இந்த வியாதி செய்யும் முக்கிய இம்சைகள் என்ன? இந்த குணங்களில் எது முதலாவது உண்டானது? வியாதியின் குணங்களை வரிசைக் கிரமமாய் தெரியப்படுத்த வேண்டியது.
3. திரேகம் மெலிவா—ஸ்தூல சரீரமா?
4. திரேகத்தின் எந்தப்பாகத்திலாவது வலி, குற்றல் இருக்கிறதா? வீக்கமுண்டா? நடமாட முடியுமா?
5. வியாதிக்குப்பின் திரேகம் எப்படி?
6. நல்ல பசி தீபனம் உண்டா? ஜீரணம் சரியானபடி ஆகிறதா?
7. அசதி, பெலவீனம் உண்டா? இது எவ்வளவு காலமாக இருக்கிறது?
8. கண்பட்டை, நகக்கண் வெளுரி ரத்தமில்லாமல் தோணுதா?
9. புண்-அரையாப்பு-வெள்ளை வந்ததுண்டா? இது எவ்வளவு காலம் துன்பப்படுத்தினது? இப்போது ஏதாவது இருக்கிறதா?
10. தாய், தகப்பன்மாருக்கு இந்த மேகநீர் சம்பந்தமுண்டா?
11. மலப்போக்கு எப்படி? நிறம், குணம் என்ன? எத்தனை தடவை போகும்?
12. நீர் நிறம், குணம், அளவு என்ன? இரவில் படுத்தபின் எத்தனை தடவை போகும்? வேளை ஒன்றுக்கு சுமார் அளவு என்ன?
13. மருந்து அனுப்பவா? எந்த விலாசத்திற்கு? (தபால் விலாசம்)
14. இதற்குமுன் இந்த நோய்க்காக சாப்பிட்ட மருந்துகள் என்ன?

டாக்டர் மதுரம், திருச்சினப்பள்ளி.



# ஸ்திரீகள் அறியவேண்டிய சில குறிப்புகள்.

(1) கெர்பம் மாதவிடைக்கு முன்னும் உண்டாகும், மாதவிடைக்கு பின்னும் உண்டாகலாம்.

(2) அப்படி மாதவிடைக்கு முன் கெர்பம் உண்டானால் மாதவிடைக்கு 4 அல்லது 5 நாளைக்கு முன்னால்தான் உண்டாக இடம் உண்டு அப்படி உண்டானால் அந்த விலக்கம் கொஞ்சம் கண்டு மறைந்துபோகும்; அதாவது ஒரு பகல் அல்லது ஒரு பகலும் இரவும் கண்டு நின்றுபோகும்.

(3) மாதவிலக்கத்துக்குப் பின்னால் கெர்பம் உண்டாகும் பட்சத்தில் அந்த மாதவிலக்கம் பூராவாய் வராமல் தடைபட்டுப்போகும். ஏனென்றால் கெர்பப் பையில் கெர்பத்தினால் மாறுதல்கள் உண்டாகி விலக்கம் உண்டாகாமல் நின்றுபோக போதுமான நாள் ஏற்படுகிறது.

(4) ஐந்து நாள் ஆறு நாள் விலக்கம் காண[illegible]டிய ஸ்திரீகளுக்கு 2 நாள் [illegible]டும் இருந்து தோன்றி நின்[illegible]ந்தால், உடனே அதை கவனித்து அந்த நாளிலிருந்து [illegible]லது அதற்கு 4 அல்லது 5 நாள்களுக்கு முன் கெர்பமு[illegible]டாகியிருக்கிறதாகக் கவனிக்க வேண்டியது.

(5) போனவிலக்கம் வழக்கம்போல கண்டது அதற்கு பிந்தின விலக்கம் தான் காணவில்லை என்று சொல்லுவாரானால், விலக்கத்திற்குபின் கெர்பமுண்டானதாகக் கவனிக்கவேண்டியது. அதாவது போன மாதவிடைக்குப்பின் ஒரு வாரம் அல்லது 12 நாள் கழித்து கெர்பமுண்டானதாகக் கணக்குப் பண்ண வேண்டும். இப்படி கணக்குப் பண்ணிக்கொண்டு பின் காட்டிய அட்டவணையைப் பார்த்தால் குழந்தை பிறக்கும் காலத்தைத் திட்டமாய் கணிக்க ஏதுவாகும்.

(6) முந்தி சொன்னதில் விலக்கத்துக்கு 4 அல்லது 5 நாளைக்கு முன்னமே கெர்பமுண்டானதாகவும், பிந்தின சங்கதியில் விலக்கம் முடிந்தபின் 8–12 நாளைக்குள் கெர்பம் உண்டானதாகவும் கணக்குப்பண்ணி அட்டவணை பார்க்கவும்.

## பிரசவ காலத்தை கணக்கிடும் முறை.

(7) கடைசி விலக்கம் எந்த தேதியில் துவங்கினதோ (முடிந்த தேதியல்ல) அந்த துவங்கின தேதியுடன் 7 நாளைக்கூட்டி பின்பு அதிலிருந்து 3 மாசத்தை பின் தள்ளி பார்த்தால் அந்த மாசம் அந்த தேதிதான் பிரசவ காலமாகும் 'இதில் 4 அல்லது 5 நாள் முன்னே அல்லது பின்னே பிரசவம் இருக்கலாம்.

**உதாரணமாக:**—கடைசி விலக்கம் துவங்கின தேதி ஆகஸ்டு 10 அத்துடன் 7 நாளைச்சேர், ஆகஸ்டு 17 ஆகும். இதிலிருந்து 3 மாசத்தை பின் தள்ளு, மேமீ 17 ஆகும். இந்த மேமீ 17 தான் காலமாகும். இதில் 4 அல்லது 5 நாள் முன்னே பின்னே பிரசவம் ஆகலாம்.

(8) விலக்கம் கண்டு நின்ற தேதியிலிருந்து 278 நாள் கணிக்க வேண்டும்: எப்படி என்றால் விலக்கம் கண்டு நின்ற தேதியிலிருந்து 9 மாசத்தை கூட்டு. [275 நாள் ஆகும். பிப்ரவரி மாசம் நடுவில் வந்தால் 273 நாள் ஆகும்.] கூட்டிவந்த தேதியுடன் 3 அல்லது 5 நாளைக்கூட்டு. அந்த தேதியிலிருந்து 4 அல்லது 5 நாள் முன்னே பின்னே ஆகலாம். உதாரணமாக டிசம்பர் 10உயுடன் 9 மாசம் கூட்டு செப்டெம்பர் 10உ இத்துடன் 4 அல்லது 5 நாளை சேர்த்துக்கொள் செப்டெம்பர் 14 அல்லது 15உ.

(9) பிரசவ காலத்தைக் கணிப்பதற்கு பலவிதமான முறைகள் இருக்கிறது. எல்லாம் மொத்த அடக்கம் என்னவென்றால் 278 அல்லது 280 நாள் தாயின் வயற்றிலே சிசு இருக்கவேணும். அது தான் பூர்ண கெர்ப்பம்.

### பின் வரும் அட்டவணை.

(10) ஒவ்வொரு மாசத்தையும் மூன்று பாகம் பண்ணியிருக்கிறது. முதல் பாகம் குழந்தை உண்டான தேதி, இரண்டாவது பாகம் குழந்தை துடிக்க அல்லது புழங்க துவக்கும் காலம், மூன்றாவது பாகம் பிரசவம் ஆகக்கூடிய காலம்.



| JANUARY. ஜனவரி. | | | FEBRUARY. பிப்ரவரி. | | | MARCH. மார்ச்சு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கெர்ப்பம் உண்டான தேதி. | பிள்ளை புழங்கும் காலம். | பிரசவ தேதி. | கெர்ப்பம் உண்டான தேதி. | பிள்ளை புழங்கும் காலம். | பிரசவ தேதி. | கெர்ப்பம் உண்டான தேதி. | பிள்ளை புழங்கும் காலம். | பிரசவ தேதி. |
| Jan. ஜனவரி | May. மே. | Oct. அக். | Feb. பிப்ர. | June. ஜூன். | Nov. நவம்பர் | March மார்ச்சு. | July. ஜூலை. | Dec. டிசம்பர் |
| 1 | 20 | 8 | 1 | 20 | 8 | 1 | 18 | 6 |
| 2 | 21 | 9 | 2 | 21 | 9 | 2 | 19 | 7 |
| 3 | 22 | 10 | 3 | 22 | 10 | 3 | 20 | 8 |
| 4 | 23 | 11 | 4 | 23 | 11 | 4 | 21 | 9 |
| 5 | 24 | 12 | 5 | 24 | 12 | 5 | 22 | 10 |
| 6 | 25 | 13 | 6 | 25 | 13 | 6 | 23 | 11 |
| 7 | 26 | 14 | 7 | 26 | 14 | 7 | 24 | 12 |
| 8 | 27 | 15 | 8 | 27 | 15 | 8 | 25 | 13 |
| 9 | 28 | 16 | 9 | 28 | 16 | 9 | 26 | 14 |
| 10 | 29 | 17 | 10 | 29 | 17 | 10 | 27 | 15 |
| 11 | 30 | 18 | 11 | 30 | 18 | 11 | 28 | 16 |
| 12 | 31 | 19 | | July. | | 12 | 29 | 17 |
| | June. | | 12 | 1 | 19 | 13 | 30 | 18 |
| 13 | 1 | 20 | 13 | 2 | 20 | 14 | 31 | 19 |
| 14 | 2 | 21 | 14 | 3 | 21 | | Aug. | |
| 15 | 3 | 22 | 15 | 4 | 22 | 15 | 1 | 20 |
| 16 | 4 | 23 | 16 | 5 | 23 | 16 | 2 | 21 |
| 17 | 5 | 24 | 17 | 6 | 24 | 17 | 3 | 22 |
| 18 | 6 | 25 | 18 | 7 | 25 | 18 | 4 | 23 |
| 19 | 7 | 26 | 19 | 8 | 26 | 19 | 5 | 24 |
| 20 | 8 | 27 | 20 | 9 | 27 | 20 | 6 | 25 |
| 21 | 9 | 28 | 21 | 10 | 28 | 21 | 7 | 26 |
| 22 | 10 | 29 | 22 | 11 | 29 | 22 | 8 | 27 |
| 23 | 11 | 30 | 23 | 12 | 30 | 23 | 9 | 28 |
| 24 | 12 | 31 | | | Dec. | 24 | 10 | 29 |
| | | Nov. | 24 | 13 | 1 | 25 | 11 | 30 |
| 25 | 13 | 1 | 25 | 14 | 2 | 26 | 12 | 31 |
| 26 | 14 | 2 | 26 | 15 | 3 | | | Jan. |
| 27 | 15 | 3 | 27 | 16 | 4 | 27 | 13 | 1 |
| 28 | 16 | 4 | 28 | 17 | 5 | 28 | 14 | 2 |
| 29 | 17 | 5 | | | | 29 | 15 | 3 |
| 30 | 18 | 6 | | | | 30 | 16 | 4 |
| 31 | 19 | 7 | | | | 31 | 17 | 5 |

| APRIL. ஏப்ரல். | | | MAY. மே. | | | JUNE. ஜூன். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கெர்ப்பம் உண்டான தேதி. | பிள்ளை பிறக்கும் காலம். | பிரசவ தேதி. | கெர்ப்பம் உண்டான தேதி. | பிள்ளை பிறக்கும் காலம். | பிரசவ தேதி. | கெர்ப்பம் உண்டான தேதி. | பிள்ளை பிறக்கும் காலம். | பிரசவ தேதி. |
| April. ஏப்ரல். | Aug. ஆகஸ்டு. | Jan. ஜனவரி | May. மே. | Sep. செப். | Feb. பிப்ர. | June. ஜூன். | Oct. அக். | March மார்ச்சு. |
| 1 | 18 | 6 | 1 | 17 | 5 | 1 | 18 | 8 |
| 2 | 19 | 7 | 2 | 18 | 6 | 2 | 19 | 9 |
| 3 | 20 | 8 | 3 | 19 | 7 | 3 | 20 | 10 |
| 4 | 21 | 9 | 4 | 20 | 8 | 4 | 21 | 11 |
| 5 | 22 | 10 | 5 | 21 | 9 | 5 | 22 | 12 |
| 6 | 23 | 11 | 6 | 22 | 10 | 6 | 23 | 13 |
| 7 | 24 | 12 | 7 | 23 | 11 | 7 | 24 | 14 |
| 8 | 25 | 13 | 8 | 24 | 12 | 8 | 25 | 15 |
| 9 | 26 | 14 | 9 | 25 | 13 | 9 | 26 | 16 |
| 10 | 27 | 15 | 10 | 26 | 14 | 10 | 27 | 17 |
| 11 | 28 | 16 | 11 | 27 | 15 | 11 | 28 | 18 |
| 12 | 29 | 17 | 12 | 28 | 16 | 12 | 29 | 19 |
| 13 | 30 | 18 | 13 | 29 | 17 | 13 | 30 | 20 |
| 14 | 31 | 19 | 14 | 30 | 18 | 14 | 31 | 21 |
| | Sep | | | Oct. | | | Nov. | |
| 15 | 1 | 20 | 15 | 1 | 19 | 15 | 1 | 22 |
| 16 | 2 | 21 | 16 | 2 | 20 | 16 | 2 | 23 |
| 17 | 3 | 22 | 17 | 3 | 21 | 17 | 3 | 24 |
| 18 | 4 | 23 | 18 | 4 | 22 | 18 | 4 | 25 |
| 19 | 5 | 24 | 19 | 5 | 23 | 19 | 5 | 26 |
| 20 | 6 | 25 | 20 | 6 | 24 | 20 | 6 | 27 |
| 21 | 7 | 26 | 21 | 7 | 25 | 21 | 7 | 28 |
| 22 | 8 | 27 | 22 | 8 | 26 | 22 | 8 | 29 |
| 23 | 9 | 28 | 23 | 9 | 27 | 23 | 9 | 30 |
| 24 | 10 | 29 | 24 | 10 | 28 | 24 | 10 | 31 |
| 25 | 11 | 30 | | | Mar. | | | April. |
| 26 | 12 | 31 | 25 | 11 | 1 | 25 | 11 | 1 |
| | | Feb. | 26 | 12 | 2 | 26 | 12 | 2 |
| 27 | 13 | 1 | 27 | 13 | 3 | 27 | 13 | 3 |
| 28 | 14 | 2 | 28 | 14 | 4 | 28 | 14 | 4 |
| 29 | 15 | 3 | 29 | 15 | 5 | 29 | 15 | 5 |
| 30 | 16 | 4 | 30 | 16 | 6 | 30 | 16 | 6 |
| | | | 31 | 17 | 7 | | | |



| JULY. ஜூலை. | | | AUGUST. ஆகஸ்டு. | | | SEPTEMBER. செப்டெம்பர். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கெர்ப்பம் உண்டான தேதி. | பிள்ளை பிறக்கும் காலம். | பிரசவ தேதி. | கெர்ப்பம் உண்டான தேதி. | பிள்ளை பிறக்கும் காலம். | பிரசவ தேதி. | கெர்ப்பம் உண்டான தேதி. | பிள்ளை பிறக்கும் காலம். | பிரசவ தேதி. |
| July. ஜூலை. | Nov. நவம்பர் | April. ஏப்ரல். | Aug. ஆகஸ்டு. | Dec. டிசம். | May. மே. | Sep. செப். | Jan. ஜனவரி | June. ஜூன். |
| 1 | 17 | 7 | 1 | 18 | 8 | 1 | 18 | 8 |
| 2 | 18 | 8 | 2 | 19 | 9 | 2 | 19 | 9 |
| 3 | 19 | 9 | 3 | 20 | 10 | 3 | 20 | 10 |
| 4 | 20 | 10 | 4 | 21 | 11 | 4 | 21 | 11 |
| 5 | 21 | 11 | 5 | 22 | 12 | 5 | 22 | 12 |
| 6 | 22 | 12 | 6 | 23 | 13 | 6 | 23 | 13 |
| 7 | 23 | 13 | 7 | 24 | 14 | 7 | 24 | 14 |
| 8 | 24 | 14 | 8 | 25 | 15 | 8 | 25 | 15 |
| 9 | 25 | 15 | 9 | 26 | 16 | 9 | 26 | 16 |
| 10 | 26 | 16 | 10 | 27 | 17 | 10 | 27 | 17 |
| 11 | 27 | 17 | 11 | 28 | 18 | 11 | 28 | 18 |
| 12 | 28 | 18 | 12 | 29 | 19 | 12 | 29 | 19 |
| 13 | 29 | 19 | 13 | 30 | 20 | 13 | 30 | 20 |
| 14 | 30 | 20 | 14 | 31 | 21 | 14 | 31 | 21 |
| | Dec. | | | Jan. | | | Feb. | |
| 15 | 1 | 21 | 15 | 1 | 22 | 15 | 1 | 22 |
| 16 | 2 | 22 | 16 | 2 | 23 | 16 | 2 | 23 |
| 17 | 3 | 23 | 17 | 3 | 24 | 17 | 3 | 24 |
| 18 | 4 | 24 | 18 | 4 | 25 | 18 | 4 | 25 |
| 19 | 5 | 25 | 19 | 5 | 26 | 19 | 5 | 26 |
| 20 | 6 | 26 | 20 | 6 | 27 | 20 | 6 | 27 |
| 21 | 7 | 27 | 21 | 7 | 28 | 21 | 7 | 28 |
| 22 | 8 | 28 | 22 | 8 | 29 | 22 | 8 | 29 |
| 23 | 9 | 29 | 23 | 9 | 30 | 23 | 9 | 30 |
| 24 | 10 | 30 | 24 | 10 | 31 | | | July. |
| | | May. | | | June. | 24 | 10 | 1 |
| 25 | 11 | 1 | 25 | 11 | 1 | 25 | 11 | 2 |
| 26 | 12 | 2 | 26 | 12 | 2 | 26 | 12 | 3 |
| 27 | 13 | 3 | 27 | 13 | 3 | 27 | 13 | 4 |
| 28 | 14 | 4 | 28 | 14 | 4 | 28 | 14 | 5 |
| 29 | 15 | 5 | 29 | 15 | 5 | 29 | 15 | 6 |
| 30 | 16 | 6 | 30 | 16 | 6 | 30 | 16 | 7 |
| 31 | 17 | 7 | 31 | 17 | 7 | | | |

| OCTOBER. அக்டோபர். | | | NOVEMBER. நவம்பர். | | | DECEMBER. டிசம்பர். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கெர்பம் உண்டான தேதி. | பிள்ளை புழங்கும் காலம். | பிரசவ தேதி. | கெர்பம் உண்டான தேதி. | பிள்ளை புழங்கும் காலம். | பிரசவ தேதி. | கெர்பம் உண்டான தேதி. | பிள்ளை புழங்கும் காலம். | பிரசவ தேதி. |
| Oct. அக். | Feb. பிப்ர. | July. ஜூலை. | Nov. நவம்பர் | March மார்ச்சு. | Aug. ஆகஸ்டு. | Dec. டிசம்பர் | April. ஏப்ரல். | Sep. செப். |
| 1 | 17 | 8 | 1 | 20 | 8 | 1 | 19 | 7 |
| 2 | 18 | 9 | 2 | 21 | 9 | 2 | 20 | 8 |
| 3 | 19 | 10 | 3 | 22 | 10 | 3 | 21 | 9 |
| 4 | 20 | 11 | 4 | 23 | 11 | 4 | 22 | 10 |
| 5 | 21 | 12 | 5 | 24 | 12 | 5 | 23 | 11 |
| 6 | 22 | 13 | 6 | 25 | 13 | 6 | 24 | 12 |
| 7 | 23 | 14 | 7 | 26 | 14 | 7 | 25 | 13 |
| 8 | 24 | 15 | 8 | 27 | 15 | 8 | 26 | 14 |
| 9 | 25 | 16 | 9 | 28 | 16 | 9 | 27 | 15 |
| 10 | 26 | 17 | 10 | 29 | 17 | 10 | 28 | 16 |
| 11 | 27 | 18 | 11 | 30 | 18 | 11 | 29 | 17 |
| 12 | 28 | 19 | 12 | 31 | 19 | 12 | 30 | 18 |
| | March | | | April | | | May. | |
| 13 | 1 | 20 | 13 | 1 | 20 | 13 | 1 | 19 |
| 14 | 2 | 21 | 14 | 2 | 21 | 14 | 2 | 20 |
| 15 | 3 | 22 | 15 | 3 | 22 | 15 | 3 | 21 |
| 16 | 4 | 23 | 16 | 4 | 23 | 16 | 4 | 22 |
| 17 | 5 | 24 | 17 | 5 | 24 | 17 | 5 | 23 |
| 18 | 6 | 25 | 18 | 6 | 25 | 18 | 6 | 24 |
| 19 | 7 | 26 | 19 | 7 | 26 | 19 | 7 | 25 |
| 20 | 8 | 27 | 20 | 8 | 27 | 20 | 8 | 26 |
| 21 | 9 | 28 | 21 | 9 | 28 | 21 | 9 | 27 |
| 22 | 10 | 29 | 22 | 10 | 29 | 22 | 10 | 28 |
| 23 | 11 | 30 | 28 | 11 | 30 | 23 | 11 | 29 |
| 24 | 12 | 31 | 24 | 12 | 31 | 24 | 12 | 30 |
| | | Aug. | | | Sep. | | | Oct. |
| 25 | 13 | 1 | 25 | 13 | 1 | 25 | 13 | 1 |
| 26 | 14 | 2 | 26 | 14 | 2 | 26 | 14 | 2 |
| 27 | 15 | 3 | 27 | 15 | 3 | 27 | 15 | 3 |
| 28 | 16 | 4 | 28 | 16 | 4 | 28 | 16 | 4 |
| 29 | 17 | 5 | 29 | 17 | 5 | 29 | 17 | 5 |
| 30 | 18 | 6 | 30 | 18 | 6 | 30 | 18 | 6 |
| 31 | 19 | 7 | | | | 31 | 19 | 7 |



பொதுவாக முந்திப்பிந்தி கெர்பம் பிடிப்பதும் பிரசவம் ஆகிறதும் சொற்ப வயதுள்ளவர்களாயிருந்தால் சீக்கிரத்திலும், ஜாஸ்தி வயதுள்ள ஸ்திரீ புருஷர்களாயிருந்தால் தாமதித்து கெர்பம் பிடித்து குறிப்பிட்ட தேதிக்கு பிந்தி பிரசவிப்பார்கள் என்று அறியவும்.

## வயற்றில் குழந்தை இறந்தால் குறிப்புகள்.

(1) அடிவயறு கனத்து கல்போல் இழுக்கும், (2) வயறு குளிர்ந்து போம், (3) லேசான விறையல் தோணும், (4) குழந்தை புரளமாட்டாது, (5) வயறு உறுதியாயும் உருண்டையாயும் தோணுவதற்குப்பதிலாக வயறு தொங்கலாய் சப்பட்டையாய்த் தோணும், (6) புரண்டு படுத்தால் ஒரு பக்கமிருந்து மறுபக்கம் புரண்டு கல்போல விழுவதாக தெரியும், (7) தொப்பிள் வெளியே தள்ளிக்கொண்டிருந்தது உள்ளே இழுத்து குழி விழும், (8) வயறு சிறுத்து தெரியும், (9) மார் வற்றி தொங்கட்டமாய் மாறிவரும், மாரில் பால் இல்லாமல் மறைந்துபோம், (10) கண் குழிந்து கருவழுயிடும், (11) ஆயாசமும் சோர்வும் தோணும், உடனே டாக்டரைக் கூட்டிக்கொண்டுவந்து பிரயத்தனங்கள் செய்யவேண்டும்.

## கேர்பமும், உதிரமும்.

* சில கெர்ப ஸ்திரீகளுக்கு கெர்பத்தோடே மாதாமாதம் லேசாய் விலக்கம் காணும். இதைப்பற்றி பயமில்லை.

சில கெர்ப ஸ்திரீகளுக்கு 7-வது 8-வது மாதத்தில் திடீரென்று உதிரம் காணும் இரண்டொரு நாளில் மறைந்து பின்பு 10 நாள், 15 நாளைக்கொருதடவை சகிக்கமுடியாத உதிரம் காணும், சிலர் இதில் மறிப்பதுமுண்டு. இதின் காரணம் யாதெனில், நஞ்சுக்கொடியானது கெர்ப வாசலில் உற்பத்தியாகி இருப்பதுதான். கெர்பப்பை விரிய விரிய அதின் ஒட்டுவிட்டு உதிரம் பாயும் இப்படி ஜாஸ்தியான உதிரம் கண்டால் உடனே டாக்டரை கொண்டுவந்து பிரசவம் செய்யவேண்டியது. 400, 500-ல் ஒன்றுக்குத்தான் இப்படி சம்பவிக்கும். படுக்கையிலே இருக்கவேணும்.

## கேர்பமும், வலிப்பும்.

மலம்-நீர் குறைந்து வந்தாலும், முகத்தில்-தேகத்தில் சுறப்பு தோணினாலும்-இந்த குறிப்புகள் தோணாமலிருந்து குதியில் அறிப்பு, அல்லது குதி வீங்கி-அல்லது நீர் விடும்போது எரிச்சல் தோணினாலும் இவ்வித குறிப்புகளை முன் ஜாக்கிரதையாக நினைத்து நீரை சோதித்து உடனே நீர் வலம் பிரியவும் அடிக்கடி ஒழுங்கு செய்துகொள்ளவேண்டியது. சற்று கவனியாமல் விட்டால் வலிப்பு வந்துவிடும். பிரசவமும் காலத்துக்கு முந்திக்கொள்ளும்-பிராணகண்டிதமாகிவிடும். தலைப்பிரசவமாயிருந்தால் மேற்சொல்லிய சகல குணங்களும் மகா கெடுதல். முகத்தில் வீக்கமிருந்தால் மாம்சம் சாப்பிடவே கூடாது.

## சாதாரண பிரசவம்.

பிரசவத்துக்குறிய குறிப்புகள் ஆரம்பித்தவுடனே நாம் ஒரு பிரயத்தனமும் செய்யக்கூடாது. மலத்தைக் கழிக்கக்கூடிய பிரயத்தனம் ஒன்று மட்டும் செய்துகொள்ளவேண்டியது. பிரசவம் சுகமாய் ஆகும். சில ஜனங்கள் கஷ்டப்பட்டாப்போல் முக்கி தவிக்கிறதுண்டு. இது ரொம்பக் கெடுதல்.

குருமாத்திரை—டைல்பில்ஸ்—கோரோஜனை மாத்திரை இவைகளை உபயோகம் செய்யலாம்.

பன்னீர்க்குடம் உடைந்து பிரசவ வலி 4, 5 மணி நேரமாய் நின்று போயிருந்தால்மட்டும் உடனே டாக்டரை கூட்டிக்கொண்டுவந்து யோசிக்க வேண்டியது.

☞ தலைப்பிள்ளைகளுக்கு ஒரு நாள் இரண்டு நாள்கூட வலியைப் படுவார்கள். பன்னீர்க்குடம் உடையாதவரை பயமில்லை.

## பிரசவம் ஆனபின் ஸ்திரீகள் கைக்கொள்ளவேண்டிய காரியங்கள்.

**ஆகாரம்:**—முதல் 4 அல்லது 5 நாளைக்கு காய்ச்சலில் படுக்கையாயிருக்கும் மற்ற வியாதியஸ்தருக்கு என்னென்ன ஆகாரம் எப்படி எப்படி கொடுப்போமோ அப்படிதான் கொடுக்கவேண்டியது. ரவைக் கஞ்சி, காப்பி, பால், ரொட்டி, குழைய பொங்கின சாதம் ஒரு பிடியும் கொஞ்சம் தண்ணீரும் இப்படிப்பட்ட ஆகாரங்கள் தான் பிறந்த தினத்தில் முதல் கொடுக்கலாம். ரொம்ப பலவீனமான வியாதியஸ்தருக்கு கோழிக்குஞ்சு பிராத்து, மட்டன் பிராத்து, வெடைக்கறி பிராத்து செய்துகொடுக்கலாம். 4 நாள் ஆனபிற்பாடு வழக்கம்போல் சூடான ஆகாரங்களைச் சாப்பிட்டு வரவேண்டியது.

**சுத்தம்:**—பிரசவித்த அறை வெகு சுத்தமாய் யாதொரு ஈரமில்லாமலிருக்கவேண்டும். தினம் இரண்டு மாத்து, கட்டிக்கொள்ள ஒன்றும், விரிப்புக்கு ஒன்றுமிருக்கவேண்டும். சிறுநீர் போகும்போதெல்லாம் பிரசவித்த பாகங்களையெல்லாம் நன்றாய்க் கழுவவேண்டும். வெந்நீர் தான் உபயோகம் செய்யவேண்டும். சுத்தமே பிரதானம்: சுத்தமிருந்தால் வயிறு பழுக்காது, துர்நாற்றமுண்டாகாது, ஜுரம், ஜன்னி வரமாட்டாது. தினம் மலசுத்தி ஆகப் பார்க்கவேண்டும். இதற்கு குரு பைல் பில்ஸ் பிரயோஜனமானது. கைகண்டது



**படுக்கை:**—மல்லாக்கத்தான் படுக்கவேண்டும். சரிந்து படுக்கவே கூடாது. கெர்ப்பப்பையானது பெரிதாயிருந்து சுருங்கிவரும்போது ஒரு பக்கம் புரண்டு சுருங்கிவிட்டால் அதை திருப்புவது பிரயாசையான காரியமாகிவிடுகிறது. சிலருக்கு அதுமுதல் கெர்ப்பம் தங்காமலேகூட போகிறது. சிலர் வயற்றின் அடிப்பாகத்துக்கு துணிகளைச் சுற்றி அண்டை கொடுத்துக்கொண்டு கெர்ப்பப்பை ஒதுங்காதபடி வெகு ஜாக்கிரதையாய்ப் படுக்கிறதுண்டு. இப்படி ஒரு வாரம் பத்திரமாய் நடந்துகொள்வது உத்தமம்.

## பிரசவத்திற்கு பின் வரும் காச்சல்.

(1) பால் காச்சல் இது சாதாரணம்.

(2) விஷ காச்சல் பின்வரும் குணங்களை கவனிக்கவும்.

## பிரசவத்திற்கு பின் காச்சல்.

மூன்று முதல் வேறு நாளுக்குள் துவக்கம் பிடரிவலி, குளிருடன் காச்சல், தலைவலி, மிகுதியான தாகம், நாக்கு வரட்சி, நாக்கில் கருப்பு, மலக்கட்டு, பின்பு வயற்றோட்டம், அழுக்கு திடீரென்று நின்று தண்ணீர் போல் வரும் அதில் மிகுதியான பெருக்கு நாற்றம், வயற்றில் அமுக்கினால் வலி, தொட்டாலும் வலி, வயற்றில் காற்றடைப்பு, மார் வற்றி பால் மறைந்து போகும். கண்டிப்பான காச்சல் இருந்து ஒரு வாரத்துக்குள் மரணம்: 10 நாளைக்குமேல் போனால் கொல்லாது. சிகிச்சை:—உடனே கெர்ப்பப்பையை தினம் இரண்டு அல்லது மூன்று தடவை தண்ணீர்விட்டு கழுவ ஏற்பாடு செய்யவேணும். ஒவ்வொரு ஆகாரத்துடனும் 2 கரண்டி பிராந்தி அல்லது சாராயம் கொடுக்கவேணும். தலையில் ஐஸ்கட்டி அல்லது நெற்றியில் தண்ணீரில் துணியை நனைத்து விடாமல் போட்டுவரவேணும். மற்ற மருந்துகளும் கொடுக்கவேணும். டாக்டரைக்கொண்டு பிரயத்தனங்கள் செய்தால் நல்லது.

ஸ்திரீகளுக்கு மிகவும் அருமையான மருந்து குரு சந்தான சொர்ணம் என்று அறியவும்.

வயறு பழுத்தால், ஜாஸ்தியான மாதவிலக்கம், சூதக வயற்றுவலி சகலத்திற்கும் ரொம்ப அருமையானது.

பெற்றோர்கள் பிள்ளைகள் விஷயமாய் அறியவேண்டிய குறிப்புகள், பல வைத்திய குறிப்புகள், அதற்குறிய பரிகாரங்கள் அடங்கிய புஸ்தகம் வேண்டியவர்களுக்கு அனுப்பலாம்.

விலை அணா 2.



14.8429
சென்னை-600 008.

## கவனியுங்கள்.

1. மருந்துக்காக ஆர்டர் செய்யும் நண்பர்கள் தெளிவாய், திட்டமான விலாசத்துடன் எழுதக் கேட்டுக்கொள்ளுகிறேன். கூடியமட்டும் கூட்டெழுத்துகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இங்கிலீஷில் அல்லது தமிழில் எழுதலாம்.

2. தபாற்கூலியும், பாக்கிங்கூலியும் பிரத்தியேகம்.

3. சிங்கப்பூர், பினங்கு, மலேயா நாடுகளுக்கும், மற்றும் வி. பி. இல்லாத விடங்களுக்கும் முன் பணமில்லாமல் மருந்து அனுப்பப்படமாட்டாது.

4. பதில் வேண்டியவர்கள் தபால் முத்திரை அனுப்பவேண்டியது.

5. கமிஷன் ரூ. 10-க்கு ஒன்று கொடுக்கப்படும். ஒரே தடவையில் ரூ. 25-க்கு மேல்கொண்ட கிரயத்துக்கு வாங்குபவர்களுக்கு விசேஷ கமிஷன் கொடுக்கப்படும். எழுதி கேட்டுக்கொள்ளலாம். மொத்த விலையில்தான் கமிஷன். டசன் விலைப்படி கொடுத்து அதன்பேரில் 2-வது கமிஷனும் கொடுக்கப்படமாட்டாது.

6. ஒவ்வொரு தடவை மருந்துகளுக்கு எழுதும்போதும் விலாசம், வியாதியின் குறிப்புகள் திட்டமாய் எழுதவேணும். ஒருமுறை மருந்து சாப்பிட்டபின் இருக்கிற குணங்கள் திட்டமாய் எழுதினால் நல்லது. விலாசம் முழுவதுமாய் தெரியாவிட்டால் மருந்து அனுப்பப்படமாட்டாது. கடிதம்தோறும் விலாசம் அவசியம். முன் வாங்கிய மருந்தைப்பற்றி எழுதும்போது முன் லட்டரின் நம்பர் ரொம்ப அவசியம். நம்பரை காட்டி எழுதவேணும்.

7. கொழும்பு, பர்மா, சிங்கப்பூர், பினங்கு முதலானவிடங்களிலிருந்து எழுதும் நண்பர்களில் சிலர் தெளிவான விலாசம் எழுதாததினால் பார்சல்கள் திரும்பி நஷ்டமுண்டாகிறது. ஆகவே தங்கள் விலாசத்தை தெளிவாயும், எந்த தபாலாபீசை சேர்ந்தது என்றும் திட்டமாய் எழுதவேணும்.

டாக்டர் ஏ. மதுரம்,
குருமருந்துசாலை, திருச்சினாப்பள்ளி.



# GURU MEDICAL HALL AND LABORATORY,



TRICHINOPOLY.



டாக்டர் எ. மதுரம்,

குருமருந்துசாலை,

திருச்சினாப்பள்ளி.